
இன்னிசைச் சிறப்பிதழ்
கல்கி
KALKI 23.12.90 ரூ. 2.50
நடனக் கலைக்கு ஒரு ராஜரத்தினம்


என் தாத்தா – இந்த வயதிலும் என்ன துடிப்பு !
தாத்தாவுக்கு வயதாகிக் கொண்டே போகிறது. உடம்போட செயலாற்றல்
குறைந்து கொண்டே வருகிறது. அவர் இப்போது குறைவாகச் சாப்பிடுகிறார்.
அவர் தனது ஊட்டச்சத்துக்களை காம்ப்ளான் மூலம்
நிறைவு செய்கிறார்.
எளிதாக ஜீரணிக்கக்கூடிய காம்ப்ளான், உங்கள் உடலுக்குத் தேவையான 23 ஊட்டச் சத்துணவுகளைக் கொண்டதாகும். தேய்ந்த உடல் திசுக்களைப் புதுப்பிப்பதற்கான பால் புரதம், சக்தி பெறுவதற்கான கார்போஹைட்ரேட்டுகள் மற்றும் கொழுப்புச் சத்து, உடல் நலத்திற்கான வைட்டமின் மற்றும் தாதுக்கள் ஆகியவற்றை கொண்டதாகும், காம்ப்ளான்.
Complan
23
மூலாதார
சத்துணவுகள்
திட்டமிட்ட விகிதங்களில்
பால் சேர்க்கத் தேவையில்லை.
காம்ப்ளான்®
திட்டமிட்ட பரிபூரண உணவு

GX/47/213/TML

இசையுலகில் இளைஞர்கள்:

''பிரச்னைகள் இருந்தாலும் பிரகாசிக்க முடியும்...''

வளரும் இளம் கலைஞர்களான நீரஜா, சங்கர் ஸ்ரீநிவாஸ், கல்பனா கிஷோர், திருவாரூர் சுவாமிநாதன், சுபா கணேசன், களக்காடு ஸ்ரீநிவாசன் ஆகியோர் பங்கேற்ற கலந்துரையாடலில் வெளியான கருத்துக்கள் :



• திருவாரூர் சுவாமிநாதன்



• நீரஜா



• களக்காடு ஸ்ரீநிவாசன்

''பல இளைஞர்களுக்கு இன்று வாய்ப்புக்கள் தரப்படுவது உண்மைதான். ஆனால் அவர்கள் பெரும்பாலும் செல்வாக்குப் படைத்த பிரமுகரால் அறிமுகம் செய்யப் படுகிறார்கள். சபா நிர்வாகிகளுக்குத் தனிப் பட்ட முறையில் தெரிந்தவர்களாக இருக் கிறார்கள்... இத்தகைய சிபாரிசுகள் இன்றி வாய்ப்பு தானாகவே வருவது ரொம்ப அரிது. நான் ஒரு சபாவுக்கு விண்ணப்பித்து, எனக்குக் கிடைத்த விமர்சனங்களை இணைத்து அனுப்பியிருந்தேன். ஆனால் சபா நிர்வாகி ஒருவர் என்னிடம் கேட்டார்: ''நீ ஏன் எனக்கு போன் பண்ணிப் பேச வில்லை?'' என்று. ஆக, விண்ணப்பிக்கும் முறை அமுலில் இருந்தாலும் வெறுமே விண்ணப்பித்து விட்டால் மட்டும் வாய்ப்புத் தருவார்கள் என்று சொல்ல முடியாது.''

''இளைஞர்கள் சந்திக்கும் இன்னொரு பெரிய பிரச்னை கடுமையான விமர்சனங் கள். ஒரு கச்சேரியில் கடைசி நிமிஷத்தில் வயலின் வித்வான் வர முடியாமல் போக, ஓர் இளம் வயலின் கலைஞர் அழைக்கப் பட்டார். குறுகிய கால அறிவிப்பில் வந்து அவர் வாசித்ததைப் பாராட்ட வேண்டும். ஆனால் இந்தப் பின்னணி தெரிந்தோ தெரி



• சுபா கணேசன்



• சங்கர் ஸ்ரீநிவாஸ்



• கல்பனா கிஷோர்

யாமலோ விமர்சகர் 'வயலினும் மிருதங்கமும் பாட்டின் தரத்தோடு ஈடே கொடுக்கவில்லை' என்று எழுதி விட்டார்! இப்படி நெகடிவ் ஆக, எழுதாமல் வயலின், மிருதங்கக் கலைஞர்கள் இன்னின்ன அம்சங்களில் அபிவிருத்தி செய்யலாம் என்று எழுதலாம் அல்லவா?''

''இன்னொரு சந்தர்ப்பத்தில் ஓர் இளம் கலைஞரின் கச்சேரிக்கு ஒரே நாளிதழில் இரண்டு விமர்சகர்கள் அடுத்தடுத்து விமர்சனம் எழுதியிருந்தார்கள். பல இளைஞர்கள் பங்கேற்ற அந்த இசை விழாவில் டபுள் விமர்சனம் பெற்ற பாக்கியசாலி அவர் ஒருவரே!''

''அதாவது பரவாயில்லை. ஒரு விமர்சகர் என்னிடம் நேரடியாகவே வந்து முகத்தில் அடித்த மாதிரி சொல்லி விட்டார். 'நீ முதலில் உன் குருவை மாற்றிக் கொள்! அப்படியே அவர் மாதிரியே பாடுகிறாய். உனக்கென்று ஒரு பாணி வேண்டாமா?'' என்று அவர் சொன்னதைக் கேட்டுக் கொஞ்சம் நேரம் ஆடிப் போய் விட்டேன். பிறகுதான் யோசித்துப் பார்த்தேன். பத்தொன்பது, இருபது வயசிலேயே நமக்கென்று ஒரு பாணி வந்து விடுமா? பாடப் பாடத்தானே வரும் என்று என்னை நானே சமாதானப்படுத்திக் கொண்டேன்...''

''பாடுவதற்கும் வாசிப்பதற்கும் மேடை கிடைத்தாலும் நாலு பேர் கேட்டால்தானே நமக்குச் சந்தோஷம்! ஜூனியர் வித்வான் ன் கச்சேரி என்றால் பல சமயங்களில் ஹால் காலியாக இருக்கிறது...''

''அது எந்த ஹால் என்பதைப் பொறுத்தும் கூட்டம் வரும். அதே கச்சேரியைக் கொஞ்சம் 'பிரஸ்டீஜியஸ்' அரங்கில் நடத்தினால் கூட்டம் வருகிறது!''

''கூட்டம் வருவதும் வராததும் ஒருபுறமிருக்கட்டும். சில சபாக்களில் மூன்று மணிக்குக் கச்சேரி. நாம் இரண்டே முக்காலுக்குப் போய் அரங்க வாசலில் இறங்கினால் சபா நிர்வாகிகள் கூட அங்கே இருப்பதில்லை! மைக்காரர் மட்டும் இருப்பார். ஒரு பக்கமாகச் சுருட்டி வைத்திருக்கும் விரிப்பை நாமே எடுத்து மேடையில் விரித்துக் கொள்ள வேண்டும். சில சமயம் அந்த விரிப்பும் இருக்காது...''

''சீனியர் வித்வான்கள் கச்சேரியின் போது நிர்வாகிகள் இப்படிச் செய்வார்களா? சபாக் காரியதரிசியால் முடியா விட்டால் யாராவது பொறுப்புள்ள நபரை யாவது அரங்கில் இருக்கச் செய்து கலைஞர்களை வரவேற்கலாம்!''

''இளம் வித்வான்களின் தன்னம்பிக்கையை வளர்க்கத்தான் இன்னும் அதிகமான முயற்சிகளும் கவனமும் தேவை. சபாவின் முக்கியஸ்தர்கள் ஓரிருவர் உட்கார்ந்து

கச்சேரியைக் கேட்டால் இளம் வித்வானுக்கு நூறு பேர் கேட்ட சந்தோஷம் ஏற்படும்...''

''இன்னொன்றும் செய்யலாம். ஜூனியர் வித்வானின் கச்சேரியைக் கேட்க சீனியர் வித்வான் ஒருவரை அழைக்கலாம். இவர் தலைமை தாங்கிப் பேச வேண்டும் என்று அவசியமில்லை. கச்சேரியைக் கடைசி வரை கேட்டு இளம் கலைஞருக்கு உபயோகமான அறிவுரைகள், ஆலோசனைகள் வழங்கலாம்.''

''மதுரை, திருச்சி, போன்ற வெளியூர்களுக்குச் சென்றால், அங்குள்ள சபா நிர்வாகிகள் நம்மை கௌரவமாக நடத்துகிறார்கள். இங்கு சென்னையில் ஒரு சபாவில் என்னைக் கூப்பிட்டு ஒரு கச்சேரி சீசனுக்கு நாலு அல்லது ஐந்தாயிரம் ரூபாய் தந்தால் சான்ஸ் தருகிறோம் என்றார்கள். நாமே பணம் தந்து விட்டு நாமே பாடுவதா!''

''உங்களால் தர முடியாவிட்டால் வேறு யாரிடமாவது கேட்டு வாங்கிக் கொடுங்கள்' என்றும் சிலர் சொல்வார்கள்...''

''வெளிநாடுகளிலிருந்து அழைப்பு வந்தால் அவர்கள் நம்மை 'ஸ்பான்ஸர்' செய்வார்கள். இங்கு நம்மை நாமே 'ஸ்பான்ஸர்' செய்து கொள்ளணும்! அப்புறம் அவர்கள் நமக்குச் சன்மானமாகத் திருப்பித் தருகிற நூறு ரூபாயை மூன்றாகப் பிரித்துக் கொடுத்து விட்டுத் தம்பூரா போடுகிறவருக்கு நாம் கையை விட்டுப் பணம் தர வேண்டும்!''

''சன்மானம் விஷயத்தில் ரேடியோ, டீ.வி. எவ்வளவோ மேல். குறைவான நேரத்துக்குக் கூட, கௌரவமான சன்மானம் தருகிறார்கள்.''

''டீ.வி.யில், வளரும் கலைஞர் நிகழ்ச்சியில் பல புதுப்புது முகங்களுக்கு வாய்ப்பு தரப்படுகிறது.''

''நான் ரேடியோ ஆடிஷனுக்குப் போய் இரண்டு வருடங்கள் ஆகப் போகின்றன; இன்னும் முடிவே சொல்லவில்லை அவர்கள்...!''

''உங்களில் சிலருக்கு ஏற்பட்டது போல் சபாக்களில் கச்சேரி வாய்ப்புப் பெற பணம் கொடுக்க வேண்டிய அனுபவம் எனக்கு ஏற்படவில்லை...''

''எனக்கும் அத்தகைய அனுபவம் ஏற்படவில்லை. ஆனால் சங்கீதத்தைத் தொழிலாகக் கொண்டு காலம் தள்ள முடியாது என்று உணர்கிறேன். கல்கத்தாவில் Music and Dance Fraternity என்ற அமைப்பை ஏற்படுத்தி, இசை — நடனக் கலைஞர்களை A.B என்று தரம் பிரித்து, அவரவர் கலைத் திறன், படிப்பு, பொருளாதாரப் பின்னணிக்கேற்ப நல்ல வேலையில் அமர உதவுகிறார்கள். வித்வத் வேறு, பிராபல்யம் வேறு. எனவே, இதைப் போன்ற உதவியினால் ஒரு நல்ல கலைஞருடன் கலையும் காப்பாற்றப்படும்.''

''நீங்கள் இப்படிச் சொல்கிறீர்கள். ஒரு சபாவில் எனக்கு நேர்மாறாக ஓர் அனுபவம். 'நீங்கள் நிரந்தர வேலையில் இருப்பதால் உங்களுக்கு இந்த வருடம் வாய்ப்புத் தர முடியாது' என்று சொல்லி விட்டார்கள்!''

''வேறு சில சபாக்களில் திரும்பத் திரும்ப ஒரே இளம் கலைஞருக்குத்தான் கச்சேரி செய்ய வாய்ப்புத் தருகிறார்கள்...''

''பலமுறை மேடையேறிப் பாடாமல் எப்படி அவர் வளர முடியும்?''

''சென்னையில்தான் எத்தனையோ சபாக்கள் உள்ளனவே, அவை எல்லாம் மாறி மாறி எல்லாக் கலைஞர்களுக்கும் வாய்ப்புத் தரலாம் அல்லவா?''

''சபாக்களுக்கு டைம் டேபிள் போட்டுத் தரவும் இப்படியிப்படித்தான் நிகழ்ச்சிகள் நடக்க வேண்டும் என்று சொல்லவும் நாம் இங்கு கூடவில்லை... நம் நலனுக்காக இப்போது பல இளைஞர் அமைப்புக்களே தனியாக இயங்குகின்றன. இவற்றின் முயற்சியால் இளைஞர்களின் தரமுள்ள இசைக்கு நிச்சயமாக மேடை கிடைக்கிறது.''

''இந்த அமைப்புக்களிலும் அங்கத்தினர்களானால்தான் வாய்ப்புத் தருவார்களாமே?''

''அங்கத்தினர் ஆவதற்குக் குறைந்த கட்டணம்தான். சங்கம் என்று ஆரம்பித்தால் அதை நிர்வகித்து நடத்தப் பணம் வேண்டுமல்லவா?''

''இருந்தாலும், விளையாட்டுத் துறை இளைஞர்களுக்குக் கிடைக்கும் அளவுக்குச் சலுகைகளும் இட ஒதுக்கீடுகளும் நம் கலைத் துறைக்குக் கிடையாது...''

''நான் வேறொரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். ஒரு சபாவில் ஒரு சீசனில் கச்சேரி செய்யும் இளைஞருக்கு அதே சீசனில் இரண்டு மூன்று கச்சேரிகளை இலவசமாகக் கேட்கவாவது வாய்ப்புத் தரலாம். இன்றைக்கு நாம் கச்சேரி செய்துவிட்டு நாளைக்குக் குருவின் கச்சேரிக்குப் போனால், 'டிக்கெட் எங்கே?' என்று கேட்பார்கள்....!''

''எத்தனை பிரச்னைகள் வேண்டுமானாலும் இருக்கட்டும். சந்திப்போம். உறுதியுடன் முயற்சி செய்தால் பிரகாசிக்க முடியும்.''

''உண்மைதான், பிறர் ஒத்துழைப்பு இல்லை என்றாலும் நம் சங்கீதம் நமக்கு ஒத்துழைப்புத் தந்தால் போதும். நிச்சயம் பிரகாசிப்போம்!''

தொகுப்பு: **சீதா ரவி**

படங்கள்: **யோகா**



* டி. கே. ஜயராமன் — தமது மாணவர்களுடன்.

இளம் கலைஞர்கள் பார்வையில் விருது பெறும் விற்பன்னர்கள்



* உன்னி கிருஷ்ணன்

சங்கீத, நாட்டிய கலா சிகாமணி எஸ். கே. ராஜரத்தினம் பற்றி அடையாறு லக்ஷ்மணனின் மாணவி வித்யா வீரராகவன் கூறுகிறார்:

என் தோழிகள் அனுராதா ஜகன்னாதன், பிரியா கோவிந்த் ஆகியவர்கள் ஸ்வாமிமலை ராஜரத்தினம் அவர்களிடம் நாட்டியம் கற்றுக் கொள்கிறார்கள். தோழிகள் பிராக்டீஸ் செய்யும்போது அருகில் இருந்து பார்த்திருக்கிறேன் குருவின் முத்திரை தனியாகத் தெரியும். தனித்துவம் வாய்ந்த நளினமான அட்டமி, பின்னல் நடை, துரிதமான தீர்மானங்களின் முடிவில் சிற்பம் போல் அசையாமல் நிற்பது — இதெல்லாம் அவர் பாணியின் அழகான தனி அம்சங்கள்.

ராஜரத்தினம் அவர்கள் நட்டுவாங்கம் செய்யும் கச்சேரிகளில் ஆரம்பமே களை கட்டி விடும். நிகழ்ச்சி முழுவதும் தொய்வில்லாமல் இருக்கும். அவர் சொல்லுக்கட்டுச் சொல்லும் அழகே தனி. அதிலேயே பல பாவங்கள் வெளிப்படும். புதிய உருப்படிகளைத் தேர்ந்தெடுத்துப் பிரமாதமாக அமைத்துத் தருவதிலும் வல்லவர். பாரதியார் இயற்றிய 'கண்ணன் மன நிலையை' பாட்டை வர்ணமாக ராகமாலிகையில் அமைத்துத் தந்திருக்கிறார். அவர் மாணவிகள் குழு இப் பாட்டுக்கு ஆடும் போதும் சரி தனியாக ஒரு மாணவி ஆடும் போதும் சரி மிகவும் எடுப்பாக இருக்கும்.

மாணவிகளைக் கச்சிதப்படுத்தி, மெருகேற்றிய பின்னரே மேடையேற அனுமதிக்கிறார். அவர்கள் ஆடும் மிகச் சிறிய 'ஜட்டம்' கூட கச்சிதமாக இருக்கும். உடையும் ஒப்பனையும் மிதமாகவும் அடக்கமாகவும் இருக்கும். தலையில் வைக்கும் பூவைக் கூட கவனமாகப் பந்து போல் செண்டாக வைத்திருப்பார்கள்.

இவ்வளவிலும் குரு என்கிற முறையில் மிகுந்த கவனம் செலுத்தி மணி மணியான மாணவிகளை உருவாக்கி நாட்டிய உலகில் தமக்கென்று ஒரு தனியிடம் தேடிக்கொண்டிருக்கும் ராஜரத்தினம் அவர்களை மதிப்பு கலந்த வியப்புடன் நாங்கள் வாழ்த்தி வணங்குகிறோம்.

விருது வழங்கும் அமைப்பு:

இந்தியன் ஃபைன் ஆர்ட்ஸ் சொஸைட்டி.

அட்டையில்: குரு சுவாமிமலை ராஜரத்தினத்துடன் மாணவிகள் ஷோபா, நிருபமா, உமா மஹேச்வரி.

வண்ணப்படம், படங்கள்: **யோகா.**

இசைப் பேரறிஞர் வலையப்பட்டி சுப்ரமண்யம் பற்றித் தவில் வித்வான் கோவிலூர் பழனிவேல் கூறுகிறார்:

நான் சிறு வயது முதல் வலையப்பட்டி அவர்களின் வாசிப்பைக் கேட்டு ரசித்து வருகிறேன். அவர் கைகள் எழுப்பும் நாதம் போல் வேறு எந்த தவிலிலும் கேட்க முடியாது!

தவிலை ராக்ஷஸ வாத்தியம் என்று சொல்வதுண்டு. ஒரு சிறு தவறு கூட ஏற்படாமல் அதைக் கட்டுக்குள் வைத்து வாசிப்பது மிகவும் கடினம். அந்த அப்பழுக்கில்லாத லய சுத்தம் வலையப்பட்டி அவர்களுக்குக் கைகூடியிருக்கிறது. எந்த தாளத்தை எடுத்துக்கொண்டாலும் அனாயாசமாக வாசிப்பார்; எந்த நாதஸ்வரக் கலைஞருடனும் அனுசரணையாக வாசிப்பார்.

சங்கீதத்தில் அவ்வளவாக ஈடுபாடு இல்லாதவர்கள் கூட 'வலையப்பட்டி தவிலா?' என்று நின்று கேட்கும் அளவுக்கு அவரும் அவர் வாசிப்பும் பிரபலம். நாதஸ்வரக் கச்சேரிக்குச் செல்பவர்கள் 'யார் கச்சேரி?' என்று மட்டும் கேட்காமல் 'யார் தவில்?' என்றும் கேட்கும் அளவுக்கு அந்த வாத்தியத்துக்கு ஒரு கௌரவத்தை ஏற்படுத்தியிருக்கிறார் என்றால் மிகையில்லை.

அவருடைய கடினமான உழைப்பினாலும் அவர் பெயரிலேயே உள்ள முருகப் பெருமான் அவருக்கு அருளியிருக்கிற தெய்வாம்சத்தினாலும்தான் இவ்வளவு உன்னதமான நிலையை அவர் அடைந்துள்ளார். எங்களுக்கு வழிகாட்டியாக உள்ள அவருக்கு மேன்மேலும் பல விருதுகள் வர வேண்டும்.

விருது வழங்கும் அமைப்பு:

தமிழ் இசைச் சங்கம்

நிருத்திய சூடாமணி கலாநிதி நாராயணன் பற்றி நிர்மலா ராமச்சந்திரனின் மாணவி பவித்ரா ஸ்ரீநிவாஸன் கூறுகிறார்:

கலாநிதி அவர்கள் நாட்டியம் பற்றிய செயல்முறை விளக்கம் அளித்த ஒரு நிகழ்ச்சியை டி.வி.யில்தான் முதலில் பார்த்தேன். அப்போது முதல் நான் அவருடைய விசிறியாகி விட்டேன். எனக்கு நாட்டியத்தில்



ராஜரத்தினம்



வித்யா



வலையப்பட்டி



கோவிலூர் பழனிவேல்

பாவத்தில் அதிக ஆர்வம் உண்டு. அந்த ஆர்வம் இன்னும் அதிகரித்து ஆழமான ஈடுபாடாக மாறுவதற்கு மறைமுகமாக உதவியவர் கலாநிதி அம்மாதான்.

டி.வி. நிகழ்ச்சியைப் பார்த்துச் சில தினங்களுக்குப் பிறகு, Fine Arts Foundation என்ற அமைப்பு நடத்திய கருத்தரங்கில் கலாநிதி அவர்கள் அஷ்ட நாயிகைகள் பற்றிச் செயல்முறை விளக்கம் அளித்தார். அந்த நிகழ்ச்சிக்குச் சென்றிருந்தேன். ஒரு குறிப்பிட்ட பாவத்தை விளக்கிய அவர், அதற்கு உதாரணமாக 'அதுவும் சொல்லுவார்' என்ற வர்ணத்தைச் சொல்லி, அதைப் பார்வையாளர்களுள் ஒருவர் ஆடிக் காட்ட முடியுமா? என்றும் கேட்டார். தமது மாணவிகளுள் ஒருவரே அதனைச் செய்து காட்டக் கூடாது; வேறு நாட்டிய குருவின் மாணவி தான் செய்து காட்ட வேண்டும் என்பதில் மிகவும் கவனமாக இருந்தார். அத்தருணத்தில் அவருடைய அழைப்பை ஏற்று அவர் முன்னிலையில் ஆடிக் காட்டும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது.

அதற்குப் பிறகு கலாநிதி அவர்களின் செயல்முறை விளக்கம் எங்கு நடந்தாலும் நான் ஆஜராகி விடுவேன்.



* கலாநிதி



* பவித்ரா

மிகக் கடினமான அபிநயங்களைக் கூட உயிரோட்டமுள்ள வகையில் வழங்கும் அவரது ஆற்றலும், பாவங்களில் அவர் காட்டும் நுணுக்கமான வேறுபாடுகளும் இன்றைய இளம் கலைஞர்கள் எல்லோரும் கவனித்துக் கூடிய வரையில் பின்பற்ற வேண்டியவை.

விருது வழங்கும் அமைப்பு:

கிருஷ்ண கான சபா

சங்கீத கலாநிதி டி.கே. ஜயராமன் பற்றி சாவித்ரி சத்யமூர்த்தியின் மாணவர் உன்னிகிருஷ்ணன் கூறுகிறார்:

புதுப் புதுப் பாட்டுக்களை எடுத்துக் கொண்டு அவற்றுக்குத் தமது பாணியின் மூலம் மெருகேற்றுவதில் டி.கே. ஜயராமன் சாருக்கு இணையே கிடையாது என்று சொல்லலாம். அதே போல் புதுப் புது மாணவர்களையும் தமது மேற்பார்வையில் வளர்த்துப் பல இளம் கலைஞர்களையும் இசையுலகுக்கு வழங்கியிருக்கிறார். மாணவர்களைக் கச்சேரிக்குத் தயார் செய்வதில் வல்லவர்; கச்சேரிகளில் உடன் பாடும் சிஷ்யர்களை வெளிப்படையாக ஊக்குவிப்பவர்.

எங்களைப் போன்ற இளைஞர்கள் ஜயராமன் சாரிடம் அவசியம் கற்றுக் கொள்ள வேண்டிய விஷயம் ஒரு பாட்டை எப்படி உணர்ச்சியுடன் பாவமாகப் பாடுவது என்பதுதான். தீக்ஷிதர் கிருதியின் தத்துவார்த்தமான ஆழத்துடன் ஒன்றுவது போலவே பாபநாசம் சிவனின் ஜனரஞ்சகமான எளிய கிருதிகளையும் அனுபவித்துப் பாடுவார் டி.கே.ஜே. உச்சரிப்பு வெகு சுத்தம். கீர்த்தனையைப் படிப்படியாக விரிவுபடுத்தி வழங்கும் பாணி வெகு அழகு. சுருக்கமாக ராகம் பாடினாலும் அதன் ஜீவனைப் பிழிந்து தரும் வல்லமை படைத்தவர். புகழ்பெற்ற மூத்த சகோதரியுடன் ரொம்ப நாட்கள் பாடியவர் என்றாலும் இவருக்கென்று ஒரு பாணி இருக்கிறது.

மிக அதிகமான இளம் சிஷ்யர்களை உருவாக்கிய இவருக்கு இவ்வாண்டின் சங்கீத கலாநிதி விருது வழங்கப்படுவது குறித்து இளைஞர்களான எங்களுக்குத்தான் அதிகப் பெருமை.

விருது வழங்கும் அமைப்பு:

மியூஸிக் அகாடமி

பேட்டி: எஸ். ஆர்.



நெருங்கிய உறவில் திருமணம் செய்துகொள்ளலாமா?

டாக்டர் பதில்கள்:

● ஈ. டி. விஜயகுமார், ஈரோடு

நெருங்கிய உறவில் திருமணம் செய்தால் நோய்கள் வர வாய்ப்புள்ளதா?

●● **டாக்டர் ருக்மிணி சௌரிராஜன்:**

நம் நாட்டு வழக்கப்படி, பெண் தன் மாமாவைத் திருமணம் செய்து கொள்ளுவதும், அத்தை மகன் அல்லது மாமா மகளைத் திருமணம் செய்து கொள்ளுவதும் ரொம்ப சகஜமான ஒன்று. ஆனால் மருத்துவ ரீதியாய்ப் பார்க்கும் போது, இத்தகைய திருமணங்கள் தவிர்க்கப்பட வேண்டியவை என்றே சொல்லுவேன். இருவரது குடும்பத்திலும், ஏதாவது ஒன்றிலாவது, பரம்பரையாய் வரும் நோய் ஏதானும் உண்டு எனில், அந்த நோய் அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைக்கும் வருவதற்கு வாய்ப்பு உண்டு. வராமல் போகவும் சாத்தியமுண்டு என்பது உண்மையே. முன்னதற்கே வாய்ப்புகள் அதிகம். நெருங்கிய உறவில் திருமணம் செய்து கொள்ளும் தம்பதிகளுக்குத் தலை பெருத்த குழந்தை அல்லது மண்டைப் பகுதி சரியானபடி வளர்ச்சியடையாத குழந்தை இப்படிப் பிறக்கவும் வாய்ப்புண்டு. சொத்து பிரிந்து போய்விடக் கூடாது. உறவு விட்டுப் போய் விடக் கூடாது போன்ற காரணங்களுக்காக நெருங்கிய உறவில் திருமணம் செய்து கொள்ளாதீர்கள் என்பதுதான் என் அறிவுரை.

● **ஆர். மாதவராமன், கிருஷ்ணகிரி.:**

எக்சிமா போன்ற தோல் வியாதிகளைக் குணப்படுத்த மீன் எண்ணெய் உதவுகிறது என்பது எந்த அளவுக்கு உண்மை?

● **டாக்டர் எஸ். அனந்தன், சென்னை — 17:**

எக்ஸிமாவில் பலவகை உண்டு. புரையோடிய, தீவிரமான எக்ஸிமாவுக்கு எண்ணெயே கிட்டே வரக் கூடாது. தோல் வரண்ட நிலையுடன் நீடிக்கும் எக்ஸிமாவுக்கு எண்ணெய் தடவினால் இதம் கிடைக்கக்கூடும். டாக்டரைக் கலந்தாலோசித்தபின் பயன்படுத்துவது நல்லது.

● **அ. முஸ்தபா, தக்கோலம்:**

பிளாஸ்டிக் சர்ஜரி செய்யப்படும் உடலின் ஒரு பகுதி வழக்கமான முறையில் செயல்படுமா?

● **டாக்டர் மாதங்கி ராமகிருஷ்ணன், சென்னை — 17.**

முன்பெல்லாம் பிளாஸ்டிக் சர்ஜரி மூலம் 'ஒட்ட வைத்த' விரலை ஆட்டவோ அசைக்கவோ முடியாமல்தான் இருந்தது. ஆனால் இன்று அதே அறுவைச் சிகிச்சை மூலம் 'நார்மலாகச்' செயல்படும் விரலை அளிக்க முடியும்.

நம் உடலில் மிக வேகமாக வளரும் பகுதிகளுள் ஒன்று தோல். இரண்டே வாரங்களில் நன்றாக வளர்ந்துவிடும். பிளாஸ்டிக் சர்ஜரியின் போது உடலின் ஒரு பகுதியுலுள்ள தோலைத்தான் வெட்டி எடுத்து இன்னொரு பகுதிக்கு மாற்றுகிறார்கள். எனவே வெட்டி எடுத்த இடமும் ஒட்டப்பட்ட இடமும் சீக்கிரமே நல்ல முறையில் செயல்பட ஆரம்பித்துவிடும்.


தொகுப்பு: **மௌஷ்மி, சலன்.**



பானி மிக்ஸ் சாக்லேட்


சுவையான காலை உணவிற்கு ஒரு வழி.

உங்கள் குழந்தை விரும்பி உண்ணும் பானி மிக்ஸ் சாக்லேட்டை காலை உணவிற்கு கொடுங்கள். இது தானியங்கள், பழங்கள் முந்திரியோடு சாக்லெட்டும் கலந்த பாரிட்ஜ்.



எளிதில் தயாரிக்கலாம்

சமைக்கத் தேவையில்லை. ஒரு கிண்ணத்தில் தேவையான அளவு பானி மிக்ஸை போடவும். முன்னமே கொதிக்க வைத்த பாலைச் சேர்க்கவும். மிருதுவான பாரிட்ஜ் கிடைக்க மெதுவாக கலக்கவும்.



பானி மிக்ஸ்®

உடனடியாக தயாரிக்கக்கூடிய பாரிட்ஜ்

இரு வகைகளில்:

நாச்சுரல் * சாக்லேட்

உடல் நலத்தின் உறைவிடம் க்ளாக்ஸோ

GL/C/1/89/TAM



கல்கி


1990 டிசம்பர் 23
மலர் : 49 இதழ் : 21
பிரமோதூத மார்கழி 8

அயோத்திக்கு அப்பாலும் பரவும் பிரச்னை!

அலிகாரிலும் கான்பூரிலும் ஹைதராபாத்திலும் நடக்கும் மதக் கலவரங்களுக்கும் தங்களுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்று விகவ ஹிந்து பரிஷத்தும், பி. ஜே. பி.யும் எண்ணினால் அவர்கள் தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொண்டு நாட்டையும் ஏமாற்றப் பார்க்கிறார்கள் என்றுதான் அர்த்தம். பப்ரி மஸ்ஜித் — ராமஜென்ம பூமி பிரச்னை, அயோத்திக்கு அப்பாலும் பரவி நாடு தழுவிய பிரச்னையாகி வருகிறது என்பது தெளிவு. இந்த அபாயத்தைத் தவிர்க்கத்தான் விவேகம்மிக்க தலைவர்கள் மட்டுமின்றித் தேச நலனில் அக்கறை கொண்ட பத்திரிகைகளும் இந்தப் பிடிவாதம் வேண்டாம் என்று கேட்டுக் கொண்டன. நாட்டின் பெரும்பான்மைச் சமூகத்தினர் ஜனநாயகத்தில் பெருந்தன்மையுடன் நடந்து கொள்ள வேண்டும் என்பதை எடுத்துக்காட்டின; பாரதம் முழுவதுமே ராமஜென்மபூமிதான் என்பதை உணர்த்த முயன்றன; அயோத்தியில் சர்ச்சைக்கு இடமில்லாத இடத்தில் அற்புதமான ராமர் கோயில் கட்டலாம் என்றும் மசூதியைப் பெயர்த்தெடுக்கிற காரியம் வேண்டாம் என்றும் யோசனை கூறின. எதையும் காதில் வாங்கிக் கொள்ளாமல் யாரையும் மதிக்காமல் மதத் தீவிரவாதிகள் செயல்படப் போக இன்று மதக் கலவரங்கள் வேகமாக நாட்டில் பரவி வருகின்றன. பாரத தேசத்தின் பல மாவட்டங்களில் அடுத்தடுத்து முஸ்லிம் கிராமங்களும் ஹிந்து கிராமங்களும் உள்ளன. நாட்டை நாலாபுறமும் சூழ்ந்திருப்பதும் முஸ்லிம் தேசங்களே. இந்த நிலையில் இங்கு முஸ்லிம்களும் ஹிந்துக்களும் சகோதரர்களாக, பரஸ்பரம் ஒருவரை ஒருவர் மதித்தும், விட்டுக் கொடுத்தும் வாழ்ந்தால்தான் இந்தியா உருப்படும். ஒற்றுமை நீங்கிடில் அனைவர்க்கும் தாழ்வே.

இப்போதைய கலவரங்களுக்கு அந்தந்த மாநில முதல்வர்களைப் பொறுப்பாக்குவது எளிது. அவர்களைப் பதவி விலகக் கோருவதும் சுலபம். ஆனால் இதனால் பிரச்னை தீர்ந்து விடாது. வி. பி. சிங்கைக் காலை வாரிவிட்டு விட்டுச் சந்திரசேகர் வந்து அமர்ந்து விட்டதால் எப்படிப் பிரச்னைகள் தீர்ந்து விடாதோ, அப்படியே முதல்வர்கள் மாற்றத்தாலும் பயனிராது. இவை தாற்காலிக நடவடிக்கைகளே. ப. சிதம்பரமும், எம். ஜே. அக்பரும் ஹைதராபாத் சென்று நடபுடல் படுத்துவதாலும் பிரச்னை தீராது. போலீஸ் அல்லது பாதுகாப்புப் படையினர் அத்துமீறி நடந்து கொண்டதாகப் பழி சுமத்தி விசாரணைக் கமிஷன் போட்டு விடலாம். ஆனால் அதனாலும் நிரந்தரப் பரிகாரம் கிடைக்காது.





பிரச்னை இன்று நேற்று உருவானது அல்ல. நாற்பது ஆண்டு கால காங்கிரஸ் ஆட்சியில் படிப்படியாக உருவாகி இன்று உச்சத்தை அடைந்திருக்கிறது. முதல் தவறு மதச்சார்பின்மை என்பதை மதங்களைப் புறக்கணித்தல் என்பதாக நெகடிவ் அர்த்தம் பண்ணிக் கொண்டதாகும். மாறாக எம்மதமும் சம்மதம் என்ற அடிப்படையில் அரசு செயல்பட்டிருக்க வேண்டும். அரசியலிலும், கல்வி நிலையங்களிலும் இத்தகைய பாஸிடிவ் மதச் சார்பின்மை கடைப்பிடிக்கப்பட்டிருந்தால் சுதந்திரத்துக்குப் பிறகு தோன்றிய இரு தலைமுறைகளில் மதவேற்றுமை என்பதே மறைந்து போயிருக்கும். அரசு இப்படி நடந்து கொள்ளத் தவறியது. மதத் தீவிரவாதிகள் தலையெடுக்கவும் தங்கள் செல்வாக்கைச் செலுத்தவும் வசதி செய்து அளித்ததாகி விட்டது.

மதபோதனையும் அறநூல்களும் புறக்கணிக்கப்பட்டதன் மற்றொரு விளைவு எங்கும் அதர்மம் பெருகியுள்ளது. கூச்சமின்றி லஞ்ச ஊழல் தாண்டவமாடுகிறது. கடவுள் பக்தியும் பாபத்துக்குத் தண்டனை உண்டு என்ற பயமும் விடைபெற்றுப் போய்விட்டன. வழிகாட்ட வேண்டிய தலைவர்கள் தேர்தலுக்குமுன் கோயிலுக்குப் போய் மக்களை ஏமாற்றுகிறார்கள். பதவிக்கு வந்த பிறகு ஸ்விஸ் வங்கியில் கமிஷன் பணத்தைப் போட்டு மக்களை ஏமாற்றுகிறார்கள். இத்தகைய முன்னுதாரணங்கள் மக்களிடம் பாதிப்பை ஏற்படுத்தாமல் போகுமா?

எல்லாவற்றுக்கும் அடிப்படை, நல்ல கல்விக் கொள்கை, கடவுளிடம் பயபக்தியை வளர்க்கிற, நேர்மையை உருவாக்குகிற, மத ஒற்றுமைக்கு அடிகோலுகிற, வாழ்க்கைக்கு வழிகாட்டுகிற கல்வி தேவை. இன்றைக்கே ஆரம்பித்தால் நமது கொள்ளுப் பேரன் பேத்திகளாவது நல்வாழ்வு பெறுவார்கள். இன்று மத்திய, மாநில அரசுகள் செய்து வரும் தேவையற்ற ஏராளமான காரியங்களைப் பட்டியலிட்டு, அவற்றைத் தனியார்த் துறையிடம் ஒப்படைத்துவிட்டு, தரமான கல்வி வழங்குவதில் கவனம் செலுத்தினால் விடிவு காலம் உண்டு.

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. — பாரதியார்

இசைக் கலைஞர்களுக்கு மேலும் ஒரு பட்டம்!

சிரிக்க வையுங்கள்; சிங்கப்பூர் செல்லுங்கள்!


எல். கே. ஜி. படிக்கும் என் அக்கா மகன் ரைம்ஸ் சொல்வதைக் கேட்க ஆசைப்பட்ட நாங்கள் அனைவரும் அவனை, 'ஒரு ரைம் சொல்லு' என்று கேட்க அவன் மிகவும் பிகு பண்ணிக் கொண்டு தன் அம்மாவைச் சொல்லச் சொன்னான். உடனே என் அக்கா புத்திசாலித்தனமாய்ப் பேசுவதாய் எண்ணிக் கொண்டு, "அம்மாவுக்குத்தான் ரைம்ஸ் எல்லாம் தெரியாதேடா கண்ணா... அதான் தாத்தா, பாட்டி, சித்தி எல்லாம் உன்னைச் சொல்லச் சொல்றாங்க" என்றான். உடனே அவன், "ஆமாம்; தினம் என்னை மட்டும் ஸ்கூல்ல விட்டுட்டு ஸிஸ்டர்ட்ட பாடம் படிக்காம நீ வீட்டுக்குப் போயிடறே. அப்புறம் எப்படி உனக்கு 'ரைம்ஸ்' தெரியுமாம்" என்று மழலையில் வேகமாய்க் கேட்க, நாங்கள் அனைவரும் சிரித்த சிரிப்பு இருக்கிறதே, அப்பப்பா!

— ஜி. டி. ராஜா, சென்னை — 26.

கல்லூரி ஹாஸ்டலில் இரவு படித்துக் கொண்டிருந்தோம். கரண்ட் கட்டாகி நீண்ட நேரமாய் வராததால் நண்பர்களோடு மாடிக்குச் சென்று பௌர்ணமி நிலவில் அமர்ந்து பேச ஆரம்பித்தோம். ஒரு நண்பர் இந்த நிலவைப் பார்த்து அவரவர் மனநிலைக்கு ஏற்ப ஆளுக்கொரு கவிதை சொல்ல வேண்டும் என்றார். உடனே ஒரு நண்பர், "அந்த வெள்ளித் தட்டு என் கையில் இருந்தால் அதை எப்போதோ அடகு வைத்திருப்பேன்" என்றார்.

இன்னொரு நண்பர்... "சே...! உன் அப்பனைப் பாரடா... நீயும் நானும் சேர்ந்திருக்கும் போது பேட்டரி அடித்துப் பார்க்கிறான்" என்றதுதான் தாமதம். அனைவரின் சிரிப்பையும் அடக்க வெகு நேரம் ஆகி விட்டது!

— டி. பூபாலன், காவேரிப்பாக்கம்.



— 'யானை', போடிநாயக்கனூர்.

"இவருக்குப் பொது அறிவு பத்தாதுன்னு எப்படிச் சொல்றீங்க?"

"வகுப்புக் கலவரத்தை ஒடுக்க ஒரு வழி சொல்லுங்கன்னா, 'அனைத்துக் கல்வி நிலையங்களுக்கு அருகிலேயும் ஒவ்வொரு காவல் நிலையம் அமைக்கலாம்'னு யோசனை சொல்லியிருக்கார்."

— வி. மனோஹரன், சென்னை — 102.

விடுப்பில் வந்திருந்த எனது சகோதரன் ராமன், அவன் மனைவி உஷா, ஒரே பெண் குழந்தை (ஐந்து வயது) பிருந்தா மூவருக்கும் காப்பி கொடுத்துக் கொண்டிருக்கையில் பில்டர் காப்பி ஒன்றையே அறிந்திருந்த குழந்தை பிருந்தா "ப்ரூ" டப்பாவைக் காட்டி கேட்கவும் அதை அவளுக்கு விளக்கினேன்.

"அத்தை... இனிமே நாங்க ப்ரூ ஃபேமலி... B ஃபார் பிருந்தா, R ஃபார் ராமன்... U ஃபார் உஷா..." என்றாளே பார்க்கலாம்! அது முதல் ப்ரூ ஃபேமலி என்றுதான் என் சகோதரன் குடும்பத்தைக் கூறுகிறோம்!

— ஜி. நீலா, மன்னார்குடி.

"வி. பி. சிங் கட்சியின் தலைவர் பொம்மை என்கிறார்கள். சிலர் சந்திரசேகர்தான் பொம்மை என்கிறார்கள். ஒரே குழப்பமாக இருக்கிறதே!"

"அண்ணே! உங்களையறியாமல் ஒரு விளக்கத்தைச் சொல்லிட்டீங்க! பழைய கட்சித் தலைவரும் பொம்மைதான். புதிய கட்சித் தலைவரும் பொம்மைதான்!"

— அ. ஷண்முக சுந்தரம், சிட்லபாக்கம்.

இலவச பஸ் பாஸ் வாங்கியிருந்த பள்ளி மாணவர்கள் வி. ஆர். வி. ரூட் வண்டியில் ஏற, "நீங்களெல்லாம் டவுன் பஸ்ஸிலேதான் வரலாம். இறங்குங்க" என்று கண்டக்டர் இரைச்சல் போட்டார்.

ஒரு மாணவன், "நாங்க திருவள்ளுவர் பஸ் தவிர மற்ற எல்லா பஸ்ஸிலேயும் இலவசமாப் போகலாமுன்னு ரேடியோவிலே சொன்னாங்களே" என்றான்.

கோபமடைந்த கண்டக்டர், "அப்போ எல்லாரும் ரேடியோவிலே ஏறிக்கிட்டுப் போங்கடா" என்றார்.

உடனே ஒரு மாணவன், "சார், உங்களுக்கெல்லாம் சம்பளம் உசத்தினதா ரேடியோவிலே சொன்னாங்களே! நீங்க இப்போ ரேடியோக்கிட்டதான் சம்பளம் வாங்குறீங்களா" — என்று சிரிக்காமல் கேட்க, பஸ் பயணிகளின் வெடிச்சிரிப்பு பஸ் முழுக்க அலை மோதியது!

— சித. சுருணாநிதி, மருதூர் தெற்கு.



— எஸ். லஷ்மி, கோவை.

பக்க பலக் கலைஞர்கள்

"இரண்டு அரக்கர்கள் இடையில் சிக்கி..."

"வயலின் வித்வான்கள் பக்கவாத்தியம் வாசிக்கும் போது 'தான்' என்கிற உணர்வைப் பின்னுக்குத் தள்ளிவிட வேண்டும். பாடகர் ஐந்து நிமிஷம் ராகம் பாடினால் வயலின் கலைஞர் மூன்று நிமிஷம் தான் வாசிக்கலாம். சுவரம் பாடும் போது பாடகர் ஒரு ஸ்தானத்திலிருந்து அடுத்த ஸ்தானத்துக்கு மாறுவதற்கு முன்பாகவே வயலின் கலைஞர் மாறிவிடக் கூடாது; கீர்த்தனங்கள் வாசிக்கும் போது வயலின் கலைஞர் தாம் கற்றுக் கொண்ட பாணியிலேயே வாசித்துக் கொண்டு போகாமல் பாடகர் பாடும் பாணியிலேயேதான் வாசிக்க வேண்டும்; பிரதான கலைஞர் ஒரு ஜூனியர் வித்வானாக இருந்து, வயலின் வாசிப்பவர் மூத்த வித்வானாக இருந்தாலும்கூட இந்த விதிகளையெல்லாம் கடைப்பிடிக்க வேண்டும். அப்போதுதான் பக்க வாத்தியம் அனுசரணையாகவும் போஷாக்காகவும் இருக்க முடியும்" என்கிறார் சாவித்ரி சத்தியமூர்த்தி.

இவை யாவும் தமது குரு கும்பகோணம் ராஜமாணிக்கம் பிள்ளை கற்றுக் கொடுத்த பாடங்கள் என்று கூறும் சாவித்ரி, அரியக்குடி ராமானுஜ அய்யங்காரின் மேற்பார்வையில் உருவான கலைஞர். பிற்பாடு டாக்டர் எஸ்.ராமநாதனிடம் பயின்றார்.

"என் தாத்தாவும் அரியக்குடி அவர்களும் நெடுநாளைய நண்பர்கள். நான் வயலின் வாசிக்கிறேன் என்று தெரிந்ததும் அவர் என்னைத் தமது வீட்டிலேயே தங்கச் செய்து, கச்சேரிகளுக்கெல்லாம் அழைத்துப் போனார். எப்படி வாசிக்க வேண்டும் என்று சொல்லிக் கொடுத்து வாசிப்பை விமர்சிப்பார். அவரைப் போன்ற பெரியவர்களின் நிழலில் வளர்ந்து பக்குவப்பட்டதால்தான் டி.ஆர். மகாலிங்கம், எம்.எஸ்., டி.கே.பி., போன்ற முன்னணி வித்வான்களுக்கு வாசித்து நல்ல பெயர் எடுத்தது மட்டுமின்றி இன்றைக்கு என்னுடைய மாணவனான உன்னிகிருஷ்ணனின் பாட்டுக்கும் நான் பக்கவாத்தியம் வாசிக்கிறேன்.

"அடக்கத்தோடு சுருதி சுத்தமும் மிக அவசியம். இவை இரண்டும் ஒருங்கே அமைந்து விட்டால் கச்சேரி அருமையாக இருக்கும். ஒரு நல்ல கச்சேரியைக் கெடுக்கும் ஆற்றலும் ஒரு சுமாரான கச்சேரியைத் தூக்கி நிறுத்தும் ஆற்றலும் ஒருங்கே வயலின் கலைஞரின் கையில்தான் உள்ளன.! அனுசரணையாக இல்லாமல் பக்க வாத்தியக் கலைஞர்கள் ஆளுக்கு ஒரு பக்கமாக வாசித்தால் இரண்டு ராக்ஷஸர்களுக்கு மத்தியில் அகப்பட்டுக் கொண்டது போல் பிரதானக் கலைஞர் தவித்துப் போய் விடுவார்!" என்கிறார் சாவித்ரி சத்யமூர்த்தி.

நரேந்திரனுக்குக் காத்திருந்த அதிர்ச்சி!

தமது பத்தாவது வயதில் மிருதங்கத்துடன் அரங்கேறியவர் திருச்சூர் நரேந்திரன். கேரளாவில் பெரிய வித்வான்களின் கச்சேரிகளுக்கெல்லாம் வாசித்தார். பி.ஏ. பட்டம் பெற்ற பிறகு, பாலக்காடு ரகுவிடம் மேலும் பயிற்சி பெறுவதற்காகச் சென்னை வந்த நரேந்திரனுக்கு ஒரு பெரிய அதிர்ச்சி காத்திருந்தது.

"ரகு சாரிடம் முதல் முதலாகப் போன போது கொஞ்சம் வாசித்துக் காண்பிக்கச் சொன்னார். பொறுமையாகக் கேட்டுவிட்டு, 'நல்ல திறமை இருக்கு. ஆனால் எப்படி வாசிக்கணும்னுதான் உனக்குத் தெரியல்ல' என்று ரொம்ப வெளிப்படை

• திருச்சூர் நரேந்திரன்



யாக அவர் சொன்னபோது எனக்குப் பெரிய அதிர்ச்சி!'' என்கிறார் நரேந்திரன்.

''அது நாள் வரை நான் ரொம்ப நன்றாக வாசித்து வந்ததாக நினைத்துக் கொண்டிருந்தேன். ஆனால் ரகு சாரிடம் வந்த பிறகுதான் நான் கற்றுக் கொள்ள வேண்டியது இன்னும் கடலளவு இருப்பதை உணர்ந்தேன். மிகுந்த அக்கறையுடன் அவரும் பாடங்களை ஆரம்பத்திலிருந்தே துவக்கினார். அவருடன் பல கச்சேரிகளுக்குச் சென்று மேடையில் உட்கார்ந்து கவனித்து அனுபவம் பெற்றேன். அவர் கற்றுத் தந்த பாடங்களுடன் கச்சேரிகளில் பெற்ற கேள்வி ஞானமும் பேருதவியாக இருந்தன. மேடையில் உட்கார்ந்து இளம் மிருதங்கக் கலைஞர் வாசிக்கும் போது, கற்பனை வளம் தானாகவே தோன்றி விடாது. பல கச்சேரிகள் கேட்கக் கேட்க, அந்த அனுபவம்தான் வாசிப்புக்கு மெருகு ஏற்றும். ஓர் எளிய கோர்வையை ஒரு வளரும் கலைஞர் வாசிப்பதற்கும் பாலக்காடு மணி அய்யர் அவர்கள் வாசிப்பதற்கும் இடையே பெரிய வித்தியாசம் தெரிகிறதே ஏன்....? மணி அய்யர் அதை எப்போது வாசிக்க வேண்டும் என்று மிகத் துல்லியமாகக் கணித்து வாசிப்பார். நிசப்தமான அறையில் ஊசி விழுந்தது போன்ற **effect** இதனால் உண்டாகும். கச்சேரியில் பிரதான வித்வான் தரும் இடைவெளிகளை இவ்வாறு அழகாக இட்டு நிரப்புவதும் விறுவிறுப்பான நடையினால் கச்சேரியை வளப்படுத்துவதும் மிருதங்க வித்வானின் பணி'' எனக் கூறும் நரேந்திரன் கே.வி. நாராயணசாமி அளித்த ஆரம்பகால ஊக்கத்தை நன்றியுடன் நினைவு கூர்கிறார்.

* ஈ.எம். சுப்ரமணியம்



அமெரிக்காவில் சான்டியாகோ பல்கலைக் கழகத்தில் இரண்டு ஆண்டுகள் ஆசிரியராகப் பணியாற்றியுள்ளார் நரேந்திரன். மேஜையடி உத்யோகத்தை விரும்பாத இந்த பட்டதாரி கலைஞர், கலையார்வத்தினால் ''இசையைத்தான் முழு நேரத் தொழிலாகச் செய்ய விரும்புகிறேன்'' என்றும் கூறுகிறார்.



* வி. நாகராஜன்



* சாவித்ரி சத்யமூர்த்தி

பாட்டுக் கச்சேரிக்கு ஒரு மாதிரி; வாத்தியக் கச்சேரிக்கு வேறு மாதிரி!

''ஒரு கட வித்வான், பிரதான கலைஞருக்கும் அனுசரிச்சு வாசிக்கணும், வயலின் கலைஞருக்கும் அனுசரிச்சு வாசிக்கணும், மிருதங்க வித்வானுடனும் அனுசரிச்சு வாசிக்கணும்!'' என்கிறார் ஈ.எம். சுப்ரமணியம்.

''பாமர மக்களையும் ஈர்க்கும் ஜனரஞ்சகத் தன்மை கடத்துக்கு உண்டு. ஆனால் அதற்காக எல்லா கச்சேரிகளிலும் ஒரே மாதிரியாக வாசித்து விடக்கூடாது. பாட்டுக் கச்சேரிக்கு ஒரு மாதிரியும் வாத்தியக் கச்சேரிக்கு வேறு மாதிரியும் வாசிக்கணும். இந்த நுணுக்கங்கள் கேட்போருக்குத் தெரியாவிட்டாலும் இப்படியெல்லாம் வாசித்தால்தான் கச்சேரி களை கட்டும். மிருதங்கம், கடம், கஞ்சிரா என்று பல பக்க வாத்தியங்கள் உள்ள கச்சேரியில் நம் முறை எப்போது வருகிறது என்று கவனமாகப் பார்த்து வாசிக்க வேண்டும். அடுத்த வித்வானின் முறையை நாம் 'பிடுங்கி' வாசித்தால் நன்றாக இராது'' எனக் கூறும் ஈ.எம். சுப்ரமணியம் கர்நாடக இசைக் கல்லூரியில் பணியாற்றுகிறார்.

பால்ய பருவத்திலேயே கடம் வாசிக்க

வில்லுப்பாட்டில் விஞ்ஞானம்



முழுக்க முழுக்க விஞ்ஞான சம்பந்தமான ஒரு விஷயத்தை, எளிமையான வில்லுப்பாட்டு இசையில் காசெட்டாக வெளியிட்டிருக்கிறது எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு கமிஷன். அமெரிக்காவில் முதன் முதலில் எண்ணெய்க் கிணறு தோண்டப்பட்டது முதல், நமது நரிமணம் எண்ணெய் ஊற்றுப் பணிகள் வரை; இந்தப் பொதுத் துறை நிறுவனத்தின் முப்பத்தைந்து வருட வளர்ச்சியைப் பாமரருக்கும் புரியும்படி வழங்கியிருக்கிறார் கப்பு ஆறுமுகம். இந்தப் புதுமையான முயற்சிக்கு உதவியர் ஓ. என். ஜி. ஸி. யின் பொது மக்கள் தொடர்பு அதிகாரி பாலா விசுவநாதன்.

கிராமப்புறங்களில், இந்த வீடியோ பார்த்த பிறகு, "எங்கள் நிலத்தையும் எண்ணெய்க் கிணறு தோண்ட எடுத்துக் கொள்ளுங்கள்!" என்கிறார்களாம் கிராம வாசிகள்.

— சித்தார்த்



பாலா விஸ்வநாதன்.

ஆசை ஏற்பட்டு தஞ்சாவூர் வைத்தியநாதய்யரிடம் கற்றுக் கொண்டார் சுப்ரமணியம். இவர் தந்தை ஈ.பி. மகாதேவய்யர் மிருதங்க வித்வான். ஒன்பது வயதிலேயே ஈ.எம்.எஸ். மேடையேறி வாசிக்க ஆரம்பித்தார். மதுரை மணி, ராம்நாட் கிருஷ்ணன், செம்பை போன்றோரின் அபரிமிதமான ஊக்குவிப்பில் வளர்ந்தார்.

உப பக்கவாத்யமாமே, நியாயமா?

பிறவியிலேயே இடது கை வாகுடையவர் வி. நாகராஜன். ஆனால் தந்தை பாப்பா வெங்கட்ராமய்யாவின் சொல்லுக்குக் கட்டுப்பட்டு மிருதங்கம் மட்டும் வலது கையில் வாசிக்க ஆரம்பித்தார். சில வருஷங்களுக்குப்பின் வலது கையில் வலியும் பலவீனமும் ஏற்பட, வாத்தியமே வாசிக்க முடியாமல் போயிற்று. இந்த சந்தர்ப்பத்தில் தான் தெய்வாதீனமாக நண்பர் டி. விஸ்வநாதன் அவரைக் கஞ்சிரா வாசிக்க கற்றுக் கொள்ளும்படி கூறினார். விஸ்வநாதனின் புல்லாங்குழல் கச்சேரிக்கு அவர் தம்பி ரங்கநாதன் மிருதங்கம் வாசிக்க, நண்பர் நாகராஜன் கஞ்சிரா வாசிக்கலாம். எல்லா கச்சேரிகளுக்கும் சேர்ந்து போய்வரலாம் என்று மனத்தளவில் திட்டமிட்டார்கள். முயன்றுதான் பார்ப்போம் என்று பாலக்காடு மணி அய்யரிடம் கற்றுக் கொள்ள ஆரம்பித்தார் நாகராஜன்.

"சங்கீதத்துக்கும் எனக்கும் இனி ஒத்தே வராது என்று நான் மனசுடைந்து போயிருந்த வேளையில்தான் விஸ்வா என்னை திசை திருப்பிவிட்டு ஊக்குவித்தார். கஞ்சிரா கற்றுக் கொண்ட பிறகு ஆலத்தூர் சகோதரர்கள், செம்மங்குடி, எம். எஸ். போன்ற பெரிய வித்வான்கள் எனக்கு ஏராளமான ஊக்கமும் வாய்ப்புக்களும் அளித்தார்கள். 1957 முதல் 1980 வரை எம்.எஸ். அவர்களுக்குத் தொடர்ந்து வாசித்தேன்" என்று நன்றியுடன் குறிப்பிடுகிறார் நாகராஜன்.

ஆனால் கஞ்சிரா மெள்ள அழிந்து வரும் வாத்தியமாகி வருகிறது என்ற வருத்தம் உள்ளது நாகராஜனுக்கு. "முன்னெல்லாம் இருந்தது போல் இப்போது நான்கு மணி நேரக் கச்சேரிகள் கிடையாது. அதனால் பலவித பக்கவாத்தியங்கள் வைத்துக் கொண்டு அவர்கள் எல்லோருக்கும் வாய்ப்புத் தருவது பாடகருக்கும் கஷ்டம். மேலும் கஞ்சிராவைக் கச்சிதமாக வாசிக்கக் கற்றுக் கொள்வதும் கஷ்டம். அதனால் பலபேர் இந்த வாத்தியம் கற்றுக் கொள்ள முன் வருவதில்லை.

"அனுபல்லவியின் போது கஞ்சிரா நாதம் கச்சேரியில் சேருகையில் அந்த கீர்த்தனையே தூக்கி நிறுத்தப்படும். பாட்டுக்குப் போஷாக்கும் கச்சேரிக்கு அழகும் கஞ்சிராவால் கிடைக்கும். ஆனால் கஞ்சிராவைச் சிலர் உப பக்கவாத்தியம் என்று கூறுகிறார்கள். இது எந்த விதத்தில் நியாயம் என்று தெரியவில்லை. எல்லா வாத்தியங்களும் உழைப்பினால்தான் தெய்வாம்சம் பெறுகின்றன. இதை மறந்து விடலாகாது" என்கிறார் வி. நாகராஜன்.

— அலர்மேலு கணேசன்.

ராஜா கைய வெச்சா

'ராஜா கைய வெச்சா' என்ன ஆகும்?

முன்னொரு படத்தில் அது ராங்காகப் போவது இல்லை. இதில்?

பெண்களின் வளையல்கள் கழன்று விடுகின்றன. பர்ஸ்கள் அவர்களுடைய கைப் பையிலிருந்து இடம் மாறுகின்றன. தெரு வியாபாரியின் கூடையிலிருந்து ஆப்பிளும் ஆரஞ்சும் ஜோல்னாப் பைக்கு இடம் பெயர்கின்றன.

இப்படி நடைபெறும் ராங்கான விஷயங்களைத் தொடர்ந்து ஓர் அழகான பெண்ணின் அறிமுகம். அவள் மனத்தில் இடம்பெறும் முயற்சியில் போலீஸ் அதிகாரி, மாருதி காரில் வரும் பணக்காரன், சி. பி. ஐ. அதிகாரி, முடிவில் ஒரு பெரிய கார் தொழிற்சாலையின் ஜெனரல் மானேஜர் என்று மாறி மாறி அவதாரம் எடுக்கும் 'தி கிரேட் இம்போஸ்டர்.'

ராஜாவாக வரும் பிரபுவிடம் பேச்சிலும் பாவனைகளிலும் அலட்சிய சரளம்.

நளினமான நடிப்பு கௌதமியினுடையது.

பிரபுவின் சாகசங்களில் பிரமித்துப் போகும் போதும், பின்னர் அவர் போடும் வேடங்களைப் புரிந்து ஏமாற்றம் கொள்ளும் போதும், முடிவில், மாற்றமடைந்து விட்ட அவருடைய வாழ்க்கைக் கண்ணோட்டத்தை உணர்ந்து அவர் காதலை ஏற்கும் போதும் விழிகள் வெளிப்படுத்தும் உணர்வுகள் நயம்.

கௌரவப் பாத்திரம் ரேவதியினுடையது.

கால்களின் உபயோகத்தை இழந்தவராகச் சக்கர நாற்காலியில் வளைய வந்து, நெஞ்சின் வேதனைகளுக்கு வடிகாலாக இசையில் ஈடுபட்டு, பிரபுவிடம் மனம் பறிகொடுத்து அந்த நினைவிலேயே வாழ்க்கையில் மலர்ச்சி பெற்று, பிரபுவின் பார்வை கௌதமியின் பக்கம் என்பதைத் தெரிந்து கொள்ளும் போது உடைந்து சிதறி, இசையை நோக்கி மீண்டும் நாட்டத்தைத் திருப்பிக் கொள்வது ரொம்பவும் மென்மை.

ஆட்டோ ஓட்டும் ஜனகராஜ் அட்டகாசம். தசைக் கோளாறின் காரணமாக எப்போதும் சிரித்த முகமாகவே காணப்படும் பெண்ணுடன் பேசும் போது இடைவிடாமல் தென்படும் அந்தச் சிரிப்பை வேறுவிதமாகப் புரிந்து கொண்டு மனிதர் என்னமாய் வழிகிறார்!

திறமை முழுமையாகப் பயன்படுத்தப்படாமல் வீணடிக்கப்பட்டவர்கள் நாகேஷும், ஆனந்த ராஜும் என்றால், பளிச்சிடுகிறவை காமெராவும் இசையும்.

முற்பகுதியில் இளமைத் துள்ளாட்டம். கார் தொழிற்சாலையில் நடைபெறும் ஸ்டிரைக்கைத் தொடர்ந்து கதையும் ஸ்டிரைக் செய்யத் தொடங்கிப் படிப்படியாக ஃபார்முலாவுக்கு அடிபணிந்து சறுக்கி விடுகிறது.

— சி. ஆர். கே.





கவிதையாக ஒரு கலைப்படம்

தொலைக்காட்சித் தொடருக்காக எல்லா வீடியோ தயாரிப்பாளர்களும் சிறு கதை, நாவல்களைத் தேடி ஓடிக் கொண்டிருக்கும் போது, பரதநாட்டியத்தைப் பற்றி ஒரு தொடர் எடுக்கத் துணிந்துள்ளார்கள் ஹான்சாவிஷன் நிறுவனத்தினர். இதை இயக்குபவர் மலையாளப்பட உலகின் பிரபல டைரக்டர் அரவிந்தன்.

"அரவிந்தனைத் தேர்ந்தெடுத்து இயக்கச் செய்ததற்கு என்ன காரணம்...?" — இப்படத் தயாரிப்பில் முக்கிய பங்கு வகிக்கும் பிரசன்னா ராமசாமியிடம் கேட்டோம்.


"'சகஜா' என்றொரு டாகுமெண்டரி படம் எடுத்திருந்தார் அரவிந்தன். இப்படத்தில் மாபெரும் நடனக் கலைஞர்களான கேலுசரண் மகாபாத்ரா, வேதாந்தம் சத்தியநாராயணா ஆகியோரது நடன பாவங்களை நவீன முறையில் அழகுணர்ச்சி மேம்பட படம்பிடித்துக் காட்டியிருந்தார். அதைப் பார்த்த போது பரத நாட்டியம் பற்றிய இந்தத் தொடரை எடுப்பதற்கும் கற்பனை வளம் மிகுந்த இந்த இயக்குனர் தான் சரியானவர் என்று தீர்மானித்தோம்.

பரதநாட்டியம் பற்றிய படத்தில் தோன்றுவதற்கு எல்லாவிதங்களிலும் பொருத்தமான கலைஞர் அலர்மேல் வள்ளி. இடைவிடாத வெளிநாட்டுப் பயணங்கள், உள்நாட்டு நிகழ்ச்சிகளுக்கிடையே படப்பிடிப்புக்கும் நேரம் ஒதுக்க இசைந்தார்.

மொத்தம் 175 நிமிடங்கள் நீடிக்கும் இந்தப் படம் 'பரதநாட்டியம் — எ டைம்லெஸ் லிங்க்' என்ற தலைப்புடன் ஏழு பகுதிகளாக டீ. வி. யில் ஒளிபரப்பாகவுள்ளது. இயற்கையில் அமைந்துள்ள லயம், நடராஜ தத்துவம், சிற்பங்களுக்கும் நிருத்தத்துக்கும் இடையே உள்ள பொதுவான ஒற்றுமைகள், அபிநயம், லோகதர்மி — நாட்டியதர்மி வகைகள், இசையும் நடனமும், ஓவியங்களும் நடனமும் என்று கனமான ஆராய்ச்சி விஷயங்களைக் கூட அனைவரும் புரிந்து கொள்ளும்படி எளிமைப்படுத்தி தந்திருக்கிறார்களாம். தவிர லால்குடியின் தில்லானா, பாரதியாரின் 'திக்குத் தெரியாத காட்டில்', 'ஜகதோத்தாரணா' போன்ற பிரபல பாடல்களுக்கான இனிய நாட்டிய காட்சிகளும் உண்டு.

"இந்தப் படம் முழுவதையும் ஒரு கவிதையாக வடித்திருக்கிறார் அரவிந்தன்" என்கிறார் அலர்மேல் வள்ளி.

— எஸ். வி. என்.



SASI/K/SIB/1039/90/Tamil

அலைவரிசைகள்



யாரும் எழுந்திருக்க வேண்டாம் என்று ராஜாமணி சொல்லி விட்டான். ஒருத்தரும் அசையவில்லை. மொத்தம் பதினாறு பேர். எல்லோருடைய டிக்கெட்டுகளுமே நிச்சயிக்கப்பட்டவை. சந்தேகமே கிடையாது. அவர்கள் கத்திக் கொண்டிருந்தால் அது அவர்கள் சௌகர்யம். யாரும் இருக்கிற இடத்தை விட்டு அசைய வேண்டாம். என்ன? பாத்ருமா? பேசாம உட்காரு. வடக்கத்திப்பசங்க வெறியா அலையறாங்க. இன்னிக்கு ஒரு வழி பண்ணிடறேன். கொஞ்சம் பல்லைக் கடிச்சுக்கோ. டி டி ஆர். வரட்டும். அப்புறமா ஜமாய்ச்சுடலாம். பற்களில் பான்பராக் தெரிய ராஜாமணி கண்களைச் சிமிட்டுகிறான். மாமா ஒரு வார்த்தை சொல்லி விட்டால் அதற்கு அப்பீலே கிடையாது. நாங்கள் அப்படியே உட்கார்ந்திருந்தோம். இந்த இடங்கள் தங்களுடையது என்று உரிமை கொண்டாடுகிறவர்கள் மேலும் பதினாறு பேர் வண்டியில் இருக்கிறார்கள்.

ஒரு தமிழ்க் குடும்பம். மூன்று சர்தார்ஜிக்கள். ராமேஸ்வரம் புறப்பட்டிருக்கிற வயதான வடக்கத்தித் தம்பதிகள். குஜராத்திகள். எல்லா இடங்களிலும் இருக்கிற மலையாளிகள். பார்வையில் வியாபாரம் தெரிகிற முஸ்லீம்கள். நுனி நாக்கில் ஆங்கிலம் வைத்து IAS ரேஞ்சில் இரண்டு ஹிந்திப் பெண்கள்.

''மாமா!''

''சொல்லுங்க APK.'' — ராஜாமணி மோவாய் உயர்த்துகிறான்.

''நீங்க சரின்னு சொன்னா ரெண்டு பேருக்கு இங்கே இடம் கொடுக்கலாம்னு இருக்கேன்'' — கலெக்டர் பெண்களை APK கடைக்கண்ணில் பார்க்கிறான்.

''பார்த்து APK. இப்பத்தான் சண்டை ஒய்ஞ்சிருக்கு. கேர்ஃபுல். அத்தனை பசங்களும் தமிழ் நாட்டிலேதான் பொளெழ்க்கறாங்க. தமிழ் தெரிஞ்சு ஏதாவது வம்பாயிடப் போவுது. இன்னும் முழுசா ரெண்டு நாள் இருக்கு APK. அவசரமேயில்லே.''

சிரித்துக் கொண்டே ராஜாமணி உதடு

ம.வே.சிவகுமார்

ராமேஸ்வரம் போகிற அந்த வயதான வடக்கத்தித் தம்பதியர்கள் உட்கார இடம் இல்லாமல் நிற்கிறார்கள். பயணிகள் போகிற வருகிற பாதை. வருடங்களில் முட்டி வளைந்து பெரியவர் ஆடுகிறார். அவருடைய தள்ளாத மனைவி விழாமல் இருக்க அவரைப் பிடித்துக் கொள்கிறாள். பார்க்கவே எங்கள் நெஞ்சம் பதைக்கிறது. எனினும் தனிப்பட அனுதாபம் காட்ட முடியாது. தட்டு முட்டுச் சாமான்கள் நிறையவே வைத்திருக்கிறார்கள். ஒட்டகத்தை நுழைய விட்டால் கூரைக்கே ஆபத்து. மனசாட்சி குறுகுறுத்துப் பார்வையைத் திருப்பிக் கொண்டோம். கம்பியிட்ட ஜன்னலில் மரங்கள் எதிர்ப்பக்கம் விரைகின்றன.

சேரளத்துக்காரர்கள் கெட்டிக்காரர்கள். மூக்கில் தமிழ் பேசி, படிப்பதற்குப் புத்தகம் கொடுத்து, மிலிடரி ரம் காட்டி, நான்கைந்து சிகரெட்டுகள் ஓசியில் புகைக்கச் செய்து, சற்றே நகரச் சொல்லி ஐக்கியமாகி விட்டார்கள். பருவ வயதில் பெண் இருந்ததால் தமிழ்க் குடும்பமும் உட்கார்ந்து விட்டது. ஓரமாய் ஒதுங்கி நின்று முகத்தில் கவலையுடன் முஸ்லீம்கள் வியாபாரம் பேசுகிறார்கள். இடம் தங்களுடையது என்று சர்தார்ஜிகள் அடம்பிடிக்கிறார்கள். நல்ல வேளையாய் நாங்கள் முன்னரே வந்து உட்கார்ந்து விட்டோம். அப்புறம்தான் எல்லோரும் வந்தார்கள். யாரும் எழுந்

களைத் துடைத்துக் கொள்கிறான். முகத்தின் பாவங்களைத் தேர்ந்தெடுத்து, குரலில் மாத்திரை ஏற்றி இறக்கி, கஷ்கத்துத் தோள்பையில் அத்தனை பேர் கணக்கை வைத்து, புறப்பட்ட நாள் முதலாக எதிர்கொண்ட எல்லாப் பிரச்னைகளையும் சமாளித்து, இதோ ஊருக்குப் புறப்படுகிற இந்த நிமிஷம் வரை முகத்தில் சிரிப்பு மாறாமல் மாமா சொல்கிற போது அதை யார்தான் தட்ட முடியும்?

செல்வகுமார் சீட்டுக்கட்டை எடுத்தான். ஒரு கும்பல் அப்படிப் போய் விட்டது. பாட்டில் எங்கே கிடைக்கும் என்று ரயில்வே சிப்பந்திகளிடம் விசாரணை துவங்கியது. பாவம் பையன்கள். பத்து நாட்களாய் எதுவுமில்லாமல் அகமதாபாத்தில் அலைந்தது முழுதும் வியர்த்தமாகி விட்டது. திட்டமிட்டுக் கொண்டு வந்தது டிரெய்னிலேயே ஆகி விட்டது. டூரின் அத்தனை சந்தோஷங்களிலும் அந்த ஒரு சாரார் சற்றே கரத்துக் குறைந்தவர்களாகத்தான் இருந்தார்கள்.

தவறான பத்து நாட்களில் நாங்கள் அகமதாபாத் வந்து விட்டோம். நகரில் மஞ்சள் காமாலை சாவுகள் கலவரம் ஏற்படுத்தியிருந்தன. இறந்தவர்கள் எண்ணிக்கை கிரிக்கெட் ஸ்கோர் போல் பேப்பர்களில் போட்டுக் கொண்டிருந்தார்கள். வெளியில் எதுவும் சாப்பிடக் கூடாது என்று நாங்கள் எச்சரிக்கப்பட்டிருந்தோம். நகரின் பிரசித்தி பெற்ற ஐஸ்கிரீமை அதன் நியாயமான விலையில் கூட யாரும் சாப்பிடவில்லை. காய்ச்சிய தண்ணீர் குடித்துப் பத்து நாள் ஓடி விட்டது. குஜராத்தி உணவின் தித்திப்பு இந்த நாட்களில் திகட்டி விட்டது. மனம் வீட்டுச் சாப்பாட்டுக்கு ஏங்கியது.

மணி அடிக்கிறது. இடம் கிடைக்காத பதினாறு பேர் நின்றபடி எங்களைத் தீவிரமாய் முறைத்துக் கொண்டிருக்கிறார்கள். அகமதாபாத் பிளாட்பாரம் மெல்ல நகரத் துவங்குகிறது.

வெற்றிக் கோப்பை வெளியே வருகிறது. வங்கியின் அகில இந்திய நாடகப் போட்டி அகமதாபாத்தில் நடந்தது. பூனே, பாம்பே, கல்கத்தா, பரோடா, டில்லி, ஜெய்ப்பூர், லக்னௌ என்று பல ஊர் மொழிகளில் நாடகங்கள் நடந்தன. தமிழகத்தின் சார்பாக நாங்கள் கலந்து கொண்டோம். தமிழன் ஜெயித்து விட்டான். வடவர்கள் புறங்கண்டார்கள். பன்மொழி நாடகங்களுக்கிடையே தமிழுக்கு அங்கே முதல் பரிசு. கனக, விசயர் தலையில் கல்லை மீண்டும் ஏற்றி விட்டோம். மத்தியில் சூட்கேஸ் அடுக்கி, லுங்கியை மடித்துப் போட்டு வெற்றிக் கோப்பையை மக்கள் பார்வைக்குத் திறந்து வைத்தோம்.

APK ஆவேசமாய் எழுந்து கொண்டு வங்கியின் பெயர் சொல்லிக் கத்துகிறான். பதிலுக்கு "வாழ்க" என்று நாங்கள் குரல் கொடுக்கிறோம்.

"வங்கி ஊழியர் ஒற்றுமை..."

"ஓங்குக!"

"நிர்வாகத்தின் அடக்குமுறை..."

"யோவ். இங்க என்னய்யா அதெல்லாம் கத்திக்கிட்டு?"

"அதானே!"

லேசாய் அசடு தட்டி APK சிரிக்கிறான்.

திருக்க வேண்டாம் என்று ராஜாமணி சொல்லி விட்டான். கையில் டிக்கெட்டுகளுடன் முஷ்டி மடக்கி அவர்கள் மூர்க்கமாய்க் கத்துவதை அரைகுறை ஹிந்தியில் சமாளிக்கிற ராஜாமணியின் சிரிப்பு மட்டும் இல்லையென்றால் என்னவெல்லாம் ஆகியிருக்கும் என்று யாரும் சொல்லி விட முடியாது.

கறுப்புக் கோட்டுடன் டி. டி. ஆர். நிதானமாய் வருகிறார். அவரைச் சூழ்ந்து கொண்டு அனைவருமே ஆவேசமாய்க் கத்துகிறார்கள். இருங்கள். பதற்றமேயில்லாமல் டி. டி. ஆர். சைகை செய்கிறார். தலைநரைத்த சர்வீஸில் எத்தனை பார்த்திருப்பார்? டிக்கெட்டுகளை வாங்கிப் பொறுமையாய் நிதானித்து மெல்லத் திரும்பி எங்கள் பக்கம் உதடுகளைப் பிதுக்குகிறார். ரிஸர்வேஷன் எண்களுக்கும், வெயிட்டிங் லிஸ்ட் எண்களுக்குமிடையேயான வித்தியாசங்களை விளக்குகிறார். டி. டி. ஆரும் ஹிந்திக்காரர்தானே? ராஜாமணியின் முகம் சிவந்து விட்டது. அகமதாபாத்தில் ஏதோ தவறு நடந்திருக்கிறது. வடவர்கள் சதி செய்து விட்டார்கள். நாங்கள் சமூக அநாதைகளாகிப் போனோம். சூரத் ஸ்டேஷனில் இறக்கி விடுவதாக டி. டி. ஆர். பயமுறுத்தினார்: அவரைக் கெஞ்சிக் கூத்தாடி 'தனியே கவனித்து' அதே ரயிலில் பயணம் செய்யச் சம்மதம் பெற்றோம். கும்மிடிப்பூண்டி தாண்டாத எங்களுக்கு எதையும் அடித்துப் பேசுவதும் கஷ்டமாகி விட்டது. அந்த ஹிந்திப் பெண்கள் ஜன்னலின் ஓரத்து இடங்களில் அமர்ந்து நக்கலாய் எங்களைப் பார்த்துக் கால்மேல் கால்போட்டு ஆட்டுகிறார்கள்.

நல்ல வேளையாய்ச் சீக்கிரமே இருட்டி விட்டது. பாத்ரூம் அருகில் பாட்டில்கள் திறந்தன. சீட்டுக் கும்பல் விடியும் வரை கச்சேரி என்று முடிவு செய்ய, எல்லோரும் நடந்து போகிற அழுக்கான பாதையிலே நேரமாக ஆக நியூஸ் பேப்பர் விரித்தும் விரிக்காமலும் வெவ்வேறு நிலைகளில் நாங்கள் சோர்ந்து விழுந்தோம்.

''அவங்க புடைவையைப் பார்த்தே எந்தக் கச்சேரிக்குப் போறாங்கன்னு எப்படிக் கண்டுபிடிப்பே?''

''காஞ்சிபுரம் கட்டிண்டா கர்னாடிக் ம்யூசிக்! பனாரஸ் கட்டிண்டா ஹிந்துஸ்தானி புரோக்ராம்!''

— ராகவ்.



எவர்சில்வர் கேனில் காப்பியுடன் ரயில்வே சிப்பந்திகள் எழுப்புகிறார்கள். கையகல பேப்பர்களில் டிபனுக்கு 'ஆர்டர்' எடுக்கிறார்கள். ஆங்கிலப் புத்தகமொன்றை APK எடுத்துக் கொள்கிறான். ஒருமுறை தலைவாருகிறான். நேரே அந்த IAS ரேஞ்சுப் பெண்கள் பார்க்கிற இடமாக நின்று கொண்டு புத்தகத்தைப் பிரிக்கிறான். வெளியே வண்டி ஏதோ ஸ்டேஷனில் நிற்கிறது. சிலபல நாட்களுக்குப் பிறகு இட்டிலியைப் பார்க்கிறோம். பக்கத்தில் மஞ்சளாய் உருண்டையாய் வடையென்று சொன்னார்கள். பழக்கதோஷத்தில் அதையும் வாங்கிக் கொண்டோம். சண்டையிட்ட சர்தார்ஜிகள் சற்றுத் தள்ளிச் சப்பாத்தி வாங்குகிறார்கள். ஆக, தமிழனின் இன உணர்வு இட்டிலியில் தொடங்குகிறது.

வண்டியில் நாங்கள் அலைந்து கொண்டிருக்கிறோம். மாமா அகமதாபாத் ரிசர்வேஷனில் ஆன குளறுபடிக்குத் தார்மீகப் பொறுப்பேற்று முகம் தூக்குகிறான். உண்மையில் தவறு அவனுடையது இல்லை. நாங்கள் மொத்தமாய்ப் பணம் அனுப்பினோம். அவர்கள் ஏதோ தவறு செய்து விட்டார்கள். தவிர, விடுமுறை நாட்கள். எல்லாப் பெட்டிகளுமே கூடுதலாய் ஆட்கள் சுமக்கின்றன.

''வாத்தியாரே. மூடு அவுட்டாகாதே. இப்படி போறதுதான் ஜாலி.'' ராஜாமணியின் தோள்களில் APK உற்சாகமாய்த் தட்டுகிறான். மாமாவுக்கு அழுகையே வந்து விடுகிறது.

அதென்னவோ சர்தார்ஜிக்களின் கண்களை நேருக்கு நேர் பார்க்கவே சங்கடமாய் இருக்கிறது. பேப்பர்களில் அவர்களைப் பற்றி வருகிறவை எதுவுமே சரியாய் இல்லை. நடைமுறையில் குஷ்வந்த் சிங், ஜெயில் சிங், பிஷன் சிங் பேதி என்று நமக்கு அறிமுகமான சர்தார்ஜிகள் எல்லோருமே அன்பு மயமாய் இருக்கிறார்கள். கிட்டத்தட்ட ராஜாமணி மாதிரி. முறுக்கிய மீசை விழும் சீக்கியர் கண்கள் பார்க்கிற போது இடறுகிறது. தவறு அரசியல்வாதிகள் மேல் இருக்கிறது. கோயில் கட்ட நாள் குறிக்க இங்கே ஆட்கள் இருக்கிறார்கள். ஒற்றுமைக்கு நாள் குறித்து அவர்கள் பஞ்சாப் சென்றால் எப்படியிருக்கும்? பொழுது போகாமல் நாங்கள் பேசிக் கொண்டிருக்கிறோம். வண்டியிறங்கிய மறுநாள் காலை

அலுவலகம் போய் விடுவோம்.

நடக்கிற பாதையில் இளம்பெண் இடித்துப்போன இடத்தை APK தொட்டுப்பார்க்கிறான். நம்மூர் பையன்களுக்கு அது கூடப் பொறாமையாய் இருக்கிறது.

மத்தியானத்தில் கணிசமான நேரம் விரசமான ஜோக்குகளில் போனது. மாமா யாரிடமோ அனுமதி கேட்டு மேல் பர்த்தில் படுத்துக் கொண்டு விட்டான். இரவு முழுதும் சங்கடத்தில் விழித்திருந்து அடித்துப் போட்ட கும்பகர்ணன் மாதிரி இப்போது அசையவே இல்லை. சீட்டுக் கச்சேரி யாகம் போல் தொடர்கிறது. பாட்டில் கும்பல் தன் முந்தைய 'தண்ணீர் அடித்த' அனுபவங்களைக் கொட்டிக் கொண்டிருக்கிறது. அந்தக் கலெக்டர் பெண்கள் இருவரும் எழுந்து வருகிறார்கள்.

''ஹூ வாண்ட் எனி திங் மேடம்?''

பவ்யமாய்க் குனிந்து APK கேட்கிறான்.

அவனைப் பாராமல் நடந்து அவர்கள் தள்ளிப் போய்ச் சிரிக்கிறார்கள்.

''நாளைக்குக் காலைலே எட்டு மணி வரைக்கும் டைம் இருக்கு. வெயிட் அண்ட் ஸீ.''

APK காலர் உயர்த்துகிறான். எல்லோரும் ரசித்துச் சிரிக்கிறார்கள்.

மாநிலம் எதுவென்று தெரியாது. மற்ற விவரங்களும் நாங்கள் அறிய மாட்டோம். மாலை ஐந்து மணி சுமாருக்கு வண்டி ஏதோ இடத்தில் நிற்கிறது. ஒரு பக்கம் கண்ணுக் கெட்டியவரை தேங்கிய தண்ணீர். மறுபக்கம் பச்சை வயல்கள். குளிர்ந்த காற்று ஜன்னலில் புகுந்து போகிறது. லேசாய் இருட்டி வருகிறது. தூங்கிய முகம் வீக்கம் கண்டு ராஜாமணி எழுந்து வருகிறான். முகத்தில் இன்னமும் சுரத்தில்லை.

''மாமா மாமா மாமா. ஏம்மா ஏம்மா ஏம்மா...'' உற்சாகத்தில் முதல் பாடல் பிறக்கிறது.

இசை எப்போதும் அப்படித்தான் பிறக்கும். காது கொடுத்துக் கேட்பவரை உற்சாகம் தொற்றிக்கொள்ளும். சோர்வும், கவலைகளும் விட்டு விலகும். மனம் எடை விழுந்து காற்றில் மிதக்கும். உற்சாகத்தில் ராஜாமணி குழந்தை மாதிரி சிரிக்கிறான். ஒரு பக்கம் பச்சை வயல்கள். மறுபக்கம் தண்ணீர் குளிர்வித்த காற்று.

''மணப்பாறை மாடு கட்டி, மாயவரம் ஏர் பூட்டி'' கீச்சுக் குரலில் செல்வகுமார் ஆரம்பிக்கிறான். மற்றவர்கள் கூடவே சேர்ந்து கொள்கிறார்கள். மேற்கொண்டும் பாடல்கள் புறப்படுகின்றன. காற்றில் மனங்கள் கரைகின்றன. கரைந்த மனங்களெல்லாம் இசையில் ஒன்றுபடுகின்றன.



''உங்க கச்சேரியன்னிக்கு நான் ஊர்லே இருக்க மாட்டேன்...!''

''வருத்தமாச் சொல்றீங்களா, சந்தோஷமாச் சொல்றீங்களா?''

முதல் நாள் சண்டையிட்ட சர்தார்ஜிகள் முகத்தில் சிரிப்பு வருகிறது.

நாங்கள் பாடுகிறோம். அவர்கள் எழுந்து அருகில் வருகிறார்கள்.

வண்டியின் பக்கவாட்டில் குஜராத்தி தாளம் போடுகிறார்.

''போலே போலே போலே போலே போலே''

— உற்சாகத்தில் சர்தார்ஜி குரல் கொடுக்கிறார்.

ஹிந்திப்பாட்டை APK பாடுகிறான். அவர்கள் பதிலுக்குத் தமிழில் பாடி வஞ்சம் தீர்க்கிறார்கள்.

இசையலையில் சிரிப்பலை கலக்கிறது.

''வாஹ், வாஹ்'' என்று முஸ்லீம்கள் வரவேற்கிறார்கள். வெளியே ஜன்னலில் எங்கிருந்தோ சிறுவர்கள் முளைக்கிறார்கள். வெற்றுடம்பில் ஒன்றுபட்ட இந்தியச் சிறுவர்கள்.

காற்றில் பாடல் நிறைவதைக் காண வந்திருக்கிறார்கள்.

ராமேஸ்வரம் போகிற பாட்டி டப்பாவில் லட்டு எடுத்து வெளியே சிறுவனிடம் நீட்டுகிறாள்.

''வேண்டாம். நாங்க பாட்டு கேட்கத் தான் வந்தோம்'' — தயக்கத்துடன் சிறுவன் மறுக்கிறான்.

''உன் பாட்டி கொடுத்தால் மறுப்பாயா?'' — சுருங்கிய முகத்தில் சூரிய மஞ்சள் பூசிப் பாட்டி சிரிக்கிறாள்.

அன்பிற்கு ஈடு இணை உலகத்தில் உண்டோ? வயல்வெளியில் காற்றடித்துப் பச்சை நகர்கிறது. வண்டியும் குரல் கொடுத்துப் புறப்படுகிறது. வெளியே சிறுவர்கள் சிரித்தபடி கையாட்டுகிறார்கள்.

ஒலித்த பாடல்களின் மெட்டுகள் வயல் வெளியில் ரொம்ப நாளைக்கு நிறைந்திருக்கும்.



● ஒய். ஜி. மதுவந்தி, பத்மா சுப்ரமண்யத்தின் பதின்மூன்று வயது மாணவி. கலைக் குடும்பத்தில் பிறந்த பாக்கிய சாலி. தந்தை நடிகர் ஒய். ஜி. மகேந்திரா; தாய் சுதா, சிறந்த பாடகி. சிறு வயது முதலே பாட்டி திருமதி ஒய். ஜி. பி. யின் அபரிமிதமான ஊக்கு விப்பும் கிடைத்தது. நடனத்துக்கு மட்டுமின்றி இசை மற்றும் பள்ளிப் படிப் புக்கும் தகுதியடிப்படையி லான உதவித் தொகைகள் பெற்று வரும் மதுவந்தி 'டாக்டர் பத்மா சுப்ர மண்யத்தை குருஜியாக அடைந்தது என் பூர்வ ஜன்மத்துப் புண்ணியத் தால்தான்' என்கிறார்.

நாட்டிய மணிகள் நால்வர்!

● பம்பாய் குரு ராஜி நாராயண் மாணவி பவானி கிருஷ்ணகுமார். ஒரு குழந்தைக்குத் தாயாகி, குடும்பத்தை நடத்தும் அதே அக்கறையோடு நாட்டியமும் கற்று வருகிறார் பவானி. தனியாகவும் பல குழுக்களில் இடம் பெற்றும் ஏராளமான முறை மேடையேறிய அனுபவசாலி. நாட்டிய சாஸ்திரம், நட்டுவாங்கம், அரங்க அமைப்பு, ஒப்பனை, பயிற்றுவித்தல் என்று நாட்டியத்தின் பல அம்சங்களை யும் குருவிடம் கற்றுக் கொண்டுள்ளார்.





வண்ணப்படம்: ஜானி

● கே. ஜே. சரஸாவின் ஏராள மாணவியருள் ஒருத்தி ஹேமா ஸ்ரீபால். மிகச் சிறிய வயதிலேயே மேடையேறிய இவரை 'child prodigy' என்று விமர்சகர்கள் குறிப்பிட்டார்கள். பதினோரு வயதுதான் ஆகிறது. இதற்குள் வெளிநாடுகளுக்கெல்லாம் சென்று அரங்கேறி விட்டார். சிறு பிராயத்திலேயே பாவம், தாளம் ஆகியவற்றில் கச்சிதம் இருக்கிறது என்று பலரும் பாராட்டும் பெருமை பெற்றிருக்கிறார் சிறுமி ஹேமா.



வண்ணப்படம்: சுதா ரிஷி

● கிருஷ்ணவேணி லக்ஷ்மணனின் மாணவி ஸ்வாதி தியாகராஜன், இவ்வாண்டு ஜனவரி மாதம் அரங்கேறினார். ஆனால், அதற்கு முன்பே, ரிஷிவாலி பள்ளி மாணவியாக இருந்த போது எம். எல். வி. அவர்கள் தயாரித்த சாகுந்தலம் நாட்டிய நாடகத்தில் துஷ்யந்தனாகப் பங்கேற்று விமர்சகர்கள் மற்றும் கலையுலகப் பிரமுகர்களின் கவனத்தைக் கவர்ந்து விட்டிருந்தார். இலக்கிய மாணவியான ஸ்வாதிக்கு இயற்கை எழிலிலும் ஆழ்ந்த ஈடுபாடு. பள்ளி நாட்களில் இமய மலைச் சாரலைச் சுற்றி வந்த குழுவில் இடம் பெற்றிருந்தார். ஸ்வாதியின் பல்முனை ஆர்வங்கள் அவருடைய நாட்டியத்துக்கு மெருகு சேர்க்கின்றன.



• ராமன்: மோர்சிங்கு வாசிப்பது கலையல்லவா.

மோர்சிங்கு

"மோர்சிங்கு வாசித்தால், நாக்கு அறுந்து போய்விடும் என்று ஒரு தவறான கருத்து பலரிடம் இருக்கிறது" என்று ஆரம்பித்தார் இளம் மோர்சிங்கு கலைஞர் ராமன். "இசைக் கருவிகளிலேயே மிகவும் சிறியது இதுதான். மோர்சிங்கு வாசிப்பதைக் காண முடியுமே தவிர, வாத்தியத்தைப் பார்க்க முடியாது!

"அது நான்கைந்து அங்குல நீளம்தான். சங்கு போன்ற வட்டமான பகுதியைக் குடம் அல்லது சங்கு என்பார்கள். இதன் நடுவே நீளமான மெல்லிய தகடு ஒன்று பொருத்தப் பட்டு இருக்கும். இது அகலம் குறைந்து கொண்டே வந்து நுனி வளைக்கப்பட்ட கம்பியாய் முடியும்.

"இடது கையின் கட்டை விரலாலும் ஆள் காட்டி விரலாலும் குடம் பகுதியைப் பிடித்துக் கொண்டு, அதன் முனையைப் பற்களுக்கிடையே வைத்துக் கொண்டு, வலது கை ஆள்காட்டி விரலால், வளைக்கப்பட்ட நுனிப் பகுதியை மீட்டினால் இசை எழும்பும். இக்கருவி தேனிரும்பையும், பிரத்தியேகத் தகட்டையும் கொண்டு தயாரிக்கப் படுகிறது. தகட்டாலான நாக்கு உடைந்து போனால் ஒன்றிரண்டு தடவை தகடு மாற்றி மறுபடியும் பயன்படுத்த முடியும். மோர்சிங்கு தயாரிப்புக்குப் பிரபலமான ஊர் ராஜபாளையம்தான்.

"அதிக எண்ணிக்கையில் இன்று மோர்சிங்கு வித்வான்கள் இல்லை என்றாலும், புதுக்கோட்டை மகாதேவன், மாயவரம் ராஜாராம், ஸ்ரீரங்கம் கண்ணன் என்று சிலரைக் குறிப்பிடலாம்.

"சீர்காழி சிவசிதம்பரம் நிகழ்ச்சிகளுக்கு நான் மோர்சிங்கு வாசிக்கிறேன். ஒருமுறை விமான நிலையத்தில் பாதுகாப்புச் சோதனைக்காக, மெட்டல் டிடெக்டர் வைத்துப் பார்த்த போது, அது ஒலி எழுப்பிவிட, என் பெட்டியை ஜாக்கிரதையாய்ச் சோதனை போட்டனர். பெட்டியிலிருந்த மோர்சிங்குகளைப் பார்த்து விட்டு, ஏதோ ஆயுதங்கள் என நினைத்து, 'எடுத்துக் கொண்டு போகக் கூடாது' என்று தடை விதித்து விட்டனர். "இது ஆயுதமில்லை. இசைக் கருவி. இதை எடுத்துக் கொண்டு போகா விட்டால் நான் கச்சேரி செய்ய முடியாது" என்று விளக்கியும் பயனில்லை. அவர்களுக்குச் சிறிது நேரம் வாசித்துக் காட்டிய பின்தான், பிரச்னை தீர்ந்தது!" என்று நினைவுகூர்ந்தார் ராமன்.

"பெண்கள் மோர்சிங் கற்றுக் கொள்ள முன்வருவதில்லையே! ஏன்?"

"இன்றைய சூழ்நிலையில், மோர்சிங்குக்கு வாய்ப்புத் தருகிற வித்வான்களே குறைவு. அப்புறம் எப்படிப் பெண்களும் மோர்சிங்கு கற்றுக் கொள்ள முன்வருவார்கள்? அதுமட்டுமின்றி, பார்க்க எளிமையானதாகத் தோன்றினாலும் மோர்சிங்கு வாசிப்பது கஷ்டம். விரல்களாலும் மீட்ட வேண்டும்; காற்றை உள்ளுக்கு இழுத்து, வெளிவிட்டுக் கட்டுப்படுத்தவும் வேண்டும். அப்போதுதான் தொய்வில்லாமல் மோர்சிங்கு வாசிக்க முடியும்."

தொகுப்பு: **எஸ். சந்திரமௌலி.**

பாட்டு வாத்தியார் 1: சே! என்னோட ராசி, ஒரு பொண்ணுக்குப் பாட்டுச் சொல்லிக் கொடுக்க ஆரம்பிச்சா அவளுக்கு ஒரு மாசத்திலேயே கல்யாணம் நிச்சயமாயிடறது!

பாட்டு வாத்தியார் 2: அது பரவாயில்லையே! நான் சொல்லிக் கொடுக்க ஆரம்பிச்ச ஒரு வாரத்திலேயே அந்தப் பெண்ணின் குடும்பம் வீடு மாற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுப் போறது!

— ஜே. எஸ். ஆர்.



சிவகாமியின் சபதம்

முப்பத்தொன்பதாம் அத்தியாயம்

கமலியின் மனோரதம்

விவரிக்க முடியாத இன்பத்தையும் வேதனையையும் ஒருங்கே தந்த, மேற்கூறிய நிழல் நினைவுகளைப் பொறுக்க முடியாமல், சிவகாமி சாளர மாடத்திலிருந்து எழுந்தாள். அறையின் பின்புறக் கதவை ஓசைப் படாமல் மெதுவாய்த் திறந்து கொண்டு பூந்தோட்டத்துக்குள் பிரவேசித்தாள். அப்போது இரவின் மூன்றாம் ஜாமம் நடந்துகொண்டிருந்தது. பிறைச் சந்திரன் விரித்த இளம் நிலவின் மோகன ஒளியில் அந்தப் பூந்தோட்டம் கனவு உலகத்தில் காணும் ஒரு காட்சிபோல் தென்பட்டது.

பூந்தோட்டத்தில் உலாவி வர எண்ணிப் புறப்பட்ட சிவகாமி, வீட்டுச் சுவரோரமாகச் சற்று தூரம் சென்றபோது, பேச்சுக் குரல் கேட்டுத் திடுக்கிட்டு நின்றாள். கமலியும் கண்ணபிரானும்தான் பேசிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் இருந்த அறையின் பின்புறப் பலகணி வழியாக அவர்களுடைய பேச்சு, தெளிவாகக் கேட்டது. அந்தப் பக்கம் போகாமல் திரும்பிவிட வேண்டுமென்று எண்ணிய சிவகாமியின் செவியில், ''மாமல்லர்'', ''குமார சக்கரவர்த்தி'', என்ற வார்த்தைகள் விழுந்தன. பிறகு அவளுடைய கால்கள் திரும்பிச் செல்ல மறுத்துவிட்டன. பலகணியின் அருகில் சுவர் ஓரமாக நின்று, அவர்கள் பேசுவதைக் கேட்டாள்.

''மாமல்லருக்குப் பெண் கொடுக்கிறேன் என்று பாண்டிய மன்னர் தூது அனுப்பியதில் என்ன ஆச்சரியம்? பூலோகத்திலுள்ள ராஜ ராஜாக்கள் எல்லாம் நான் முந்தி, நீ முந்தி என்று அவருக்குப் பெண் கொடுக்கப் போட்டியிட மாட்டார்களா?'' என்றாள் கமலி.

''மாமல்லருக்குச் சீக்கிரத்தில் கல்யாணம் செய்து வைக்க வேண்டுமென்று மகாராணிக்கு ஆசை. மூன்று தேசத்து ராஜாக்களுக்குத் திருமணத் தூது அனுப்ப வேண்டுமென்று ஏற்பாடு செய்திருந்தார். அதற்குள்ளே இந்த யுத்தம் வந்து விட்டதால் அது தடைப்பட்டுப் போயிற்று. இப்போது பாண்டிய ராஜாவே தூது அனுப்பியிருப்பதில் மகாராணிக்கு அசாத்திய சந்தோஷம்!'' என்றான் கண்ணபிரான்.

''சரி. அப்புறம் என்ன நடந்தது?'' என்று கமலி கேட்டாள்.

''அரண்மனையில் மாமல்லரை விட்டேன். உடனே, தாயாருக்கும் பிள்ளைக்கும் சண்டை ஆரம்பமாகிவிட்டது!....''

''சண்டையா! எதற்காக?'

''குமார சக்கரவர்த்தியிடம் 'கல்யாணம்' என்று யாராவது சொன்னாலே, அவருக்குப் பிரமாதமான கோபம் வந்துவிடுகிறது. 'இதற்குத்தானா இவ்வளவு அவசரமாகக் கூப்பிட்டு அனுப்பினீர்கள்? போர்க் களத்திலிருந்துதான் ஏதோ செய்தி வந்திருக்கிறதாக்கும் என்று நினைத்தல்லவா ஓடி வந்தேன்?' என்று அவர் மகாராணியிடம் கோபமாகப் பேசினார்...! கமலி! உனக்கு ஒரு இரகசியம் சொல்லட்டுமா? மிகவும் முக்கியமான இரகசியம். கேட்டால் பிரமித்துப் போவாய்!'' என்றான் கண்ணன்.

''பெண்பிள்ளைகளிடம் இரகசியம் சொல்லக் கூடாது என்று உனக்குத் தெரியாதா, கண்ணா?'' என்றாள் கமலி.

''ஓஹோ! நீ பெண்பிள்ளையா? மறந்து போய்விட்டேன்!'' என்று கண்ணன் நகைத்

அமரர் கல்கி

துக் கொண்டே கூறினான்.

''ஆமாம்! நீ ஆண்பிள்ளை என்பதையும் மறந்து போய் விடுவாய்! யுத்தம் வருகிற தல்லவா?''

''யுத்தம் வரட்டும்! அப்போது தெரிகிறது. யார் ஆண்பிள்ளை, யார் பெண்பிள்ளை யென்று! நீ என் காலில் விழுந்து, 'கண்ணா! யுத்தத்துக்குப் போகாதே!' என்று கதறப் போகிறாய். நான் உன்னை உதறித் தள்ளி விட்டுப் போகப்போகிறேன்.....''

''அப்படியா நினைத்துக் கொண்டிருக் கிறாய் உன் மனத்தில்? யுத்தம் கிட்டி வரும் போது நீ போகாவிட்டால் நானே உன்னைக் கழுத்தைப் பிடித்துத் தள்ளமாட்டேனா?... கல்யாணம் ஆன பிறகு நீ இப்படிப் பயங்கொள்ளியாகப் போனதைப் பார்த்து விட்டுத்தான் குமாரச் சக்கர வர்த்தி 'கல்யாணம்' என்றாலே எரிந்து விழுகிறார் போலிருக் கிறது!''

''இப்படித்தானே நீ எண்ணிக் கொண்டிருக்கிறாய்? யுத்தம் வந்தி ருக்கிறபடியால் குமாரச் சக்கர வர்த்தி கல்யாணம் வேண்டாம் என் கிறார் என்றுதான் எல்லோருமே நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். பிசகு. கமலி. பெரும் பிசகு!''

''எது பிசகு, கண்ணா?''

''எல்லாரும் நினைத்துக் கொண்டிருப் பது பிசகு. மாமல்லர் கல்யாணப் பேச்சை வெறுப்பதற்கு வேறு காரணம் இருக்கிறது. அது பெரிய இரகசியம். அதிலும் உன் தங்கச்சி சிவகாமியைப் பற்றிய இரகசியம், கமலி!''

''என்ன? என்ன? என் தங்கச்சியைப் பற்றி எனக்குத் தெரியாத இரகசியம் என்ன இருக்கிறது? ஏதாவது இசை கேடாகச் சொன்னாயோ, பார்த்துக்கொள்!''

''இசைகேடு ஒன்றுமில்லை; பெருமை யான விஷயந்தான்! — சொன்னால், எனக்கு என்ன தருகிறாய்?''





''சொல்லிவிட்டுக் கேள்! பொருளைப் பார்த்து விட்டல்லவா விலையைத் தீர்மானிக்க வேண்டும்?'' என்றாள் கமலி.

''அப்புறம் ஏமாற்றக்கூடாது, தெரியுமா? பல்லவ சாம்ராஜ்யத்தின் குமார சக்கரவர்த்தி, — வீரத்தில் அர்ஜுனனையும், அழகில் மன்மதனையும், ரதம் ஓட்டுவதில் கண்ணபிரானையும் ஒத்தவரான மாமல்ல நரசிம்மர், — உன்னுடைய தங்கச்சி சிவகாமியின்மேல் காதல் கொண்டிருக்கிறார், கமலி!''

''ஆ!'' என்னும் சத்தம் மட்டுந்தான் கமலியின் வாயிலிருந்து வந்தது. அவள் ஆச்சரியத்தினால் திகைத்துவிட்டாள்.

வெளியிலிருந்து கேட்டுக் கொண்டிருந்த சிவகாமியின் நெஞ்சில் அந்த 'ஆ!' சத்தமானது கூரிய அம்பைப்போல் புகுந்தது. தன்னிடம் இவ்வளவு ஆசையும் நம்பிக்கையும் வைத்துள்ள அருமைத் தோழியிடம் தனது அந்தரங்கத்தை வெளியிடாமல் இத்தனை நாளும் ஒளித்து வைத்திருந்தது பற்றி அவள் வெட்கினாள். அறைக்குள்ளே சம்பாஷணை மேலும் தொடர்ந்து நடந்தது.

''கமலி! நான் சொன்ன செய்தி உனக்கு அதிசயமாயிருக்கிறதல்லவா?'' என்று கண்ணபிரான் கேட்டான்.

''அதிசயம் என்ன? நம்முடைய குமார சக்கரவர்த்தி புத்திசாலி என்றுதான் அடிக்கடி நான் சொல்லியிருக்கிறேனே? அதனால்தான் அவருக்கு என் தங்கச்சியின் மேல் மனம் சென்றது'' என்று கமலி சமத்காரமாக விடை சொன்னாள்.



''ஓஹோ! அப்படியா? நீயும் உன் தங்கையும் சேர்ந்து பேசிக் கொண்டுதான் இந்த வேலை செய்தீர்கள் போலிருக்கிறது! உன்னுடைய வலையில் என்னை நீ போட்டுக் கொண்டாய்! உன் தங்கச்சி மாமல்லரையே வலை போட்டுப் பிடித்துவிட்டாள்!''

''என்ன சொன்னாய்?'' என்று கமலி கம்பீரமாகக் கேட்டுவிட்டு மேலும் சொல்லம்புகளைப் போட்டாள் — ''நானா உன்னைத் தேடி வந்து என்னுடைய வலையில் போட்டுக் கொண்டேன்? நானா வீட்டின் மூலை முடுக்குகளிலெல்லாம் உன்னைத் தொடர்ந்து வந்து கையைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு, 'கண்ணே! பெண்ணே! நீ கருணை செய்யாவிட்டால் நான் உயிரை விடுவேன்!' என்று கதறினேன்? நானா 'என்னைக் கல்யாணம் செய்து கொள்' என்று கெஞ்சினேன்?...''

''இல்லை, கமலி, இல்லை! நீ உன்னுடைய கண்ணாகிற வலையை வெறுமனே விளையாட்டுக்காக விரித்தாய்! அதிலே நானாக ஓடி வந்துதான் அகப்பட்டுக் கொண்டேன்!''

''நம்முடைய கதை இருக்கட்டும். மாமல்லருக்கும் என் தங்கைக்கும் நேசம் என்கிற விஷயம் உனக்கு எப்படித் தெரிந்தது? அதைச் சொல்லு!'' என்றாள் கமலி.

''ஆ! பாம்பின் கால் பாம்புக்குத் தெரியாதா, என்ன? கள்ளனுக்குத் தெரியாதா கள்ளனின் சமாசாரம்? நான் உன்னை உன் தகப்பனார் வீட்டில் அந்தக் காலத்தில் என்ன மாய்ப் பார்த்தேன்! ஞாபகம் இருக்கிறதா? அம்மாதிரியே உன் தங்கையை இப்போது மாமல்லர் ஆர்வத்தோடு பார்க்கிறார்!''

''இவ்வளவுதானா?''

''இன்னும் என்ன வேண்டும்? நாவுக்கரசர் மடத்தில் அபிநயம் பிடித்தானதும் உன் தங்கை மூர்ச்சையாகி விழுந்து விட்டாள் என்று சொன்னேனல்லவா? உடனே மாமல்லர் ஓடிவந்து சிவகாமியைத் தூக்கி ஆயனர் மடியின் மீது வைத்தார். கமலி, அப்போது அவருடைய கைகளும் தேகமும் எப்படிப் பதறின தெரியுமா? இதுவரையில் எனக்குக் கொஞ்சம் சந்தேகமாயிருந்தது. இன்றைக்குத்தான் சர்வ நிச்சயமாயிற்று.''

இதைக் கேட்டுக்கொண்டிருந்த சிவகாமியின் தேகமெல்லாம் சிலிர்த்தது. விம்மலுடன் அழுகை வரும்போலிருந்தது. சமாளித்துக் கொண்டு மேலும் நடந்த சம்பாஷணையைக் கேட்டாள்.

''இவ்வளவு கூர்மையாய்க் கவனித்தாயே; நீ ரொம்பப் புத்திசாலிதான்! மாமல்லரும் பாக்கியசாலிதான்!'' என்றாள் கமலி.

''மாமல்லர் பாக்கியசாலி என்றா சொல்கிறாய்? இதனால் ஏற்படப் போகிற சங்கடங்களையெல்லாம் நினைத்தால்....''

''சங்கடம் என்ன வந்தது?''

''குமார சக்கரவர்த்தியின் கல்யாணம்

என்றால், நம்முடைய கல்யாணத்தைப் போல் என்று நினைத்துக் கொண்டாயா? எத்தனை எத்தனையோ யோசனைகள் செய்வார்கள்....."

"கண்ணா! என் தங்கையை மட்டும் சாமானியமான பெண் என்று நினைத்தாயா? தமயந்தியை மணந்துகொள்ளத் தேவலோகத்திலிருந்து தேவர்கள் வந்தது போல் சிவகாமியைத் தேடிக் கொண்டு வர மாட்டார்களா? ஏதோ தமயந்தி மனம் வைத்து நள மகாராஜனுக்கு மாலையிட்டாள்!....."

"ஆனால் தமயந்தி அரண்மனையில் பிறந்த ராஜகுமாரியாச்சே, கமலி!"

"என் தங்கை ஆயிரம் ராஜகுமாரிகளுக்கு இணையாவாள். கண்ணா! நீ வேணுமானால் பார்! என்னுடைய மனோரதம் ஒரு நாள் கட்டாயம் நிறைவேறப் போகிறது!"

"அது என்ன மனோரதம் கமலி?"

"இந்த யுத்தமெல்லாம் முடிந்த பிறகு, மாமல்லருக்கு மகுடாபிஷேகம் நடக்கப் போகிறது. தங்க ரதத்தில், நவரத்ன சிங்காசனத்தில் அமர்ந்து நரசிம்ம சக்கரவர்த்தி இராஜ வீதிகளில் பவனி வருகிறார். அவருக்குப் பக்கத்தில், தேவேந்திரனுக்கு அருகில் இந்திராணியைப் போல் என் தங்கை சிவகாமி அமர்ந்திருக்கிறாள். தங்க ரதத்தின் முன் தட்டில் நீ ஜம் என்று உட்கார்ந்து ரதத்தை ஓட்டிக்கொண்டு வருகிறாய். நான் அரண்மனைக் கோபுர வாசலில் மேல் மாடத்தில் நின்று கொண்டிருக்கிறேன். ரதம் அரண்மனை வாசலில் வந்து நின்றதும் கூடை கூடையாக மல்லிகை மலர்களையும் சண்பகப் பூக்களையும் அவர்கள் மேல் கொட்டுகிறேன். நடுவில் உன் தலையிலும் ஒரு கூடைப் பூவைக் கவிழ்க்கிறேன். — இப்படி நடக்கவேண்டும் என்பதுதான் என் மனோரதம், கண்ணா!"

"கமலி, உன் மனோரதம் நிறைவேறினால் எனக்கும் அளவில்லாத சந்தோஷந்தான்" என்றான் கண்ணன்.

சிவகாமி திரும்பித் தன்னுடைய அறைக்குள்ளே சென்று படுக்கையில் படுத்துக் கொண்டாள். இருதயத்தின் அடிவாரத்திலிருந்து பொங்கி வந்த விம்மலையும் அழுகையையும் ஆனமட்டும் முயன்றும் அவளால் அடக்கிக்கொள்ள முடியவில்லை.

இரவு நாலாவது ஜாமத்தில், விழிப்புமில்லாமல் நித்திரையுமில்லாமல் அரைத் தூக்க நிலையில் சிவகாமி படுக்கையில் புரண்டு கொண்டிருந்த போது, முன்னர் அவள் மனக் கண்முன் தோன்றிய நிழல் தோற்றங்கள் உருவம்

எடுக்க ஆரம்பித்தன.

ஒரு செண்பக மரத்தின் கிளையில் இரண்டு புறாக்கள் உட்கார்ந்து ஒன்றோடொன்று கொஞ்சி விளையாடிக் கொண்டிருக்கின்றன. திடீரென்று சுற்றியிருந்த மரங்கள் எல்லாம் தீப்பட்டு எரியத் தொடங்குகின்றன. ஆண் புறாவானது பெண் புறாவைப் பார்த்து, "நீ இங்கேயே இரு; நான் திரும்பி வந்து உன்னைக் காப்பாற்றுகிறேன்!" என்று சொல்லிவிட்டுப் பறந்து செல்கிறது. அது போன வழியையே பெண் புறா பார்த்துக் கொண்டிருக்கிறது. தீயோ நாலு புறமும் நெருங்கி வந்து கொண்டிருக்கிறது. ஆண் புறா திரும்ப முடியாதபடி பெண் புறாவை நாலாபுறமும் புகை வந்து சூழ்ந்து விடுகிறது. அந்த நேரத்தில் அவ்விதம் புகையினால் சூழப்பட்டிருப்பது பெண் புறா அல்ல — தானே என்று சிவகாமி பிரமையுறுகிறாள்.

கற்பனை உலகக்காட்சி மாறுகிறது. மல்லிகைத் தோட்டத்தில் ஆணும் பெண்ணுமான ஒரு கலைமானும் ஒரு புள்ளிமானும் துள்ளி விளையாடிக் கொண்டிருக்கின்றன. விளையாட்டின் இடையே புள்ளிமானானது மல்லிகைப் புதருக்கு அருகில் மறைந்து நிற்கிறது. மல்லிகைப் புதரில் பூத்துச் சிரித்திருந்த வெள்ளி மலர்களுக்கும், புள்ளி மானின் மீது அள்ளித் தெளித்திருந்த வெள்ளிப் பொட்டுகளுக்கும் வித்தியாசம் தெரியாமல் கலைமான் புள்ளி மானைத் தாண்டிக் கொண்டு அப்பால் போகிறது. அதைக் கண்டு புள்ளிமான் சிரிக்கிறது. இப்படி அவை விளையாடிக் கொண்டிருக்கையில், ஒரு தடவை பெண்மான் ஒளிந்து கொண்டிருந்த போது சற்றுத் தூரத்தில் ஒரு மல்லிகைப் புதரில் இரண்டு பிரகாசமான நட்சத்திரங்கள் ஜொலிப்பதைக் கண்டு அதிசயித்தது. பிறகு, அவை நட்சத்திரங்கள் அல்ல,— அனல் கட்டிகள் என்று தோன்றியது. பின்னர், அந்த இரண்டு அனல் கட்டிகளும் ஒரு பெரிய புலியின் இரண்டு கண்கள்தான் என்று தெரியவே, பெண் மானின் சகல நாடியும் ஒடுங்கிவிட்டது. கலைமானைக் கூவி அழைக்க அது முயன்றது. ஆனால், அதன் தொண்டையிலிருந்து சத்தமே உண்டாகவில்லை.

மேலே என்ன ஆயிற்று? புள்ளிமான் தப்பித்துச் சென்றதா? கலைமானுடன் சேர்ந்ததா? — அதுதான் தெரியவில்லை. அத்தகைய பயங்கர அபாயத்தில் அகப்பட்டுக்கொண்டிருந்த பெண்மான் உண்மையில் மான் அல்ல,— தானே அந்த மான் என்று மட்டும் சிவகாமிக்கு அந்தக் கணத்தில் தெரிய வந்தது.

நாற்பதாம் அத்தியாயம்
கட்டாயப் பிரயாணம்

மகேந்திர விடுதியிலிருந்து அதிகாலையில் கிளம்பிய பரஞ்சோதி அன்று பகலெல்லாம் பிரயாணம் செய்து, வடபெண்ணையுடன் பாபாக்கினி நதி கலக்கும் இடத்திலுள்ள புத்த விஹாரத்தைச் சூரியாஸ்தமன நேரத்தில் அடைந்தான்.

விஹாரத்தின் வாசலில் புத்த பிக்ஷு ஒருவர் நின்று கொண்டிருந்தார். மாலை நிறத்து மஞ்சள் வெயிலில் பிக்ஷுவின் காவி உடையானது தங்க நிறமாகப் பிரகாசித்தது. பரஞ்சோதி குதிரையிலிருந்து இறங்கிப் பிக்ஷுவை அணுகியதும், அவர் இவனை என்னவோ கேட்டார். அவர் பேசிய பாஷை பரஞ்சோதிக்குப் புரியவில்லை. ஆனாலும் தான் யார் என்பதை விசாரிக்கிறார் என்று ஊகித்துக் கொண்டு, தமிழிலேயே, தான் நாகார்ஜுன பர்வதத்துக்குப் போவதாகவும், தன்னை இவ்விடம் தங்கி வழி கேட்டுக் கொண்டு போகும்படி நாகநந்தியடிகள் பணித்தார் என்றும் கூறினான்.

நாகநந்தி என்று கேட்டதும் அந்தப் பிக்ஷுவின் முகத்தில் மாறுதல் காணப்பட்டது. சமிக்ஞையினால் "கொஞ்சம் இங்கேயே இரு!" என்று பரஞ்சோதிக்குச் சொல்லிவிட்டு, பிக்ஷு உள்ளே சென்றார். சற்று நேரத்துக்கெல்லாம் அவர் திரும்பி வந்து, பரஞ்சோதியையும் விஹாரத்துக்குள் அழைத்துச் சென்றார். அந்தப் பௌத்த விஹாரம் காஞ்சியில் பார்த்த இராஜ விஹாரத்தைப் போலக் கல், மரம், சுண்ணாம்பினால் கட்டப்பட்டதல்லவென்பதையும், குன்றிலே குடைந்து அமைக்கப்பட்டதென்பதையும் பரஞ்சோதி கவனித்தான். காஞ்சி இராஜ விஹாரத்தைப் போல் இது அவ்வளவு பெரிதாக இல்லை; அவ்வளவு விலையுயர்ந்த பூஜாத்திரவியங்களும் இங்கே காணப்படவில்லை. ஆனால் விஹாரத்தின் அமைப்பு முறை அதேமாதிரி இருந்தது. நடுவில் பிக்ஷுக்கள் கூடிப் பிரார்த்தனையும் தியானமும் செய்வதற்குரிய சைத்

க்ளியரெஸில் சருமம் எனில் அதிகத் தெளிவான சருமம்

காலேஜில் நீங்கள் பயாலஜி, ஜியாலஜி எதை எடுத்தாலும் நண்பர்களிடையே நாயகியாகத் திகழ்ந்திட க்ளியரெஸில் கம்பல்ஸரி.



காரணம் க்ளியரெஸில் சருமம் எனில் அதிகத் தெளிவான சருமம்.

நண்பர் குழாம் ஆக்கிக் கொள்ளும் விஷயத்தில் இந்த க்ளியரெஸில் ஃபார்முலா ஒருபோதும் ஃபெயிலாகாது. சருமம் அதிகத் தெளிவாக இருந்தால் எல்லோர் கவனத்தையும் உங்கள்பால் ஈர்க்கச் செய்யும்.

க்ளியரெஸில் பருக்களில் மூன்று வழிகளில் ஆற்றலுடன் செயல்புரிகிறது.

ஒன்று — பருவுக்குள் ஊடுருவிச் செல்கிறது. இரண்டு — கூடுதல் எண்ணெய்ப் பசையை நீக்குகிறது. மூன்று — பருவைக் காயவைத்துப் போக்குகிறது.

க்ளியரெஸில் சருமம் எனில் அதிகத் தெளிவான சருமம்





பருக்களுக்கு சிகிச்சை அளிப்பதில் க்ளியரெஸில்தான் உலகிலேயே முதன்மையானது என்பது இதனால் தெள்ளத்தெளிவாகிறது.

பருக்கள் உங்கள் வாழ்க்கைக்கு முட்டுக் கட்டையாக இருக்க விடாதீர்கள்.

க்ளியரெஸில் உபயோகியுங்கள். நண்பர் குழாம் ஏற்படுத்திக் கொள்ளும் விஞ்ஞானத்தில் ஃபர்ஸ்ட்-க்ளாஸ் மதிப்பெண் பெறுங்கள்.



பருக்களுக்கு சிகிச்சை அளிப்பதில் உலகிலேயே முதன்மையானது.

க்ளியரெஸில் சருமம் எனில் அதிகத் தெளிவான சருமம்

Enterprise/PG/CC/P/3/Tm b



''வீணை வித்துவான் பொருத்தமான வேலையில்தான் இருக்கிறார் என்கிறாயே, எப்படி?''

''அவர் 'தந்தி' ஆபீசிலேதானே வேலை செய்கிறார்!''

— ராகவ்.





இவர் கிண்டலும் இவர் பதிலும்

● வீணை பாலசந்தர் ஒரு முறை சீனாவில் ஒரு கலைநிகழ்ச்சிக்கு அகில இந்தியக் குழுவினருடன் சென்றிருந்தார். உடன் சென்ற அவருடைய நண்பரும் இந்துஸ்தானி இசைக் கலைஞருமான கௌதம் என்பவர் இரவு சீக்கிரமே குறட்டை விட்டுத் தூங்க ஆரம்பித்தார். பாலசந்தர் நகைச்சுவையாக, ''கௌதமின் குறட்டையும் சுருதிபேதமாகவே உள்ளது'' என்றார். பிற்பாடு அதை அறிந்த அக்கலைஞர் தம் நண்பரிடம், ''குறட்டை எப்படி இருந்தாலும் பரவாயில்லை. ஆனால் நம் விமர்சனங்கள் பிறருடைய ரசனை என்னும் சுருதியோடு இணைந்திருப்பது நல்லதல்லவா?'' என்றார்.

ஆதாரம்: 'சுருதி' இதழில் வெளியான கடிதம்.

தகவல்: அ. ஷண்முகசுந்தரம்.

● எட்டையாபுரம், பருவமழை குறைந்த, வறட்சியான ஊராக இருந்த போதிலும், அங்குள்ள ஸ்ரீ முத்துஸ்வாமி தீக்ஷிதர் நினைவாலயத்தில், புதிதாகப் போடப் பட்டிருக்கும், குழாய்க் கிணறில், போதுமான தண்ணீர் வற்றாமல் கிடைக்கிறது.

இந்த நினைவாலயத்தின் பின்பக்கமுள்ள காலி இடத்தில், பாளையங்கோட்டை பக்தர் ஒருவர் ஒரு கல்யாண மண்டபம் கட்டிக் கொடுத்திருக்கிறார். ''நாத ஜோதி ஸ்ரீ முத்துஸ்வாமி தீக்ஷிதர் திருமண மண்டபம்'' ஏழைகளுக்குக் குறைந்த வாடகைக்குத் தரப்படுகிறது. அதன் வருமானத்தை ஸ்ரீ தீக்ஷிதர் அவர்கள் ஜெயந்தி மற்றும் விழாக்களுக்கு உபயோகிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

யமும் அதன் பின்பக்கத்துப் பாறைச் சுவரில் பிரம்மாண்டமான புத்தர் சிலையும் இருந்தன. அந்தப் புத்தர் சிலையும், சிலைக்கு மேலே கவிந்திருந்த போதி விருட்சமும், புத்தர் மீது புஷ்பமாரி பொழிந்து கொண்டிருந்த கந்தர்வ வடிவங்களும், — எல்லாம் பாறையில் குடைந்து அமைக்கப்பட்டிருந்தன. அலங்கார தீபங்கள் வரிசை வரிசையாக ஒளிர்ந்தன. புத்தபகவானுக்கு எதிரில் பலவித வர்ண மலர்கள் தனித் தனிக் கும்பலாகக் குவிக்கப்பட்டுக் கண்ணைக் கவரும் காட்சியளித்தன. புஷ்பங்களின் நறுமணத்துடன் அகிற் புகையின் வாசனையும் சேர்ந்து சிந்தையை ஒருமுகப்படுத்த உதவி செய்தது.

சைத்யத்துக்கு இருபுறத்திலும் புத்த பிக்ஷுக்கள் தங்குவதற்கும் மாணாக்கர்கள் கல்வி பயில்வதற்கும் உரிய குகை அறைகள் குடையப்பட்டிருந்தன. ஒரு பக்கத்தின் கோடியில் மச்சுப்படிகள் போன்ற படிக்கட்டுகள் காணப்பட்டன. அந்தப் படிகளின் வழியாகப் பரஞ்சோதியைப் பிக்ஷு அழைத்துச் சென்றார். கீழேயுள்ள அறைகளைப்போல் மேலேயும் பாறையில் குடையப்பட்ட அறைகள் காணப்பட்டன. அவற்றில் விசாலமான அறை ஒன்றில் பத்மாசனமிட்டு அமர்ந்திருந்த பெரிய புத்த பிக்ஷுவிடம் பரஞ்சோதி அழைத்துச் சென்று விடப்பட்டான்.

அந்த விஹாரத்தின் தலைமைப் பிக்ஷு அவர்தான் என்பதைப் பரஞ்சோதி ஊகித்துக் கொண்டு அவரைக் கைகூப்பி வணங்கினான். ''புத்தம் சரணம் கச்சாமி,'' தர்மம் சரணம் கச்சாமி,'' ''சங்கம் சரணம் கச்சாமி,'' என்று தலைமைப் பிக்ஷு கூறி மூன்று முறை புத்த பகவானுக்கு வணக்கம் செலுத்தி விட்டு, பரஞ்சோதியைப் பார்த்துத் தமிழ் பாஷையில் ''குழந்தாய்! நீ யார்? என்ன காரியமாக வந்தாய்? யார் உன்னை அனுப்பினார்கள்?'' என்று கேட்டார்.

பரஞ்சோதி நாகநந்தியடிகள் தன்னை ஓலையுடன் அனுப்பி வைத்தது பற்றி விவரமாகக் கூறினான்.

''நாகநந்தி கொடுத்தனுப்பிய ஓலை எங்கே? அந்த ஓலையை நான் பார்க்கலாமா?'' என்று பிக்ஷு கேட்டார்.

''மன்னிக்க வேண்டும். ஓலையை சத்யாச்ரயரைத் தவிர வேறு யாரிடமும் கொடுக்கக் கூடாதென்று நாகநந்தியடிகளின் கட்டளை'' என்றான் பரஞ்சோதி.

சத்யாச்ரயர் என்ற பெயரைக் கேட்டதும் பிக்ஷுவின் முகத்தில் ஒரு மர்மமான புன்னகை தோன்றியது. அதைப் பரஞ்சோதி கவனித்தானாயினும் அதன் பொருளை அறிய முடியவில்லை.

இனி உலகம் உங்கள் உள்ளங்கையில்...



உலகின் எந்தப் பகுதியாக இருந்தாலும், அப்பகுதியில் வாழும் மக்களுடன் நீங்கள் உரையாட, உறவாட ஆங்கில மொழி தெரிந்திருந்தால் போதும் என்பதுஉங் களுக்குத் தெரியும். இத்தகையச் சிறப்புப் பெற்ற உலக மொழியான ஆங்கிலத்தை நீங்கள் எளிய முறையில் தமிழில், தபால் மூலம் கற்றுக் கொள்ள இதோ ஓர் அரிய வாய்ப்பு.

ஆங்கிலத்தில் பேசினால் ஏதாவது தவறாகப் பேசி விடுவோமோ என்ற தயக்க மின்றிச் சரளமாக உரையாட,

இலக்கணப் பிழை ஏற்பட்டு விடுமோ என்ற பயமின்றி ஆங்கிலத்தில் கடிதங்கள், கட்டுரைகள் எழுத தமிழகத்தின் தலைசிறந்த கல்வி நிலையம் என்ற தனிப்புகழ் பெற்ற விவேகானந்தா கல்வி நிலையத்தினர் மிகச் சிறந்த முறையில் பயிற்சியளித்து வருகிறார்கள்.

வீட்டிலிருந்தபடியே ஓய்வு நேரத்தில் நீங்களும் இப்பயிற்சியை மேற் கொள்ளலாம்.

நேர்முகப் பயிற்சியும் உண்டு

இன்றே உங்களது விருப்பத்தை ஒரு போஸ்ட் கார்டில் எழுதி கீழ்கண்ட முகவரிக்கு அனுப்புங்கள். பயிற்சி பற்றிய விவரங்களை உடனே உங்களுக்கு அனுப்பி வைப் பார்கள். இனியும் தயக்கம் ஏன்? இன்றே தொடர்பு கொள்ளுங்கள்.

இனி உலகம் உங்கள் உள்ளங்கையில்!

☎ 441216

விவேகானந்தா கல்வி நிலையம்

தபால் பெட்டி எண்: 4986, 9, நடேசன் தெரு, தி.நகர், சென்னை-17.

NAGA





''வித்வான் பக்கத்தில் இரண்டு சிஷ்யர்கள் உட்கார்ந்து பாடுகிறார்கள். மேடைக்கு வெளியே நின்று கொண்டு நான்கு சிஷ்யர்கள் பாடுகிறார்களே, பார்த்தியா?''

''அந்த நான்கு பேரும் அவரை வெளியிலிருந்து கொண்டு சப்போர்ட் செய்கிறார்களாம்!''

— ஜம்புநாத்.

''நாகநந்தியடிகள் என்ன கட்டளையிட்டாரோ, அவ்விதமே செய். இன்றிரவு இங்கேயே படுத்துக்கொள். ஸ்ரீபர்வதத்துக்குப் போகும் வழியெல்லாம் இப்போது அபாயம் நிறைந்ததாயிருக்கிறது. இன்று ராத்திரியே அவ்விடத்துக்குப் போகும் வீரர்கள் சிலர் இங்கே வரக்கூடும். அவர்களுடன் சேர்த்து அனுப்பி வைக்கிறேன். அவர்கள் உனக்கு வழி காட்டுவதுடன் பத்திரமாகவும் கொண்டு போய்ச் சேர்ப்பார்கள்!'' என்று ஆசார்ய பிக்ஷு கூறி, இன்னொரு பிக்ஷுவைப் பார்த்துச் சமிக்ஞை செய்தார்.

அவர் பரஞ்சோதியை அங்கிருந்து அழைத்துச் சென்று உணவருந்தச் செய்த பிறகு, கீழே ஓர் அறையில் அவன் படுத்துக் கொள்வதற்கு இடம் காட்டினார். சென்ற இரவில் நல்ல தூக்கம் இல்லாமையாலும் நெடுந்தூரப் பிரயாணத்தினாலும் களைப்புற்றிருந்த பரஞ்சோதி, இன்று படுத்தவுடன் நிம்மதியாகத் தூங்கலானான்.

தோளைப் பிடித்து யாரோ குலுக்குவதறிந்து பரஞ்சோதி திடுக்கிட்டுக் கண் விழித்தான். முதல் நாள் அவனை மடத்துக்குள் அழைத்து வந்த பிக்ஷுதான் அவனை எழுப்பிக் கொண்டிருந்தார். பக்கத்தில் பெரிய பிக்ஷுவும் நின்றார்.

''தம்பி! நாகார்ஜுன பர்வதத்துக்குப் போவோர் புறப்படுகிறார்கள், நீயும் கிளம்பு!'' என்றார் பெரிய பிக்ஷு.

பரஞ்சோதி அவசரமாக எழுந்து, தலை மாட்டில் வைத்திருந்த ஓலைக் குழாயை எடுத்து இடுப்பில் செருகிக் கொண்டான். பிக்ஷுக்களைப் பின்தொடர்ந்து மடத்தின் வாசலுக்கு வந்தான்.

அங்கே அவனுடைய குதிரையைத் தவிர, இன்னும் ஆறு குதிரைகளும், ஒவ்வொரு குதிரைக்கும் அருகில் ஆஜானுபாகுவான வீரன் ஒருவனும் நிற்பதைக் கீழ் வானத்தில் தோன்றிய பிறை மதியின் மங்கிய நிலவொளியில் பரஞ்சோதி கண்டான்.

''இந்த வீரர்கள் அவசர காரியமாக ஸ்ரீபர்வதத்துக்குப் போகிறார்கள். இவர்களுடன் போனால் குறுக்கு வழியாக வெகு சீக்கிரம் போய்ச் சேர்ந்துவிடலாம்'' என்று பெரிய பிக்ஷு கூறினார்.

மனத்தில் காரணம் தெரியாத தயக்கத்துடன் பரஞ்சோதி குதிரை மீது ஏறினான். குதிரைகள் வடபெண்ணை நதிக்கரையோடு மேற்குத் திசையை நோக்கி விரைந்து சென்றன.

(தொடரும்)

சரஸ்வதி கையிலிருந்த சின்ன வீணை!

சுமார் ஐந்நூறு கச்சேரிகள் செய்திருக்கிறார் வி.எஸ். ரங்கராஜன். மூன்று காஸெட்டுகளும் வழங்கியுள்ளார். இதில் என்ன சிறப்பு என்கிறீர்களா? இவர் கச்சேரி செய்வது இரண்டே அடி நீளமுள்ள 'மினி' வீணையில்! ரங்கராஜனைச் சந்தித்து உரையாடினார் காயத்ரி. உரையாடலின் தொகுப்பு:

காயத்ரி: இந்தச் சின்ன வீணை எங்கே கிடைத்தது ...?

ரங்கராஜன்: எப்படிக் கிடைத்தது என்பது சுவாரஸ்யமான கதை. '79 இல் மயிலை கேசவப் பெருமாள் கோயில் உற்சவத்தின் போது தாயார் விக்கிரகத்தை.. சரஸ்வதியாக அலங்காரம் செய்து, கையில் ஒரு சின்ன வீணையையும் கொடுத்திருந்தார் பட்டாச்சாரியார். அது வழக்கமான அட்டை வீணை இல்லை; நிஜ வீணை என்பது என்னைக் கவர்ந்தது. அந்தக் குட்டி வீணையையே எடுத்து என் கையில் கொடுத்து, பட்டர் வாசிக்கச் சொன்னார். 'இதில் எப்படி வாசிப்பது?' என்று நான் பிரமித்தேன். 'இது பெரிய வீணையின் சின்ன வடிவம்தானே; முயன்று பாருங்கள்' என்றார். முதலில் பூபாள ராகத்தை வாசித்துப் பார்த்தேன். பிறகு ஒவ்வொரு ஸ்வரமாக மீட்டினேன். நாதம் நன்றாகவே இருந்தது.

இதற்குப் பிறகு, தினமும் காலையில் கொஞ்ச நேரம் அந்த வீணையைக் கோயில் சந்நிதியில் வாசித்தேன். நாளடைவில் காலை, மாலை இரு வேளையும் வாசிக்கலானேன். பிறகு அதே அளவில் ஒரு வீணை ஸ்பெஷலாகச் செய்து அதே கோயிலில் பக்கவாத்தியங்களுடன் முதல் கச்சேரியும் செய்தேன்.

காயத்ரி: நீங்கள் ரேடியோக் கச்சேரிகள் நிறைய வாசிக்கிறீர்கள்... எல்லாம் குட்டி வீணையில்தானா?

ரங்க: ஆமாம். மாண்ட



அருள்வாக்கு



வியாகரண சாஸ்திரத்தில் சப்தத்தையே ப்ரம்மமாக நிலை நாட்டியிருக்கிறது. இதற்கு சப்த ப்ரம்மவாதம் என்று பேர். பாஷை இலக்கணத்தைச் சொல்லும் போது இப்படி வையாகரணிகள் (வியாகரண சாஸ்திரக்காரர்கள்) அதை ப்ரம்ம ஸ்வரூபமாகச் சொல்லியிருப்பதையே இன்னொரு விதத்தில் ஸங்கீத சாஸ்திரக்காரர்களும் ஸ்தாபித்திருக்கிறார்கள். ஸங்கீதத்திலே நாதப்பிரம்ம உபாஸனை, நாதோபாஸனை என்கிற இடத்திலும் நாதம் என்பது வெறும் சப்தம் மட்டுமில்லை; பாடுகிறவன் ஒரு ஸ்வர ஸ்தானத்தை ச்ருதியோடு, சுத்தமாக, தீர்க்கமாகப் பிடித்து, அது பூரணமாக ஓங்கி முடிந்து விழுந்து லயிக்கிற இடத்தில் — இதை மூர்ச்சனை என்பார்கள் — அது ச்ருதியோடு கலந்து அத்வைதமாகக் கரைந்து நிறைந்து போகிறதே அதைத்தான் நாதம் என்பது. இந்த இடத்திலே பாடுகிறவனும் அதோடு கரைந்து நிறைந்து விடுவான். அவன் மட்டுமில்லை. கேட்கிற ஸஹ்ருதயர்களானவர்களும் அப்படியே சொக்கித் தன்னை மறந்து அந்த நாதத்தில் ஐக்யமாகியிருப்பார்கள். இதிலே பெறுகிற ஆனந்தந்தான் ஆத்மானந்தம், பிரம்மாநந்தம் என்று மத சாஸ்திரங்களின் உச்ச லக்ஷ்யமாய்ச் சொல்லியிருப்பது. நாதம் பிரம்மத்துக்குக் கொண்டு போகிறது, சப்தம் நாதத்துக்குக் கொண்டுபோகிறதென்றால் இதில் ஒன்றின் தன்மை இன்னொன்றுக்கு இல்லாவிட்டால் எப்படி முடியும்? அதனால்தான் சப்தமே பிரம்மம் என்று சொல்வதாகச் சாஸ்திரம் ஏற்பட்டிருக்கிறது.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.

லின் சீனிவாஸ், சங்கரன் நம்பூதிரி போன்ற கலைஞர்கள் மாதிரி நானும் ஆடிஷன் இன்றியே தேர்வு செய்யப்பட்டேன்.

காயத்ரி: சின்ன வீணையில் வாசிப்பதில் ஏதேனும் சிரமம் தெரிகிறதா?

ரங்க: அமைப்பு பெரிய வீணையைப் போன்றே தான். அதனால் வாசிப்பில் வித்தியாசம் இருக்காது. ஆனால் சில ஸ்வரங்களுக்குக் கூடுதலாக அழுத்தம் கொடுத்து வாசிக்கணும். பத்துப் பதினைந்து கச்சேரிகளுக்குப் பிறகு தந்தி மாற்றணும்.

காயத்ரி: சின்ன வயசிலிருந்தே வீணை வாசிக்கும் ஆர்வம் உங்களுக்கு இருந்ததா? குரு யார்...?

ரங்க: வீட்டில் என் சகோதரிக்கு வாங்கித் தந்த வீணையில் வாசித்துப் பார்த்தும் கச்சேரிகள் கேட்டும் நானேதான் அபிவிருத்தி செய்து கொண்டேன். சமனி சங்கர சாஸ்திரி என் மானசீக குரு. அவர் அண்மையில் இருந்து நிறையக் கேட்டும் பார்த்தும் கற்றுக் கொள்ளும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது... நீங்கள் கூட மிகச் சிறிய வயதிலேயே வீணைக் கச்சேரிகள் செய்ய ஆரம்பித்தவராச்சே! இப்போது வீ ணை யி ல் கஸல்ஸ் வாசித்து காஸெட் கொடுத்திருக்கிறீர்கள் என்று கேள்விப்பட்டேன்...

காயத்ரி: ஆமாம். குலாம் அலியோட கஸல்களை அவர் பாடிய மெட்டிலேயே வாசித்திருக்கிறேன். 'பக்கவாத்யமாக' எட்டு வயலின், ஒரு கிடார், ஒரு பேஸ் கிடார், ஒரு ரிதம் கிடார், ஒரு தபலா... இசையமைப்பாளர் வி. எஸ். நரசிம்மனின் மேற்பார்வையில் தயாராகியிருக்கிறது இந்த காஸெட்.

(காஸெட்டைப் போட்டுக்கேட்டார் ரங்கராஜன்.)

ரங்க: 'கஸல்'களை வீணையிலே வாசிப்பது போலவே தோன்றவில்லை. குலாம் அலி பாடியது போலவே தொனிக்கிறது! இதுதான் உங்கள் வெற்றி.

காயத்ரி: நன்றி. உங்கள் அடுத்த கச்சேரியை எதிர்பார்த்துக் கொண்டிருப்பேன். அவசியம் வந்து கேட்கிறேன்.

தொகுப்பு: **சித்தார்த்**

வண்ணப்படம்: **ரமணன்**

ஒரு கிராமம் தண்ணீரில் மூழ்குகிறது

(அறிமுக எழுத்தாளர்)

க. இராசரெத்தினம்

"**வா**ங்க சார்... வாங்க... என்ன இந்த வேகாத வெய்யிலே இப்படி!'' என்று டீக் கடைக்குள் நுழைந்த இரண்டு போலீஸ்காரர்களை வரவேற்றார் அதன் சொந்தக்காரர் தங்கம் செட்டியார்.

''கொஞ்சம் தண்ணீர் கொடுங்க செட்டியாரே!'' போலீஸ்காரர்கள் முகத்தைத் துண்டால் துடைத்துக் கொண்டனர்.

செட்டியார் தண்ணீருக்குப் பின்னே ஒரு பூவரசு இலையில் இரண்டு வடைகளை வைத்துக் கொடுத்தார். பின்பு 'டீ' போட்டுக் கொடுத்தார். போலீஸ்காரர்களுக்கு வந்த களைப்பு மாறி, கொஞ்சம் தெம்பு வந்தது.

ஒரு போலீஸ்காரர் கனைத்துக் கொண்டே ''ஏம்பா... யாரு உட்கார்ந்திருக்கிறது... முனியாண்டி மகன் பாலு என்பவரைக் கூட்டிக் கொண்டு வரணுமே?'' என்றார்.


''சரிங்க ஐயா. இதோ போறேன்!'' உட்கார்ந்திருந்தவன் எழுந்து சென்றான்.

''அதுதானே! விஷயம் இல்லாமே வருவீங்களா?'' என்றார் செட்டியார் சிரித்தபடி.

''இந்த ஊரிலே பஸ் ஸ்டாண்டுக்குப் போற வழியிலே கள்ளும், சாராயமும் விற்கிறதாகப் புகார் வந்திருக்கு. பெண்கள் தனியாகக் குளிக்கப் போக முடியவில்லை என்றும், ஆத்திரம் அவசரத்துக்கு பஸ்ஸுக்குப் போக முடியவில்லை என்றும் பெட்டிஷன் வந்திருக்கு!''

போலீஸ்காரர்கள் வந்திருக்கிறார்கள் என்று கேள்விப் பட்டவுடன் ஒரு சிறு கூட்டமே அங்கு கூடிவிட்டது. ஊராட்சி மன்றத் தலைவர் கூட வந்துவிட்டார்.

திண்ணையில் உட்கார்ந்திருந்த கிழடு





''எப்படியோ தலைவரைப் பதவியிலே ஒக்கார வெச்சுட்டோம். அடுத்தபடியாக என்ன செய்யணும்?''

''அவரைப் பதவியிலேருந்து இறக்கறதுக்குத் திட்டம் போடணும்.''

கட்டைகளெல்லாம் வந்து விட்டனர். இன்றைக்குப் பேசுவதற்கு விஷயம் கிடைத்து விட்டது என்று மகிழ்ச்சியுடன் சிலர் காதைத் தீட்டிக் கொண்டு வந்தனர்.

''இந்தக் காலத்தில் எந்தக் கிராமத்தில் கள்ளுத் தண்ணி, பட்டை சாராயம் விக்காமலிருக்காங்க. இங்கே விக்கலைன்னா பக்கத்து ஊருக்குப் போய்க் குடிச்சுட்டு வர்றாங்க.'' — ஒரு கிழவர் பேச்சை ஆரம்பித்தார்.

''குடிக்காதவனை வாயைப் பிடிச்சா ஊத்துவாங்க. எய்யா இவன் அந்தப் பக்கம் போறான்?''

ஒவ்வொருத்தராகத் தங்களுடைய கருத்துக்களைச் சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

பாலு வந்தார். போலீஸ்காரர்களைப் பார்த்து விட்டு, தோளில் இருந்த துண்டைக் கையில் போட்டுக் கொண்டார். கூடவே ஒரு கும்பிடு போட்டார்.

பாலுவை ஏற்கெனவே தெரிந்த தோரணையில் ''ஏம்பா... பாலு இந்தக் கள்ளுக் கடையை மறைவிடத்தில் வைத்திருக்கக் கூடாதா... ரோட்டு மேலேதான் விற்க வேண்டுமா?'' என்று ஒரு போலீஸ்காரர் கேட்டார்.

''ஐயா! கள்ளுக் கடை இப்ப ஏது? முன்பு பழைய கடை இருந்த இடத்துக்குப் பக்கத்திலே, கண்மாய்க் கரைக்கு மறைவில் ஏதோ சாயந்திரம் மட்டும் வயிற்றுப் பொழுப்புக்காக விக்கிறேன்.'' பாலு பதில் சொன்னார்.

''உன்னைப் பெரிய ஐயா ஸ்டேஷனுக்குக் கூட்டிட்டு வரச் சொன்னாங்க. வா போகலாம்.''

''ஐயா! இப்படி திடீரென்று....''

''உன் மேலே இந்த ஊரு வேலு மகன் சண்முகம் என்பவர் பெட்டிஷன் எழுதியிருக்கிறார். அதைப் பற்றி விசாரிக்கணும்.''

பாலு பதறினது மாதிரி நடித்தாலும் போலீஸ் ஸ்டேஷன் பழக்கமான இடம் தான். எல்லாரையும் சில்லறையினால் வளைச்சுப் போட்டுவிடலாம் என்ற நம்பிக்கையில் புறப்பட்டார்.

'நாம் எவ்வளவு வருஷமாக இந்த வியாபாரத்தை நடத்தி வருகிறோம். போட்டிக்கு வந்தவர்களையெல்லாம் சரிக்கட்டிப் போக வைத்திருக்கிறோம். நம்மீது ஒருவன் பெட்டிஷன் போட்டுவிட்டானே. குடும்ப சினேகத்தையெல்லாம் காத்துல விட்டுட்டு எழுதியிருக்கிறானே! பாலு எண்ணங்களை ஓடவிட்டபடி பஸ் ஸ்டாண்டை நோக்கி நடந்து கொண்டிருந்தார்.

'சிறுபோது' என்று அழைக்கப்பட்ட அந்தக் கிராமம் முதுகுளத்தூருக்குப் பதினொரு கிலோமீட்டர் தொலைவில் இருந்தது. ஒரு நாளைக்கு நான்கு தடவைகள் தான் பஸ் வரும். பஸ் ஸ்டாண்டிலிருந்து ஊருக்குச் சுமார் மூன்று கிலோமீட்டர் நடந்துதான் போகவேண்டும்.

முக்கிய புள்ளிகள் ஓட்டு கேட்க மட்டும் வருவார்கள். ஒரு சமயம் பிரதமர் அந்த வழியாக இராமநாதபுரத்திலிருந்து வருவதாக இருந்தது. ரோடு மிகவும் மோசமாக இருக்கவே பயணத்திட்டம் வேறு ஊர் வழியாக மாற்றப்பட்டது. அதுமுதல் அந்த ரோடு கவனிப்பாரின்றிக் குண்டும் குழியுமாகவே இருந்தது. சில தனியார் பஸ் கம்பெனிகள் மட்டும் ஆடுகளுக்கும் டிக்கட் வாங்கிக் கொண்டு பரமக்குடி சந்தையில் இறக்கி விட்டன.

ஒரு வருடம் மழை பெய்தால் அடுத்த இரண்டு வருடங்களுக்கு மழையே பெய்யாது. அப்படி ஒரு சாபம் அந்தப் பகுதிக்கு. விவசாயம்தான் சரியாகச் செய்ய முடியவில்லையே, மாற்றுத் தொழில் எதையாவது செய்யலாம் என்று யோசிக்கத் தெரியாத ஜனங்கள். சின்ன சமாசாரத்துக்குக் கூட நல்லது, கெட்டது தெரியாமல் அரிவாள், கம்புகளைத் தூக்கும் மக்கள். எத்தனை அரசு வந்தால் என்ன. நாங்கள் நாங்களே தான் என்று மார் தட்டும் மக்கள்!

பாலு இப்பொழுது வேகமாக நடந்து கொண்டிருந்தார் கூடவே பத்துப்பதினைந்து அடியாட்கள்.

வேலு திண்ணையில் உட்கார்ந்திருந்தார். வேப்ப மரக் காற்று வீட்டுக்குள் வீசியது. பாலு கூட்டத்தினரோடு வந்து நிற்பதைப் பார்த்துக் கலவரப்பட்டுக் கொண்டே ''என்னப்பா விஷயம்? இப்படி உட்காரப்பா'' என்றார்.

''உட்கார்ற மாதிரி வரவில்லை. உங்க



ஸ்ரீ தக்ஷிண காளியின் உபாஸனை

ஸ்ரீ சக்தி உபாஸனையாகிய ''தஸ மஹா வித்யை''களில் முதன்மையானது ஸ்ரீ தக்ஷிணகாலிகா ஆகிய ஆதிபராசக்தியின் வித்யையாகும். இது வாமாசாரமாக வடநாட்டில் அநுசரிக்கப்படுகிறது. இதையே வேத மந்த்ரங்களை ஆதாரமாகக் கொண்ட தக்ஷிணாசார முறையில் ''ஸ்ரீ காலி வித்யாக்ரமம்'' என்ற பெயரில் ஸ்ரீ பைங்காநாடு P.K. ராஜகோபாலய்யர் அவர்களால் ஆக்கப்பட்டு விமலாநந்த மண்டலியால் முதல் பாகம் 1989-ல் பிரசுரிக்கப்பட்டது. முதல் பாகம் 548 பக்கங்கள் கொண்டது. விலை ரூ 88.00/- இதில் அங்கமாகிய பல இதர தெய்வங்களுடைய அரிய மந்த்ரங்கள், சூக்தங்கள், உபநிஷத்துக்கள் உள்ளன. எல்லோருக்கும் பயன்படக் கூடியவை. மேற்படி புத்தகத்தை விரும்புவோர், கீழ்கண்ட முகவரியில் பெற்றுக் கொள்ளலாம்.

இரண்டாவது பாகம் 500 -க்கும் மேற்பட்ட பக்கங்கள் கொண்டு ரூ 110.00/- விலையில் ஜூலை 1991-ல் வெளியிடப்பட இருக்கிறது. இப்போதே முன் பணமாக ரூ 90.00/- அனுப்பிப் பதிவு செய்து கொள்ளும் அன்பர்களுக்கு அச்சானவுடன் அனுப்பி வைக்கப்படும்.

இங்ஙனம்,

மேதாநந்த சங்கரன்,
செயலாளர்.

முகவரி:

விமலாநந்த மண்டலி,
2, தேவராஜுலு நாயுடு தெரு,
வெங்கடபுரம், அம்பத்தூர்,
சென்னை-53.

சிரிக்க வையுங்கள்; சிங்கப்பூர் செல்லுங்கள்!

சிங்கப்பூருக்குப் போய்வர யாருக்குத்தான் ஆசையில்லை! இந்தப் போட்டியில் பங்கேற்று உங்கள் ஆசையைப் பூர்த்தி செய்து கொள்ள முயற்சி செய்யலாமே! கீழேயுள்ள கூப்பனில் 'குபீர்'ச் சிரிப்பு வரவழைக்கும் ஒரு துணுக்கு அல்லது ஜோக்கை எழுதி அனுப்புங்கள். பிரசுரமாகும் துணுக்குகள் பரிசு பெறும். அடுத்த ஆகஸ்டுக்குள் யாருடைய ஜோக் அல்லது துணுக்கு அதிகமாக இடம் பெறுகிறதோ, அவர் இலவசமாகச் சிங்கப்பூர் போய் வரலாம் — அதுவும் ஜோடியாக. எச்சரிக்கை! பிரசுரமாகும் ஜோக் 'காப்பியடிக்கப்பட்டது' என்பது தெரிய வந்தால் அதனை எழுதியவர் போட்டியிலிருந்து நீக்கப்படுவார்!

முடிவு தேதி: 31.12.90.

ஜோக்/துணுக்கு:

என் பெயர்:.............................

விலாசம்:.............................

....

....

கல்கி பொன்விழா பரிசுத் திட்டம்

பையன் சண்முகம் இருக்காரா? அவர் செஞ்ச காரியத்தைக் கேளுங்க...''

''சொல்லுப்பா, என்ன செஞ்சான்?''

''நான் பஸ் ஸ்டாண்டுக்குப் போற வழியில் கள்ளு சாராயம் விற்பதாகவும், இதனால் பெண்கள் தனியாகப் போக முடியவில்லைன்னும் இன்ஸ்பெக்டருக்கு மனு எழுதியிருக்கிறார்.''

''இவனுக்கு ஏன் இந்த வேலை... ஏண்டா சண்முகம் இங்கே வாடா... பஸ் வரல்லே, ரோடு சரியில்லே குடிதண்ணீர் வேணும்னுதானே பெட்டிஷன் எழுதி எல்லோர்கிட்டேயும் கையெழுத்து வாங்கி அனுப்பிக் கொண்டிருந்தே?'' என்று சொல்லிக் கொண்டே மகனைப் பார்த்தார்.

''நான் பெட்டிஷன் எழுதினது உண்மை தான். உங்க கடையிலே குடிச்சுட்டு வருபவர்கள் ரோட்டில் ஆபாசமாகப் பேசிக்கிட்டுப் போறாங்க. இதனால் அந்தப் பக்கம் நடக்கவே மக்கள் பயப்படுகிறார்கள்'' சண்முகம் பாலுவைப் பார்த்துப் பேசினான்.

''அதனால் உன் கிட்டே வந்து எல்லோரும் முறையிட்டார்களாக்கும். சும்மா போ தம்பி! நீ என்ன பெரிய மனுசனா இந்த ஊருக்கு? என் குடும்பம், ஒன் குடும்பம் இரண்டுக்கும் பரம்பரை, பரம்பரையாக நல்ல தொடர்பு இருக்கு. அதைக் கெடுத்திடுவே போலிருக்கே....''

''நான் ஒண்ணும் கெடுக்கலே... இந்தக் கிராமம் நல்லாயிருக்க வேண்டும் என்ற நினைப்பில்தான் எழுதினேன்.''

''அதனால்தான் படிச்சும் உனக்கு வேலை கிடைக்கல்லே!''

''நான் ஒண்ணும் வேலை கேட்டு உங்களிடம் வரல்லே!''

தன் மகனுக்கும், பாலுவுக்கும் வாக்குவாதம் முற்றப் போகிறது என்பதையறிந்த வேலு ''பாலு.... என் மகன் ஏதோ தப்பா எழுதிட்டான். மனசுலே வைச்சுக்காதே.... டேய் சண்முகம் நீ உள்ளுக்குப் போ!'' என்றார்.

இச்சம்பவம் நடந்து ஒரு மாதமாகி விட்டது. அன்று வானத்தில் சில கறுப்பு மேகங்கள் படர்ந்திருந்தன. காற்று வேகமாக வீசியது. மேகங்களெல்லாம் கூடி மின்னல் மின்னியது. தூரத்தே இடி இடிக்கிற சப்தம் கேட்டது.

'என்னடா இது அதிசயமாக இருக்குது. மழை பெய்யப் போகிறதோ. பெய்தால் நல்லதுதான் காட்டுக் கருவல் மரங்கள் வெட்டிய 'காத்தான்' புஞ்சையில் உழுது போடலாம்' என்ற நினைப்பில் சண்முகம்

நீங்கள் மிகவும் விரும்பி அணிந்திடும்

பட்டுச் சேலைகள்

20%

தள்ளுபடியுடன் வாங்கிட வாரீர்!



- தில்லையாடி வள்ளியம்மை பட்டு மாளிகை,
  350, பாந்தியன் சாலை,
  எழும்பூர், சென்னை-8.
- பட்டு மாளிகை,
  57, தேரடி, சேலம்-1.
- பவளம்,
  147, நேத்தாஜி சாலை,
  ஈரோடு-1.
- தாமரை பட்டு மாளிகை,
  314, 315, ராஜா தெரு,
  கோயம்புத்தூர்-1.
- பட்டு மாளிகை,
  36, வெங்கலக்கடைத் தெரு,
  மதுரை.
- அமுதசுரபி,
  12, 14, தேரடி கடைத்தெரு,
  திருச்சி-2.
- பட்டு மாளிகை,
  59-59-ஏ, வடக்கு ரதவீதி,
  திருநெல்வேலி டவுன்-6.
- ரேஷம் தாரா,
  சபீனா பிளாசா, முதல் மாடி,
  84, 85, இன்பேன்டரி சாலை,
  பெங்களூர்.
- குஷ்பூ,
  16, 17, புது மார்கெட்,
  திலக் சாலை, அபைட்ஸ்,
  ஐதராபாத்-1.

பட்டு இரகங்கள் கோ-ஆப்டெக்ஸின் இதர விற்பனை நிலையங்களிலும் கிடைக்கும்.

கோ-ஆப்டெக்ஸ்

தமிழ்நாடு கைத்தறி

DIPR/1455/MS/90/ET

வானத்தைப் பார்த்துக் கொண்டு நின்றான்.

தெருவில் சிலபேர் வேகமாக ஆவேசத்துடன் ஓடினார்கள். கையில் அரிவாள், வேல் கம்பு வைத்திருந்தார்கள் 'ஏன் இப்படி ஓடுகிறார்கள்? எங்கேயும் சண்டையா.... யாரையாவது வெட்டிப் போட்டு விட்டார்களா?' சண்முகத்தின் மனத்தில் சந்தேகம் எழுந்தது.

டீக் கடைப் பக்கம் சென்றான். அங்கு கடைகளை வேகமாக அடைத்துக் கொண்டிருந்தார்கள். ஒரு கடையின் திண்ணையில் ஒரு கூட்டம் இருந்தது. அந்த ஊரில் நடந்த, நடக்கப் போகிற விஷயங்களையெல்லாம் அந்தக் கூட்டம் அலசிக் கொண்டிருந்தது. உழைக்க மறுக்கும் சிலபேர், உழைத்துக் களைத்துப் போன சிலபேர்... இப்படிப் பல பேர் அந்தக் கூட்டத்திலிருந்தார்கள்.

"ஏனப்பா சண்முகம் நீ அன்றைக்கு எழுதினாயே கள்ளுக் கடையை ரோட்டில் வைக்கக் கூடாது என்று. இன்றைக்கு அது சரியாகப் போய்விட்டது" திண்ணையில் உட்கார்ந்திருந்த ஒரு பெரியவர் சொன்னார்.

"ஏன், என்ன ஆச்சு?"

'கள்ளுப் பானை கொண்டு போன பாலுவின் தம்பி சோமுவின் பொண்டாட்டியைக் கள்ளுக்கடையில் இருந்த சிலபேர் கேலி பண்ணியிருக்கிறார்கள். கேலி பண்ணின தோடல்லாமல் சேலையைப் பிடித்து இழுத்து வம்பு பண்ணியிருக்கிறார்கள். பாலுவின் தம்பி உடனே வந்து சேலையைப் பிடித்தவனின் கையை வெட்டியிருக்கிறான். பதிலுக்குப் பதில் என்று சோமுவின் வயிற்றில் கத்தியால் குத்தி ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போயிருக்கிறார்கள். பாலு இந்த விவரம் கேட்டுக் கையில் அரிவாளுடன் இப்பொழுதுதான் வேகமாகப் போகிறான். என்ன நடக்கப் போகிறதோ தெரியவில்லை'—இதுதான் அவர்கள் சொன்ன கதையின் சாராம்சம்.

தொடர்ந்த உரையாடல் சண்முகத்தின் மனத்தை உலுக்கியது:

"யாராவது ஒருத்தர் போயி இளஞ்செம்பூர் போலீஸ் ஸ்டேஷனில் தகவல் சொல்லணும். இல்லையென்றால் பனையூர்க்காரப் பசங்க இங்கே வந்து கலாட்டா பண்ணுவாங்க."

"பனையூர்க்காரங்க இங்கே வந்து ஏன் குடிக்கிறாங்க? அவங்க ஊர்லேதான் சாராயம் விக்கிறாங்களே."

"போய்யா! அந்த ஊர்க் கடையிலே குடிச்சா சரியா போதை வரலேங்கிறாங்க. அதனாலே இந்த ஊர்க்குத்தான் வர்றாங்க. இங்கே என்னமோ சேர்க்கிறாங்களாம் சாராயத்திலே....."

மறுநாள் காலை தினத் தாள்களில் இப்படிச் செய்தி வந்தது: 'முதுகுளத்தூருக்கு அருகில் கோஷ்டி கலவரம். இரண்டு பிரிவினர் மோதிக் கொண்டனர். சாவு எண்ணிக்கை நான்காக உயர்ந்தது. பலரது உடல்நிலை கவலைக்கிடம். மாவட்ட ஆட்சித் தலைவர் சம்பவம் நடந்த இடத்துக்கு விரைந்துள்ளார். நிலைமை கட்டுக்குள் இருப்பதாக மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் அறிவிப்பு.'


தீப்பொறியை அணைக்கத் தவறியவர்கள் கொழுந்து விட்டு எரியும் தீ நாக்குகளை அணைக்கப் போராடிக் கொண்டிருந்தார்கள். மூக்கணாங்கயிற்றை விட்டு விட்டு மாட்டின் வாலைப் பிடித்து அடக்கப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.



"பாடிக் கச்சேரியிலே ஒருவருக்கு ஒருவர் அழகு காட்டிக் கொண்டு பாடுகிறார்களே, கவனிச்சியா?"

"மாமியாரும், மருமகளும் சேர்ந்து பாடறாங்களே, ஸ்வரம் போடறதிலே தகராறு வந்திருக்கும்!"

— ஜம்புநாத்.



* சிகரம் படத்தில் ஒரு காட்சி.

'சிகரத்தில்' பாலு!

திரைப்பட இசையமைப்பாளர் ஒருவர் தமது வாழ்வில் சந்திக்கும் உயர்வு தாழ்வுகளை மையமாகக் கொண்டு எடுக்கப்பட்ட படம் 'சிகரம்'. இறுதியில் 'சிகரத்தை' எட்டும் இந்த இசையமைப்பாளர் பாத்திரத்தில் நடித்துள்ளவர்: எஸ். பி. பி.!

படத்தின் இயக்குனர் அனந்துவைச் சந்தித்த போது அவர் சொன்னார்: ''தயாரிப்பாளர் கே. பாலசந்தருடன் பல கதைகளை அலசியபின், தேர்வு செய்யப்பட்ட இந்தக் கதை — 1985 இல் எழுதப்பட்டது! கதை முடிவானபோது அதில் பாலு நடிப்பார் என்று நாங்கள் கற்பனை கூடச் செய்யவில்லை. அவர் நடிப்புத் திறனைப் பக்கத்திலிருந்து பார்க்கும் வாய்ப்பு பின்னர்தானே கிடைத்தது!

''இசையமைப்பாளரின் குடும்ப வாழ்வு, உறவுகள், தொழில் ரீதியில் போட்டி, இவற்றைச் சுற்றிப் பின்னப்பட்டுள்ள கதை. ஐந்து முழுப் பாடல்கள், ஐந்து சிறு பாடல்கள். இசையமைப்பு பாலுதான். தாமே எல்லாப் பாடல்களையும் பாடாமல் பல பிரபலங்களைப் பாட வைத்துள்ளார்.


''ஒரு குறிப்பிட்ட பாடலுக்கு இசையமைத்த போதே அதை ஜேசுதாஸ்தான் பாட வேண்டும் என்று முடிவு செய்துவிட்டார் பாலு. ஆனால் உரிய நேரத்தில் ஜேசுதாஸிடம் கால்ஷீட் வாங்க முடியவில்லை. எனவே, பாலுவே அந்தப் பாட்டைப் பாடிவிட்டு, பிறகு ஜேசுதாஸுக்குச் சௌகரியமான நேரத்தில் அவரைப் பாட வைத்து 'வாய்ஸ் டிராக்கை' மட்டும் மாற்றியமைத்தார். இந்தப் பாடல் பதிவின் போது ஜேசுதாஸ் ''நீங்களே அருமையாகப் பாடியிருக்கிறீர்களே... நான் எதற்கு?'' என்று கேட்டுவிட்டார்.

''அதேபோல், இன்னொரு பாடலைப் பாடிய பாலமுரளி கிருஷ்ணா, ரெக்கார்டிங் முடிந்ததும் பாலுவிடம் கேட்டார்: ''என்ன, உங்கள் அளவுக்காவது பாடியிருக்கிறேனா?'' என்று! உபசாரத்துக்குச் சொல்வதென்றாலும் பெருந்தன்மையான மனது வேண்டுமே!''

''கேளடி கண்மணியில் இடம் பெற்ற ஒரே 'தம்' பாட்டைப் போல் இதில் ஏதேனும் உண்டா?'' என்று கேட்டோம் அனந்துவிடம்.

''ஒரு பாடல் முழுமைக்கும் காமெராவைச் சிறிதும் நகர்த்தாமல் ஒரே ஷாட்டாகப் படமெடுத்ததை வேண்டுமானால் குறிப்பிடலாம்'' என்றார். துணிச்சல்தான்!

— ஜூலி.



* அனந்து



COUNT DOWN — 3

நழுவிய மீனும் பிடிபட்டப் பறவையும்!

அச்சுதன்!

மணிமாறனின் உடலுக்குள் பிரேக்குகள் க்ரீச்சிட்டன.

திரும்பு. உடனே திரும்பு. ஓடி விடு.

அவனுக்கு முன்னதாகவே ஸ்ட்ரெச்சரில் ரயிலுக்கு எடுத்துச் செல்லப்பட்டு விட்ட சாந்தினியை விட்டு விட்டு எப்படித் திரும்புவது என்று அவன் மனம் குழம்பியது.

அச்சுதன் நேரே மணிமாறனை நோக்கி வந்தான். ஆனால் நிற்காமல் அவனைத் தாண்டி நடந்தான்.

மணிமாறனின் நெஞ்சிலிருந்து பெரும் ஆறுதல் மூச்சு விடுதலையானது. மாறு வேடத்தில் இருந்த அவனை அச்சுதனால் அடையாளம் புரிந்து கொள்ள முடியவில்லை! அது புரியாமல் ஓட முயன்றிருந்தால் அதுவே அவனைக் காட்டிக் கொடுத்திருக்கும்! எப்பேர்ப்பட்ட இக்கட்டிலிருந்து தப்பித்திருக்கிறான்!

மணிமாறன் நடையைத் துரிதப்படுத்தினான். ஸ்டேஷனில் நெருக்கமாய் நகர்ந்த மக்களுடன் கலந்து ரயிலை நோக்கி விரைந்தான்.

முதல் வகுப்பில் இரண்டு இருக்கைகள் மட்டுமே இருக்கும் தனி கூப்பேயில் மேல் படுக்கையில் சாந்தினி படுக்க வைக்கப்பட்டிருந்தாள்.

அவனுக்காகக் காத்திருந்த ஆண் நர்ஸ்களிடம் ஆளுக்கொரு நூறு ரூபாய் கொடுத்தான்.

"டாக்டரிடம் என்னுடைய நன்றிகளைச் சொல்லுங்கள்" என்றான். தன் சிறு பெட்டியை இருக்கைக்கு அடியில் தள்ளி விட்டு, கதவைத் தள்ளி மூடினான்.

ஆனால் நெஞ்சின் பதற்றம் அடங்கவில்லை. ஜன்னல் புறம் பார்வையைப் பதித்து, அச்சுதன் எங்காவது தென்படுகிறானா என்பதிலேயே கவனமாயிருந்தான்.

ரயில் 'ஹாங்' என்று நீளமான ஏப்பம் விட்டதும், மணிமாறன் சந்தோஷத்துடன் ஜன்னலையும் சாத்தினான். ரயில் கிளம்புவதற்கான ஆயத்தங்களில் இருந்தது.

அச்சுதனை ஏமாற்றி விட்ட திருப்தி மனத்தில் ரீங்காரமிட்டது.

கர்னல் அருள்தாஸ் விடாமல் அழைத்த டெலிபோனை நெருங்கினார். ரிசீவரை எடுத்தார்.

"ஹலோ."

"கர்னல் நான்தான்! சென்ட்ரல் ஸ்டேஷனிலிருந்து பேசுகிறேன்."

"சொல் அச்சுதன்."

"கண்டுபிடித்து விட்டேன்."

"சாந்தினியையா, மணிமாறனையா?"

"இரண்டு பேரையும், கர்னல். நினைத்திருந்தால் சாந்தினியைத் தனியாகக் காப்பாற்றியிருக்கலாம். அல்லது மணிமாறனைத் தனியாக மடக்கியிருக்கலாம். ஆனால் செய்யவில்லை."

"ஏன் அச்சுதன்?"

"ரயில்வே ஸ்டேஷனில் இருந்த கூட்டத்தில் மணிமாறன் தந்திரமாக என்னிடமிருந்து தப்பித்து விடும் வாய்ப்புகள் இருந்தன. அதே போல் சாந்தினியை மடக்கினாலும் உடனே மணிமாறன் உஷாராகித் தப்பித்திருப்பான்."

"என்ன செய்யப் போகிறாய்?"

"நிஜாமுதீன் எக்ஸ்பிரஸில் நானும் ஏறப் போகிறேன், கர்னல். ஓடும் ரயிலில் மணிமாறனின் சாமர்த்தியங்களுக்கு நிச்சயம் தடங்கல்கள் இருக்கும்."

"ஜாக்கிரதை, அச்சுதன். அவன் விஷமானவன். சாந்தினி அவன் தயவில் இருக்கிறாள்."

"பார்த்துக் கொள்கிறேன் கர்னல். மணிமாறனை நான் மடக்கியதும் உங்களோடு

அஞ்சனா மைக்கேல்ராஜ்

> தப்பிக்கக் கடினமான இக்கட்டான மூலைக்குத் தள்ளப்படும் போதுதான் மனிதமூளை மிக உடனடியான முடிவுகள் எடுக்கிறது. இந்த முடிவுகள், பல சமயங்களில் மிகச் சரியானவையாகவும் இருக்கின்றன.
>
> — ஆல்பர்ட் இங்.

மறுபடி தொடர்பு கொள்கிறேன்.''

கர்னல் ரிசீவரை வைத்த போது, கொச்சு வேலாயுதம் இடுப்பு வரை குனிந்து மரியாதையாக நின்றிருந்தான்.

''எந்தா கர்னல் சாரே! சாந்தினியம்மை...?'' என்று பரிவோடு சாந்தினி பற்றி விசாரித்தான்.

''ரயிலில்தான் கடத்துகிறானாம் மணிமாறன். கவலைப்படாதே. அச்சுதன் காப்பாற்றி விடுவான்.''

கர்னல் அவன் நீட்டிய டீயை வாங்கிக் கொண்டார்.

டெலிபோனைத் தம் புறம் திருப்பிச் சில எண்களை டயல் செய்தார்.

''அழகப்பன்? அருள்தாஸ் பேசுகிறேன். சென்னையிலிருந்து புறப்பட்டிருக்கும் நிஜாமுதீன் எக்ஸ்பிரஸில் அச்சுதன் பயணமாகிக் கொண்டிருக்கிறான். அவனுக்கு இடையில் எந்த இடத்திலும் உதவி தேவைப்படலாம். எல்லா ரயில் நிலையங்களுக்கும் தகவல் தந்து அந்தந்த ஊர்களில் நம் ஆட்களையும் தயாராய் இருக்கச் சொல்வது



நல்லது.''

அவர் பேசி முடிக்கும்வரை அருகிலேயே நின்றிருந்த கொச்சு வேலாயுதத்தை நிமிர்ந்து பார்த்தார்.

''என்ன வேலாயுதம்?''

''சாயா...''

கர்னல் புன்னகையுடன் தேநீரை மறுபடியும் எடுத்துக் கொண்டார்.

நிஜாமுதீன் எக்ஸ்பிரஸ் வேகம் பிடித்திருந்தது.

மணிமாறன் ஜன்னல் வழியே வெளியே விரையும் மரங்களையும், தூரத்துக் கட்டடங்களையும் பார்வையிட்டான்.

தன் பெட்டியை எடுத்துத் திறந்தான். அதற்குள்ளிருந்த சின்ன அட்டைப் பெட்டியைப் பிரித்தான். உள்ளே இருந்த இன்ஜெக்ஷனை எடுத்தான்.

சாந்தினியை விழிப்புக்குக் கொண்டு வர டாக்டர் கொடுத்திருந்த மருந்து.

ஹைதராபாத் போய்ச் சேர்ந்ததும் அவளைக் கேள்விகள் கேட்க அவனுக்கு நேரமிருக்குமா என்று தெரியவில்லை.

இங்கேயே கேட்பதுதான் புத்திசாலித்தனம்.

சிரிஞ்சில் மருந்தை உறிஞ்சிக் கொண்டான். மெத்தையில் அதைப் படுக்க வைத்தான்.

சாந்தினி விழித்ததும் அவள் திமிறி விடக்கூடாது என்று அவளது கைகளை இரும்புக் கம்பிகளோடு சேர்த்துக் கைக் குட்டைகளால் இறுக்கிக் கட்டினான். கால்களைத் தனியே ஒரு டவல் வைத்துக் கட்டினான். சாந்தினி மேகத்திலிருந்த தேவதை போல் தென்பட்டாள். அவளுடைய மிருதுவான சருமமும், இளமை ஆக்கிரமித்த முகமும் மணிமாறனைத் தாக்கின. இன்னும் சற்று நேரத்தில் அவளுடைய பிரத்தியேக வழிமுறைகள் அவளுடைய முகத்தில் கொண்டு வரப் போகும் வேதனை நிறைந்த வித்தியாசத்தை நினைத்தபடியே ஊசிக் குப்பியை உயர்த்தினான்.

கதவு தட்டப்பட்டது.

மணிமாறன் விறைத்தான். உடம்பு எகிறிக் குதித்தது. இன்ஜெக்ஷனை அப்படியே போர்வைக்குள் வைத்து ஒளித்து விட்டு இருக்கையில் உட்கார்ந்து கதவருகில் இருந்த ஜன்னலை உயர்த்தினான். யார் என்று பதற்றத்துடன் பார்த்தான்.

டிக்கெட் பரிசோதகர்!

ச்சே. அநாவசியத்துக்குப் பயந்து விட்டேன்.

தன் டிக்கெட் இன்னும் சோதனை செய்யப்படவில்லை என்பது நினைவுக்கு வர, கதவைச் சற்றே தள்ளித் திறந்தான். டிக்கெட்டுகளை நீட்டினான்.

> பாகவதர்: நான் போன வாரம் கானடாவிலே பாடின கீர்த்தனையைக் கேட்டீங்களா?
>
> நண்பர்: எப்படிக் கேட்டிருக்க முடியும்? நான் அந்தச் சமயத்திலே அமெரிக்காவிலேன்னா இருந்தேன்!
>
> — ஜெ. எஸ். ஆர்.

அவன் கை சரேலெனப் பற்றப்பட்டது. இழுக்கப்பட்டது.

அப்படியே பிடித்து இழுத்துக் கதவைத் தள்ளி அவன் கை மீது அறைந்து சாத்தி மறுபடியும் திறந்து அவன் அந்த அதிர்ச்சியிலிருந்து விடுபடுமுன் உள்ளே நெம்பித் தள்ளி நுழைந்தான் அச்சுதன்.

டிக்கெட் பரிசோதகர் பதற்றத்துடன் விலகி ஓடினார்.

மணிமாறன் கால்களின் பாலன்ஸ் இழந்து கைகளை விரித்துத் தடுமாறிப் பின்புறம் மல்லாந்து தரையில் பரவினான். அவனுடைய தலைப்பாகை கழன்று மல்லாந்தது.

அவனுடைய மூளையிலிருந்து உடம்பின் அத்தனை செல்களுக்கும் அபாய எச்சரிக்கை கம்ப்யூட்டர் வேகத்தில் செய்தி பரப்பப்பட்டது. மணிமாறன் இரண்டு கால்களையும் சேர்த்து உயர்த்தி அச்சுதனின் நெஞ்சில் உதைத்தான். அச்சுதன் சாத்திய கதவின் மீது எறியப்பட்டான். மணிமாறன் சரேலெனத் தன் முட்டியை அவன் முகத்தில் பாய்ச்சி இழுத்தான்.

அச்சுதனின் ஒரு பல் ஆட்டம் கண்டது.

மணிமாறன் ரப்பர் பந்து போல் துள்ளினான். மார்புப் பகுதியிலிருந்து ரிவால்வரை உருவி எடுத்தான்.

''நகராதே. நகர்ந்தால் உன் சாந்தினியைப் பொசுக்கி விடுவேன்'' என்றான். துப்பாக்கியின் மூக்கு சாந்தினியின் நெற்றியின் பக்கவாட்டில் பதிந்தது.

அச்சுதன் மெல்ல எழுந்தான்.

''மணிமாறன் உன் விளையாட்டுகள் முடிந்து விட்டன. இது ஓடும் ரயில். வெளியே பத்துப் பதினைந்து ஜவான்கள் துப்பாக்கிகளோடு காத்திருக்கிறார்கள். சரணடைந்து விடு.''

''நீ முதலில் கைகளைத் தூக்கு.''

மணிமாறன் தன்னை விடத் துப்பாக்கியில் வேகம் மிகுந்தவனாக இருந்ததை அச்சுதன் கசப்புடன் ஒப்புக்கொண்டான்.

''கைகளைத் தூக்கு.''



அச்சுதன் கைகளை மெல்ல உயர்த்தினான்.

துப்பாக்கி முனை சாந்தினியின் நெற்றியில் பதிந்தது பதிந்தபடி கிடக்க, மணிமாறன் இடது கையை உயர்த்தி அபாயச் சங்கிலியைப் பிடித்து இழுத்தான். அதே வேகத்தில் சாந்தினியின் மீது போர்த்தியிருந்த போர்வையை உருவி இழுத்தான்.

மிகத் திடீரென்று போர்வையைச் சுழற்றி மீன் வலை போல் அச்சுதனின் மீது எறிந்தான்.

கனத்த போர்வை அச்சுதனின் தலையில் படிந்து அவன் உடம்பை மூடியது. போர்வைக்குள் பார்வையின் உபயோகத்தை இழந்து அச்சுதன் தடுமாறி நிமிர்வதற்குள் மணிமாறனின் முழு எடையும் அவன் மீது விழுந்தது - அழுந்தியது.

மணிமாறன் கதவைத் திறந்து வெளியே குறுகலான காரிடாரில் பாய்ந்தான். துப்பாக்கியுடன் கதவுக்கு வெளியே வெளிப்பட்ட சர்தார்ஜியைப் பார்த்ததும் டிக்கெட் பரிசோதகர் பதறி அடுத்த கூப்பேக்குள் ஓடினார். அச்சுதன் பொய்யாகப் பயமுறுத்தியபடி ஜவான்கள் யாரும் இல்லாதது ஆறுதலாயிருந்தது.

ரயிலின் ரத்த ஓட்டத்திற்கு அபாயச் சங்கிலி இழுக்கப்பட்டதன் செய்தி தெரிவிக்கப்பட்டது. என்ஜின் பகுதியில் இருந்து நீண்ட ஹாரன் ஒலி எழுந்தது.

ரயில் 'க்ரீய்ச்' சென்று இரும்புச் சக்கரங்களைத் தண்டவாளங்களில் தேய்த்து நிறுத்தத்துக்கு வந்தது.

மணிமாறன் கதவைத் திறந்தான். சரளைக் கற்களில் குதித்தான் ஓடினான்.

அச்சுதன் போர்வையிலிருந்து விடுபட்டு, கதவு திறந்து ஓடி வந்து பார்க்குமுன் மணிமாறன் இரண்டு தண்டவாளங்களைத் தாண்டியிருந்தான். முள் வேலியைக் குதித்துக் கடந்து தார்ச் சாலைக்குள் பாய்ந்தான்.

அச்சுதன் இரண்டு மனத்தில் தவித்தான்.

சாந்தினியைக் கவனிப்பதா. மணிமாறனைத் துரத்துவதா?

மணிமாறனைத் துரத்தினாலும் அவன் பிடிபடுவானா என்பது சந்தேகமே என்று தோன்றியது. இருந்தாலும் வாய்ப்பை இழக்க விரும்பாதவனாக அவனும் குதித்து இறங்கி மணிமாறன் ஓடிய திசையில் ஓடினான். தார்ச் சாலையில் லாரிகளும், கார்களும், பஸ்களும் விஷ்க் விஷ்க் என்று கடந்து போயின.

மணிமாறனைக் காணவில்லை.

அச்சுதன் சலிப்பேறிய மனத்துடன் ரயிலை நோக்கி விரைந்து நடந்தான்.

கர்னல் சக்கர நாற்காலியிலேயே தலையைப் பின்புறம் சாய்த்துக் கண்களை மூடியிருந்தார். முகத்தில் ஓய்வின் அமைதி பரவியிருந்தது. உதடுகள் மிகக் குறுகிய அளவு பிளந்திருக்க, அவற்றின் வழியே மெல்லிய குறட்டை வெளிப்பட்டுக் கொண்டிருந்தது.

கொச்சு வேலாயுதம் தன் வேட்டியை மடித்துக் கட்டினான். கால்களின் நுனி விரல்களால் அந்த அறையைக் கடந்தான். அடுத்த அறைக்குள் பிரவேசித்தான். டெலிபோனை அணுகினான். கண்கள் நாற்புறமும், முக்கியமாய்ப் பின்புறமும் பார்த்துக் கொண்டன.

யாருடைய நிழலும் கூடத் தன் மீது படியவில்லை என்பது ஊர்ஜிதமானதும், கொச்சு வேலாயுதம் சில எண்களை டெலிபோனில் சுழற்றினான்.

எதிர் முனையில் மணி அடித்தது. ரிசீவர் எடுக்கப்பட்டது.

''ஹலோ!''

''யாரு ஹக்கிம்தானே?''

''ஆமாம்.''

''மணிமாறனை அச்சுதன் பார்த்து விட்டான். ரயிலையே நிறுத்தப் போகிறார்கள். உடனே அவனுக்கு உதவி பண்ணு போ.''

கொச்சு வேலாயுதத்தின் குரல் ரகசியமாக டெலிபோனில் வழிந்தது.

திடீரென்று டெலிபோன் மௌனமாகி விட்டதை அவன் அதிர்ச்சியுடன் உணர்ந்தான். திரும்பினான்.

ப்ளக்கிலிருந்து டெலிபோன் ஒயரைப் பறித்துக் கையில் பிடித்திருந்த கர்னல் சக்கர நாற்காலியை நகர்த்தினார்.

''மணிமாறனுக்கு உதவி செய்வது இருக்கட்டும், வேலாயுதம். உனக்கு இப்போது யார் உதவப் போகிறார்கள்? நான் தூங்கினேன் என்று ஏமாந்து விட்டாயா?''

கொச்சு வேலாயுதம் வார்த்தைகள் தொண்டையில் சிக்க, அவரை வெறித்துப் பார்த்தான்.

கர்னலின் விழிகள் சிங்கத்தின் விழிகளை விடக் கடுமையாக இருந்தன.

(தொடரும்)

அட்டைப்படம்:

அருமை! அபூர்வம்! அசத்தல்!

* வேகமாகப் பரவும் டிஜூஷன் ஜுரம் கட்டுரை அற்புதமான கருத்துக்களைக் கொண்டுள்ளது. நான்கு பேரும் தங்கள் கருத்துக்களைச் சரியாகவே தெளிவுபடுத்தியிருந்தார்கள். அதிலும் என். விஜய குமாரி, ஆசிரியை கூறிய கருத்துக்கள் பாராட்டத் தக்கவையாய் இருந்தன.

தக்கோலம், அ. முஸ்தபா.

* ஸ்டெல்லா புரூஸ் எழுதிய 'வேடபட்டி' சிறப் பாக இருந்தது. வருணனை ஏதும் இல்லாமல் கதையை நடத்திச் சென்றிருக்கும் விதம் அருமை. தனயனை இழந்த தாயின் இதயக் கொந்தளிப்பைத் தேர்ச்சி பெற்ற நடிகை நடித்துக் காட்டுவது போல்— மிக அழகாக, படிப்பவர் மனத்தைத் தொடும்படி வடித்திருக்கிறார் ஸ்டெல்லா புரூஸ்.

திருச்சி — 4, தாயு. செந்தில்குமார்.

* 'அம்மாவைப் போலவே' குழந்தைகள் வளர்ந்து வரும் சூழ்நிலையை; டை. வி. யின் பாதிப்புகளையும் கலந்து... தந்த அந்த நிஜமான யதார்த்தமான கதைக்குச் சிறப்பான வாழ்த்துக்கள்!

சென்னை — 49, மயிலை கோபி.

* சொகுசான ரதயாத்திரையில் பவனி வந்து, அரசியல் லாபம் ஈட்டிக் கொண்ட அத்வானி, மலிவான விளம்பரத்தை வெறுப்பதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை! வெறுப்பதே பெரிய விளம்பரம் தான்!

கும்பகோணம், பால. கிருஷ்ணமூர்த்தி.

* விளம்பரத்துக்காக லட்சக்கணக்காகச் செல வழிக்கும் தலைவர்கள் மத்தியில் மலிவான விளம் பரத்தை வெறுக்கும் அத்வானி புதுமையானவர் தான்!

தென்காசி, எஸ். ராஜேந்திரன்.

* 'மேஜர் — சந்திரசேகர்' தலையங்கம் அர்த்த முள்ளது! கட்சிக்காகவும், நாட்டுக்காகவும் பத்தாண்டு காலம் உழைத்த நாட்சரின் வீழ்ச்சி வீழ்ச்சியல்ல! கட்சியை உடைத்து — எதிர்க்கட்சி ராஜீவை அரவணைத்து! வி. பி. சிங்கை வீழ்த்தி, 'பிரதமராக' ஆகியுள்ள சந்திரசேகர் அடைந்தது வெற்றியுமல்ல!

கருமத்தம்பட்டி, அ. இராஜப்பன்.

* நாடு முன்னேற முதன்மையான, முக்கியத் தேவை 'கல்வி'தான் என அன்று முதல் இன்று வரை வற்புறுத்தும் ஒரே பத்திரிகை எங்கள் 'கல்வி' தான்.

'நீங்கள் கேட்டவை'யில், பி. லோகவின் கேள் விக்கு 'தரமான நம்பிக்கையூட்டும் கல்வி (சோறு அல்ல) அனைவருக்கும் கிடைக்கும் போது, உயர்ந்த வர், தாழ்ந்தவர் என்ற மனப்பான்மை நீங்கி விடும்' என்றுள்ள பதில் ஆசிரியன் என்ற வகையில் என் மனத்தைத் தொட்டது.

தொச்சிப்பட்டி, எம். மனோகரன்.

* 'வளமான வாழ்வுக்கு வலுவான குட்டைகள்' நல்ல நகைச்சுவையான கற்பனை! பா. ரா. ட்டுக் கள்!

அயன்புரம், த. சத்தியநாராயணன்.

* யார் சார் அந்தப் பா. ரா.? 'குட்டை ஒளி'யை வைத்தே எங்கள் வயிற்றைச் சிரிப்பால் குடைந்து விட்டாரே! வெல்டன்!

கல்லிடைக்குறிச்சி, இரா. ஷண்முகசுந்தரம்.

* 'பரீட்சை முறையில் மாற்றங்கள் தேவையா?' என்ற போட்டிக்குத் தேர்வு செய்யப்பட்டுள்ள கட்டுரை ஒவ்வொன்றும் அற்புதம்! ஒவ்வொரு கட்டுரையும் ஆற்றல் மிக்க கருத்துக்களின் அணிவகுப்பு!

கொங்கணாபுரம், வே. செந்தில்குமார் (ஆசிரியர்).

* தெற்கத்திய இசை, வடக்கத்திய ஸங்கீதம் என்ற பாகுபாடின்றி, இசை என்னும் கோயிலில் இரண் டுமே ஒளிவீசும் ஸுப்ரகாசமான 'நாத ஜோதி' தான் என்ற உன்னதமான கருத்தை அழுத்தம் திருத்தமாக வலியுறுத்தும் வகையில் அமைந்திருந் தது — 'இசையுலகின் இரு சிகரங்கள்' கட்டுரை. அந்த அட்டைப் படம் அசாத்தியமாய் இருந்ததுடன், 'ஒற்றுமை ஒருமைப்பாட்டை symbolic-ஆக உணர்த்துவது போலவும், வரப்போகும் டிசம்பர் ஸங்கீத சீஸனுக்குக் கட்டியம் கூறுவது போலவும் மகோன்னதமாய் அமைந்திருந்தது!

சென்னை — 28, வி. சங்கர்.

* 'கபலட்சுமிதீ இந்திய மக்களின் நன்மைக்காக இசை வேள்வி நடத்தும் ஒரு தபஸ்வினி' என்ற லதா மங்கேஷ்கரின் கூற்று, 'கற்றாரைக் கற்றாரே காமுறுவர்' என்ற உண்மைக்கு உரைகல் போல் உன்னையைக் காண்கிறோம்!

சென்னை — 75, வி. சபா.

* 'இசையுலகின் இரு சிகரங்கள்' பற்றிய கட்டுரை, அருமைதான். எனினும், எஸ். பி. பி. லதா மங்கேஷ்கருடன் தமக்கேற்பட்ட ஒரு சிறு அனுபவத்தை நினைவுகூர்ந்ததுதான், இக் கட்டுரைக்கே மகுடமாய் விளங்கிற்று!

சேலம் — 2, கே. ஜனார்த்தனன்.

* தம்பதிகள் வாழ்வில் உண்மையில் ஏற்பட்ட பிரச்னைகளும் அப்பிரச்னைகளுக்கு எப்படித் தீர்வு காணப்பட்டது என்பதையும் மணவியல் நிபு ணர்கள் 'தேன் நிலவும் அதன் பின்பும்' என்ற தொடர் மூலம் விவரிக்கும் முறை கவையாக இருக் கிறது. பிரச்னைகளைப் பிறரிடம் சொல்லக் கூச்சப் படுகிற தம்பதிகளுக்கு இத்தொடர் கிடைத்தற்கரிய ஒரு வரப்ரசாதம்.

ஸ்ரீமுஷ்ணம், சா. கிருஷ்ணசாமி.

* 'லட்சிய வேகம்' — போட்டிக்கதை படித்தேன். பெண் இனத்திற்கே பெருமையும், அழகும் சேர்க்கும் மகோன்னதமான கதை! மதிப்பு ஏற்படுவது கதா பாத்திரம் திவ்யா மீது மட்டுமல்ல! கதாசிரியை கே. ஜயலக்ஷ்மியின் மீதும்தான்!

திருச்சி — 16, ஞானசிமைந்தன் எஸ். ராஜகோபால்.

ரேடியோ இசை வகுப்பு:

பயனுள்ள நிகழ்ச்சியா? பரிதாப நிகழ்ச்சியா?

'இசை மரபு' என்ற நிகழ்ச்சி சென்னை வானொலியில் ஞாயிறு இரவு 8.30 முதல் 8.45 வரை ஒலிபரப்பாகிறது. இந்நிகழ்ச்சியைக் கேட்பதன் மூலம் ஒருவர் பாட்டுக் கற்றுக் கொண்டு விட முடியுமா? நிகழ்ச்சியில் கற்பிக்கும் அகில இந்திய ரேடியோ கலைஞர் பி.எஸ். நாராயணசாமியிடம் கேட்டோம்......

கே: ரேடியோவில் நடத்தும்பாட்டு வகுப்பை அரை மணி நேரத்திலிருந்து பதினைந்து நிமிடங்களுக்குக் குறைத்து விட்டீர்கள். இந்தக் குறுகிய நேரத்தில் ஒரு நல்ல பாடகர் கூட கற்றுக் கொள்வது கஷ்டமல்லவா?

ப: நல்ல பாடகருக்குக் கற்றுக் கொள்வது கஷ்டமில்லை. ஓரளவு அடிப்படை இசைஞானமும்அனுபவமும் உள்ளவர்கள் எளிதில் கற்றுக் கொண்டு விடலாம். மேலும் இந்த நிகழ்ச்சியை டேப் செய்து வைத்துக் கொண்டு, போட்டுக் கேட்டுக் கேட்டுக் கற்றுக் கொள்ளலாமே!

கே: இசை மரபு நிகழ்ச்சியில் கற்றுக் கொள்ளும் மாணவியரே கச்சிதமாகக் கற்றுக் கொள்ள முடிவதில்லை என்ற எண்ணம் சில சமயம் கேட்போருக்கு ஏற்படுகிறது. இப்படியிருக்கையில் மற்றவர்கள் இந்த நிகழ்ச்சியிலிருந்து எப்படிக் கற்றுக் கொள்ள முடியும்?

ப: இந்த நிகழ்ச்சியில் பங்கேற்க வானொலியின் 'பி ஹை கிரேட்' கலைஞர்கள்தான் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இவர்கள் ஓரளவுக்குப் பாடும் தரத்தவர்களே. ஒரு சில நிகழ்ச்சிகளில் நீங்கள் குறிப்பிடுவது போல் அவருக்கே பாட்டு முழுசாக வராதது போல் தோன்றினால் அதற்குக் காரணம் நிகழ்ச்சிக்குத் தரப்படும் குறைவான நேரம்தான். ரொம்பவிவரமாகச்சொல்லித் தரப் பதினைந்து நிமிடங்கள்போதாதுஎன்பதை ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். முதல் வாரம் கீர்த்தனையின் பல்லவி, அனுபல்லவியை சுவரப்படுத்திச் சொல்லித் தருவதோடு, சாஹித்யத்தையும் முழுமையாகச் சொல்லி நேயர்கள் எழுதிக்கொள்ள அவகாசம் தர வேண்டும். இரண்டாம் வாரம் சரணத்தைச் சுவரப்படுத்திச் சொல்லித் தருகிறோம். மாணவியை மீண்டும் பாடச் சொல்லித் திருத்த நேரம் இருப்பதில்லை. அதனால் முழுக் கீர்த்தனையைப் பாடும் போது நாங்களும் கூடவே பாடிவிடுகிறோம். எப்படியிருந்தாலும் நாங்கள் முழுப் பாட்டையும் சுவரப்படுத்திச் சொல்லி விடுவதால் ஆர்வமுள்ளவர்கள் அதன் அடிப்படையில் கற்றுக் கொண்டு விடலாம்.



கே: இந்தநிகழ்ச்சி அரை மணி நேரத்திலிருந்து பதினைந்து நிமிடங்களுக்குக் குறைக்கப்பட்டதற்கு என்ன காரணம்?

ப: நிர்வாகத்தின் முடிவு அது. அவர்களுக்குப் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு நேரம் ஒதுக்க வேண்டிய கட்டாயம் இருக்கிறது.

கே: நிகழ்ச்சிக்கு ஒதுக்

கப்பட்டுள்ள நேரம் — ஞாயிறு இரவு. டி. வி. சினிமாவில் எல்லோரும் மூழ்கியிருப்பார்கள் அல்லது சினிமா பார்த்து முடித்து, இரண்டரை மணி நேரமாக நின்று போன வேலைகளைக் கவனிக்கப் போய் விடுவார்கள். அதனால் இந்நிகழ்ச்சியைக் கேட்கவே ஆள் இருப்பார்களா என்று சந்தேகமாயிருக்கிறது...

ப: டி. வி.க்கு அட்ஜஸ்ட் செய்து கொண்டு செயல்படவேண்டுமென்றால் பல நிகழ்ச்சிகளை நிறுத்தியே விட வேண்டியதுதான்! கர்நாடக இசைப் பயிற்சி எல்லோரும் கேட்டு இன்புறும் நிகழ்ச்சி இல்லையே! பாட்டுக் கற்றுக் கொள்ளும் ஆர்வம் உள்ளவர்கள் நிச்சயம் கேட்பார்கள்.

கே: அவ்வாறு கேட்டு, நன்றாகக் கற்றுக்கொண்டு பயனடைந்தவர்கள் உண்டா? நிகழ்ச்சிக்கு இருக்கும் வரவேற்பு என்ன?

ப: பாட்டுக் கற்றுக் கொள்ள அதிகம் வசதியில்லாத சின்ன ஊர்களிலிருந்து பல இசைப் பிரியர்கள் எங்களுக்குக் கடிதம் எழுதுகிறார்கள். இது பயனுள்ள நிகழ்ச்சி என்றும், சில குறிப்பிட்ட பாடல்கள் கற்றுத்தர வேண்டும் என்றும் கேட்கிறார்கள். பெரிய பாட்டாக இருந்தால் நேரமின்மை காரணமாகச் சொல்லித் தர இயலாமல் போகிறது... சமீபத்தில் ஹைதராபாத் போயிருந்த போது, மூன்று வருடங்களுக்கு முன்பு நான் ரேடியோவில் பயிற்றுவித்த 'ஸ்ரீ மாத்ரு பூதம்' என்ற கீர்த்தனையைக் கற்றுக் கொண்டதாகக் கூறிய ஒரு பெண்மணி அதைப் பாடியும் காட்டினார். ஓரளவுக்கு நன்றாகவே இருந்தது... விஜயவாடா வானொலியில் வோலெட்டி வெங்கடேஸ்வருலு அவர்கள் ஒரு முறை 'ஸரியவ்வரம்மா' என்ற பைரவி ராகக் கீர்த்தனையைப் பயிற்றுவித்தார். அதைக் கேட்டு நானே கற்றுக் கொண்டிருக்கிறேன்!

கே: ஸ்வரப்படுத்திக் கீர்த்தனை வடிவத்தைச் சொல்லிக் கொடுத்து விடுகிறோம். அதை டேப் செய்து, போட்டுக் கேட்டுக், கற்றுக் கொள்ளலாம் என்கிறீர்கள். சங்கீதம் என்பது வெறும் சாகித்யமும் அதற்குரிய ஸ்வரஸ்தானமும்தானா? ராகத்தின் ஜீவனையும், நெளிவு சுளிவுகளையும் எப்படிப் புகட்டுவீர்கள்? அவையில்லாமல் பாடுவதில் என்ன பயன்?

ப: நான் முன்னமே சொன்னது போல், ஏற்கெனவே பாடத் தெரிந்தவர்கள்தான் இந்த நிகழ்ச்சி மூலம் கற்றுக் கொள்ள முடியும். குறைந்தபட்சம் தான் சரியாகப் பாடவில்லை, இந்த இடத்தில் தவறு வருகிறது என்பதை உணரும் பாடகர்தான் இந்நிகழ்ச்சி மூலம் பயன் பெற முடியும். அத்தகையவருக்கு ராகத்தின் ஸ்வரூபமும் ஜீவனும் ஏற்கெனவே பரிச்சயமாக இருக்கும். அவருக்குப் புதிதாக ஒரு பாட்டு கற்றுக் கொண்ட திருப்தி கிடைக்கும். இந்த நிகழ்ச்சியின் மூலம் எல்லோரும் கற்றுக் கொண்டு கச்சேரி செய்யும் நிலைக்கு உயர வேண்டும் என்பது நோக்கம் இல்லை. கர்நாடக சங்கீதம் பயிலும் ஆர்வம் இருந்தும் வசதி இல்லாதவர்களுக்குப் பேருதவி. அவர்களின் கலைத் தாகத்தைத் தணிப்பது தான் முக்கிய நோக்கம். இதை ஞாபகம் வைத்துக் கொண்டால் நிகழ்ச்சியின் உபயோகம் புரியும்.

சந்திப்பு: **சிஷ்யா.**

படம்: **யோகா.**

அடுத்த இதழில்...

●● **தங்கவயல் தமிழர்களின் கண்ணீர்க் கதை!**



●● **"ஒரேயொரு தொழிற்சாலையையும் மூடிவிட்டார்களே..."**

— வருத்தப்படுகிறார் தி. மு. க. எம்.எல்.ஏ!



"மாதங்களில்



மார்கழி நான்.

பகவான் கூறுகிறார்:

சூரியோதயத்துக்குச் சற்று முன்புள்ள நேரம் பிரம்ம முகூர்த்தம் எனப்படுகிறது. ஆத்ம சாதனத்துக்கு அது சிறந்த வேளையாகும். மனிதர்களுடைய ஒரு வருஷம் தேவர்களுக்கு ஒரு நாள் ஆகும். தை மாதமாகிய உத்த ராய புண்ணிய காலம் அவர்களுக்கு சூரியோதயம். அதிலிருந்து உத்தராயணம் ஆறு மாதம் அவர்களுக்கு பகல். ஆடியிலிருந்து மார்கழி வரையில் தக்ஷிணாயணம் அவர்களுக்கு இரவு. அதில் மார்கழி மாதம் விடியற் காலம் தேவர்களது நாளில் பிரம்ம முகூர்த்தமாகிறது. அப்பொழுது செய்யும் தேவாராதனை, வந்தனை, வழி பாடு முதலியன மனதை நன்கு பண்படுத்த வல்லவை களாம். இங்ஙனம் மார்கழி மாதம் புலனடக்கம், கடவுள் வழிபாடு ஆகியவைகளோடு முழுதும் இணைக்கப்பட் டிருக்கிறபடியால் மாதங்களுள் தாம் மார்கழி மாதம் என்கிறார் பகவான்.

ஆடிய ஆட்டம் என்ன?

—நம்பி—

"என் பெண்ணோட பரதநாட்டிய அரங்கேற்றம் நடக்கிறது. அவசியம் வரணும்!" என்று சாமண்ணா அழைப்பிதழைக் கொடுத்த போது மனத் திரையில் அவர் பெண் புஷ்பலதாவின் ஆட்டம் அரங்கேற, காதில் சலங்கைக்குப் பதில் சம்மட்டி ஒலித்தது!

பின்னே என்ன சுவாமி! புஷ்பலதா என்று பெயர்தான். பெயருக்கும் உருவத்துக்கும் இருந்த வித்தியாசம் பரதநாட்டியத்துக்கும் கதக்குக்கும் இடையே உள்ள வேறுபாட்டை விட அதிகம்!

சாமண்ணாவைச் சொல்லிக் குற்றமில்லை. அவர், மாமி ஆட்டுவித்தபடி ஆட, அவர் மகள் நட்டுவனார் ஆட்டுவித்தபடி ஆட ஆரம்பித்து ஒரு வருடம் ஆகியிருக்கும்.



'அதற்குள் அரங்கேற்றத்துக்கு என்ன அவசரம்?' என்று கேட்டுப் பலனில்லை. பாவம் சாமண்ணா, உடைந்து போய் விடுவார். அந்த ஆத்மாவைக் குளிர்விக்க அரங்கேற்றத்துக்குப் போனேன்.

அரங்கேற்றம் மாதிரியே தெரியவில்லை! அற்புதமாக ஆடினாள் உம் பெண்!' — சாமண்ணாவிடம் சிலர் 'ஐஸ்' வைத்தார்கள். 'நல்ல எதிர்காலம் இருக்கிறது' என்று சிலர் ஆசீர்வாதம் செய்தார்கள். 'எதிர்காலமா? எதிர்ப்புக் காலமா?' என்று குதர்க்கமாகக் கேட்ட என் மனச் சாட்சியைத் தலையில் குட்டி விட்டு நானும் என் பங்குக்குச் சாமண்ணாவைக் குளிர் வித்தேன்.

ஒரு வாரம் கழித்துச் சாமண்ணாவை மார்க்கெட்டில் பார்த்தேன். ஒரு கையில் பை நிறைய சாமான்கள். மறு கையில் நாலரை அடி நீளப் புடலங்காய்! சாமர்த்தியமாகச் சகதியைத் தவிர்த்துத் தாவி வந்தார் மனுஷர்.

"உம்ம பெண்ணை விட நீர் அற்புதமாக ஆடுகிறீர். இது என்ன புடலங்காய் மூர்த்தி ரையா?" என்றேன்.

தமாஷை ரசிக்கக்கூடிய நிலையில் அவர் இல்லை.

என்னை ஓர் ஓரமாக இழுத்துக்கொண்டு போய், அரங்கேற்றத்துக்கு ஆன செலவை ஐட்டம் ஐட்டமாகச் சொல்லி, ஒவ்வொரு ஐட்டத்துக்கும் ஒரு பெருமூச்சு விட்டார். மீதி வாழ்நாளைக் கழிக்க இவர் மூச்சுக்கு எங்கே போவார் என்ற பயத்தில் "எல்லாம் எதிர்பார்த்த கதைதானே சுவாமி. அரங்கேற்றம் ஆகி விட்டது. இனி அவள் அதிர்ஷ்டம் போல் சான்ஸ் கிடைக்கும்" என்று ஆறுதல் சொல்லி விட்டுக் கிளம்பினேன்.

அதிர்ஷ்டம் இவ்வளவு சீக்கிரம் அடிக்கும் என்று நான் துளியும் எதிர்பார்க்கவில்லை! அடுத்த மாதமே சாமண்ணா இன்னொரு அழைப்பிதழுடன் வந்து நின்றார்!

"என்னய்யா இது!"

"பெண் ரொம்ப ஆசைப்படுகிறாள். நானே பக்கவாத்தியம், நட்டுவாங்கம் எல்லாத்துக்கும் ஏற்பாடு பண்ணி விட்டேன்..."

"ஹால் வாடகை...?"

"அது தனியே கொடுத்து விட்டேன்!"

'அடப் பாவி மனுஷா!' என்பதா 'அப்பாவி மனுஷா!' என்பதா என்று யோசித்துக் கொண்டிருந்தபோதே சாமண்ணா ஆட்டோவில் ஓடி விட்டார்.

இரண்டாவது கச்சேரியில் கொஞ்சம்

முன்னேற்றம் இருக்கும் என்று மனசைத் தேற்றிக்கொண்டு புஷ்பலதாவின் ஆட்டத்தைப் பார்க்கச் சென்றேன். அலாரிப்பிலிருந்து தில்லானாவரை இம்மி மாறாமல் அதே ஐட்டங்கள்; முதல் நிகழ்ச்சியில் ஏற்பட்ட அதே தப்புக்களைக் கூட புஷ்பலதா மறக்காமல் சேர்த்திருந்தாள்!

சாமண்ணாவின் கண்ணில் படாமல் கிளம்ப முயன்ற என்னை ஓடி வந்து பிடித்துக் கொண்டார் மனுஷர். அவருடன் வந்தவர் "அப்போ பதினைஞ்சாம் தேதி பணத்தோட வந்துடுங்கோ சாமண்ணா," என்றபடி வெளியேற,

"இவரிடம் நீர் கடன் வாங்கியிருக்கிரா?" என்று கவலையுடன் நான் சாமண்ணாவைக் கேட்டேன்".

"கடன், வாங்கல்லைங்காணும்! கடன் பட்டிருக்கேன்! அவர்தான் பரமானந்த சபா செக்ரடரி. புஷ்பாவுக்கு அடுத்த மாசமே ஒரு சான்ஸ் தரேன்னு சொல்லியிருக்கார்..."

"அதுக்கு அட்வான்ஸ் டொனேஷனா? உம் ஹூம்.. சாமண்ணா! நீர் பிழைக்க சான்ஸே இல்லை" என்று வாய் வரை வந்த வார்த்தையை விழுங்கி விட்டு விடைபெற்றேன். என்ன செய்வது, கலைஞருக்குப் பணம் கொடுத்த காலம் போய், கலைஞர் பணம் கொடுத்து அரங்கேறும் காலம் வந்து விட்டதே!

பரமானந்த சபா நிகழ்ச்சியின் இடைவேளையில் சாமண்ணா என்னைத் தனியாக அழைத்தார். சபாவுக்கு இரண்டாயிரம் ரூபாய் கொடுத்தது போகப் பெண்ணின் குருவுக்கும் இரண்டாயிரம் ரூபாய் கொடுக்க நேர்ந்ததைச் சொல்லிக் கேவாத குறையாக அழுதார்.

"இரண்டாயிரமா? குருவுக்கா?" என்றேன்.

"ஆமாம்! போன தடவை புஷ்பா நிகழ்ச்சியின் போது அவர் ஊரில் இல்லை. அதனால் இந்த முறை அதற்கும் சேர்த்து வாங்கி விட்டார்!" என்றார் சாமண்ணா.

எதிர்காலத்தில் நட்டுவனார் அரங்கிலே தாளம் போட, வீட்டிலே சாமண்ணா வேறு காரியத்துக்காகத் தாளம் போட்டுக் கொண்டிருப்பாரோ என்ற எண்ணம் மனத்தில் எழ, அவசரமாகக் கிளம்பினேன்.

இதற்குப் பிறகு, சில மாதங்களுக்குச் சாமண்ணாவைக் கண்ணிலேயே காணவில்லை. 'நல்ல வேளை! பெண்ணின் பரத நாட்டிய ஆசை அடங்கி விட்டது போலிருக்கிறது' என்று ஆறுதலடைந்த போது, ஒரு ஞாயிற்றுக் கிழமை காலை கதவைத் தட்டினார் அவர்.



'நன்றாகத்தான் பரதநாட்டியப் பைத்தியம் பிடித்து 'ஆட்டுகிறது மனிதரை' என்று எண்ணியபடி கதவைத் திறந்த போது, அதிர்ச்சியுடன் கத்தி விட்டேன்.

"உமக்கு என்ன ஆயிற்று சாமண்ணா?"

"என்ன! தலை கொஞ்சம் பரட்டையாக இருக்கு. ஷர்ட் கொஞ்சம் பழசு. அவ்வளவு தானே! சரி... சுகஜீவானந்தா சபாவில் பெண்ணுக்குச் சான்ஸ் தர்றேன் என்கிறார்கள். உம்ம கம்பெனியிலிருந்து சபா சுவினியருக்கு ஆயிரம் ரூபாய்க்கு ஒரு விளம்பரம் வாங்கிக் கொடும்!" என்றார்.

"ஆடப் போவது உங்க பெண். அதற்கு எங்கள் கம்பெனி ஆயிரம் ரூபாய் அழ வேண்டுமா?" என்று திருப்பிக் கேட்டால், கம்பெனி நிர்வாகம் அழுவதற்கு முன்னால் சாமண்ணா அழுது விடுவார் போலிருந்தது.

"என்றைக்கு வேணும்?" என்று கேட்டு வைத்தேன்.

"எத்தனை சீக்கிரம் கிடைக்கிறதோ, அத்தனை நல்லது" என்றவர், குரலைத் தாழ்த்திக் கேட்டார்.

"நல்ல பன்னீர்ப் புகையிலை எங்கப்பா கிடைக்கும்?"

"போய் சாமண்ணா! இந்த வம்பெல்லாம் உமக்கெதற்கு?" என்றேன் சற்றுக் கோபமாக.

"எனக்கில்லைங்காணும். விமர்சகர் கே.

பி.டி.க்குப் பன்னீர்ப் புகையிலை ரொம்பப் பிடிக்குமாம். அவருக்கு இன்விடேஷன் கொடுக்கும்போது வெற்றிலை சீவல், கவருடன் ஒரு பொட்டலம் பன்னீர்ப் புகையிலையும் வைக்கலாமில்லையா...?'' என்று நெளிந்தார் சாமண்ணா.

'கவரில் என்ன வைப்பீர்?' என்று கேட்கும் தப்பை நான் செய்யவில்லை. சாமண்ணா இருந்த ஸ்திதியில் என்னிடமே கடன் கேட்பார் என்று தோன்றியது.

சீசுதீவானந்தா சபா சூவினியருக்கு விளம்பரம் வாங்கிக் கொடுத்தால் எனக்கு ஒரு ஓ.ஸி. டிக்கெட் கிடைத்தது. இவ்வளவு மாதங்களாக ஆடுகிறாளே; புஷ்பலதா நிச்சயம் உடம்பு இளைத்து; ஆட்டத்தை அபிவிருத்தி செய்திருப்பாள் என்று நம்பிக்கையுடன் போனேன்.

ஆட்டத்தில் மாற்றம் இல்லையென்றாலும் அணிந்திருந்த உடையில் இருந்தது. அவசியத்தால் ஏற்பட்ட மாற்றம் — புஷ்பலதா ஒரு சுற்றுப் பருத்திருந்தாள்!

புகையிலையைக் குதப்பியபடி உட்கார்ந்திருந்த கே.பி.டி.க்கு அருகில் யார் அது...? சாமண்ணா'ர்வா? அவரேதான்! மனுஷர் அடையாளம் தெரியாமல் இளைத்திருந்தார்!

* தமிழக விஜயம்



நீங்கள் கேட்டவை — தராசு

தமிழ்நாட்டில் சட்ட ஒழுங்கு சீர்கெட்டுள்ளதா?

* ஆர். ஜெஸ்மின் ரமேஷ், கம்பம்.

? 71 எம். எல். ஏக்களுக்கு மந்திரி பதவி அளித்து ஆட்சியைத் தக்க வைத்துக் கொண்ட லல்லு பிரசாத் யாதவ்வின் சாதனை குறித்து?

! பணத்தாசைக்கு உள்ளாகி, கோஷ்டி சேர்த்துக் கொண்டு, கட்சி மாறும் அவலத்தைத் தடுக்கப் பதவி ஆசைக்குத் தீனி போடப்பட்டுள்ளது. இத்தகைய அபத்தங்களைத் தவிர்க்க, வேறு பல நாடுகளில் உள்ளது போல் மத்திய, மாநில மந்திரி சபையின் அளவுக்கு உச்சவரம்பு விதித்து, சட்டமியற்றலாம். கட்சித் தாவல் தடைச் சட்டத்தையும் திருத்தி அமைக்கலாம். ஆனால் ஒன்று. ஆட்சி நடத்துவதிலும் கட்சி நடத்துவதிலும் மெய்யான ஜனநாயக மரபுகள் கடைப்பிடிக்கப்பட்டால் இத்தகைய சட்டங்களுக்கு அவசியம் இராது.

* மு. வெங்கடேசன், மாதவரம்.

? அ. தி. மு. க. ஆட்சியில் மதுக்கடைகளை எதிர்க்காதவர்கள், இப்போது தி. மு. க. ஆட்சியில் எதிர்ப்பது ஏன்?

! அ. தி. மு. க. தோழமைக் கட்சியாகவும் தி. மு. க. எதிர்ப்புக் கட்சியாகவும் விளங்குவதால்தான். அ. தி. மு. க. சாராயக் கடைகளைச் சீக்கிரமே திரும்பவும் மூடி விட்டது என்றும் ஒயின் ஷாப்களை மட்டுமே திறந்து வைத்திருந்தது என்றும் தி. மு. க. போல் மலிவு விலை மது விற்பனையை ஊக்குவிக்கவில்லை என்றும் காங்கிரஸ்காரர்கள் கூறக் கூடிய காரணங்கள் வலுவற்றவையே.

* பாக்தாத், பஷீர், சென்னை — 8.

? 'பாகிஸ்தானில் மசூதிகள் இடிக்கப்பட்டுச் சாலைகள் அமைக்கப்படுகின்றன; ஆனால் இந்தியாவில் மட்டும் ராமர் கோவில் கட்டத் தடை விதிப்பது ஏன்?' என்று அத்வானி கேட்கிறாரே?

! பாகிஸ்தானில் நடப்பது இஸ்லாமிய ராஜ்யம். இந்தியாவில் நடப்பது மதச் சார்பற்ற அரசு. நேற்று வரை அங்கு நடந்தது ராணுவ ஆட்சி; இங்கு நடப்பது ஜனநாயகம். அங்கு மசூதி இடிக்கப்பட்டிருக்கலாம்; ஆனால் அந்த இடத்தில் சாலை போடப்பட்டிருக்கலாமேயொழிய ஆலயம் நிறுவியிருக்க முடியாது. இங்கே ஆலயம் அமைப்பதை யாரும் தடுக்கவில்லை. மசூதியைப் பெயர்த்து விட்டு அமைக்க வேண்டுமா என்பதுதான் கேள்வி. அத்வானிக்கு இதெல்லாம் தெரியாதது அல்ல. என்ன செய்வது, ஒரு நிலையை எடுத்துக் கொண்ட பிறகு அதற்காக வாதாட வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு அவர் உள்ளாகியிருக்கிறார்.

* சி. சந்திரசேகரன், வேலூர்.

? நகைச்சுவை இலகம் ராமச்சந்திரன் படங்களில் தங்களைக் கவர்ந்தவை?

! எனக்குத் தெரிந்த அளவில் டி. ஆர். ராமச்சந்திரன்தான் முதல் ஹீரோ காமெடியன். சபாபதியில் கவர்ந்தார். வாழ்க்கையில் மறக்க முடியாதவரானார். 'உன் கண் உன்னை ஏமாற்றினால் என் மேல் கோபம் உண்டாவதேன்' என்ற பாட்டு அன்று சக்கைப் போடு போட்டது ஒருபுறமிருக்க, அதன் தத்துவார்த்தமான உட்பொருள் என்றைக்கும் ஏற்புடையதாகும்.

* ரத்னபாலன், திருச்சி — 14.

? பி. எச். இ. எல். டவுன்ஷிப் ஆதி பராசக்தி கோவில் குடமுழுக்கு விழாவில் மாவட்ட கலெக்டரும் பி. எச். இ. எல். நிர்வாக இயக்குனரும் பங்காரு அடிகளார் காலில் விழுந்தது சரிதானா?

! கலெக்டர் என்ற முறையிலும் நிர்வாக இயக்குனர் என்ற முறையிலும் காலில் விழக் கூடாதுதான். ஆனால் அவர்களும் மனிதர்களே. பங்காரு அடிகளின் பக்தர்கள் என்ற முறையில் காலில் விழுந்து வணங்குவதில்

* ஏர்பஸ் அமைச்சரவை



* ஹீரோ காமெடியன்





* பேரதிர்ச்சி

* அறியாதது அல்ல.



தவறில்லை. மேலும் இது கூட முழுக்கு விழா. அதிகாரபூர்வமான வேறு விழாவாக இருந்தால் ஆட்சேபிக்க இடமுண்டு.

*** பி. எஸ். கோவிந்தராசன், திருச்சி.**

? பக்திப்படங்களின் மவுசு குறைந்து வருகிறதே?

! இந்த சபரிமலை சீசனில் மூன்று ஐயப்பன் படங்கள் ரிலீஸ் ஆகின்றன என்னும் போது உங்கள் கருத்தை எப்படி ஏற்க முடியும்!

*** சி. பி. கரன், விருத்தாசலம்.**

? தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு உண்மையில் சீர்கெட்டுள்ளதா?

! சீர்ப்படுத்த முடியாத அளவில் அல்ல. என்றாலும் பிற மாநிலங்களை எண்ணிப் பார்த்து நம்மை நாமே தட்டிக் கொடுத்துக் கொண்டு அலட்சியமாக இருந்தால் நிலைமை வெகு சீக்கிரம் கட்டுக்கடங்காமல் போகும் வாய்ப்பும் உள்ளது.

*** ஏ. ஜி. கே. சுந்தர், கோவை.**

? சமீபத்தில் தங்களை மனம் கலங்க வைத்த சம்பவம் ஏதாவது உண்டா?

! காலை எழுந்து நாளிதழைப் புரட்டினால் மனம் கலங்க வைக்கும் சம்பவங்களைத் தவிர வேறு என்ன இருக்கிறது? என்றாலும் ஆட்சிப் பொறுப்பில் இருக்கும் ஒரிஸ்ஸா முதல்வரே லஞ்சத்தை ஒழித்துக் கட்ட இளைஞர்களை வன்முறையில் இறங்குமாறு தூண்டிப் பேசியது பேரதிர்ச்சி!

*** மா. பழனிசாமி, கோவை.***

? பிரதமராக இருந்தவர் ஒரு மாநில முதல்வர் வீட்டு முன் உண்ணாவிரதம் இருப்பதும் ஆர்ப்பாட்டம் நடத்துவதும் அவசியம் தானா?

! அந்த முதல்வரின் கட்சி ஆட்கள் நடந்து கொண்ட அநாகரிகமான முறைக்கு அவர் வேறு எப்படி எதிர்ப்புத் தெரிவித்துக் கொள்ள முடியும்? செல்லுபடியாகாத உத்தரவுகளைப் பிறப்பிக்கச் சொல்கிறீரா? அல்லது அநாகரிகத்துக்குப் பதில் அநாகரிகத்தைக் காண்பிக்கச் சொல்கிறீரா?

*** எஸ். யோகலிங்கம், சென்னை — 82.**

? விசுவ ஹிந்து பரிஷத் அயோத்தியில் நடத்திய சத்தியாக்கிரகம் குறித்து?

! நல்லவேளை, குண்டு வெடிப்பு முயற்சி பலிதமாகவில்லை. ராமர்தான் காப்பாற்றினார்.

*** ஏ. ஜஹ்பர் காதர், சென்னை.**

? முன்னாள் பிரதமர் வி. பி. சிங்கின் தமிழக விஜயம் குறித்து?

! 35 மணி நேரம்; 10 மாவட்டங்கள்; 16 பொதுக் கூட்டங்கள்; தவிர 850 கி. மீ. பயணத்தில் எண்ணற்ற சாலையோரக் கூட்டங்கள். முன் பக்கத்தில் டிரைவர் பக்கத்தில் சிங் அமர்ந்திருந்தார். தொள தொள ஜிப்பா, குர்த்தா அணிந்திருந்தார். கூட்டம் நடக்கும் இடத்தில் எந்தத் தலைவர் சிலையாவது இருந்தால், அவரைக் குறிப்பிட்டுப் பாதம் பணிந்து ஆரம்பிப்பது சிங் பாணி. ''ராமரை வோட்டுப் பெட்டிக்குள் திணிக்க முயல்கிறார் அத்வானி; ராமரை மீட்போம்'' என்பது போல் மக்களுக்குப் புரியும் பாஷையைப் பயன்படுத்தினார். ஆனால் மாறனின் மொழிபெயர்ப்பில் ஜீவனில்லை. பல இடங்களுக்குப் பல மணி நேரம் தாமதமாகப் போன போதிலும் மக்கள் பொறுமையோடு காத்திருந்தார்கள். மதுரை கூட்டம் மறக்க முடியாத பெரும் திரள். தமிழகப் பத்திரிகைகள் சில, ''கூட்டமே இல்லை; தி. மு. க. தொண்டர்கள் சோர்வு'' என்று எழுதியது, விஷம் கலந்த விஷமம். ''எங்கள் கண்ணொளி திட்டத்தின் கீழ் அவர்கள் பார்வை பெற்றுக் கண்ணாடி அணிந்து கொள்ளட்டும்'' என்ற கருணாநிதியின் கோபம் நியாயம். சில இடங்களில் மூன்றாம் தர அரசியல்வாதி போல் வி. பி. சிங் பேசினார்: (உம்) ''பிற்படுத்தப்பட்டவர்களுக்கு மத்திய அரசில் வேலை தரக்கூடாது என்று ராஜீவ் சொல்கிறார்.'' வி. பி. சிங் பின்னோடு சென்ற 50 — 60 வாகனங்கள் பெட்ரோல் குடிப்பதைத் தவிர்த்திருக்கலாம்.

கார்ட்டூன் நன்றி: வீக்லி

*** ரூ. 20 பரிசு பெறுபவர்:**

மா. பழனிச்சாமி,
28, ஸ்டேட் பாங்க் ரோடு,
கோவை — 18.

சிகரங்களை நோக்கி

கொதிக்கிறதே!
கண்களுக்குள் யார் உலை வைத்தது?

தெறிக்கிறதே!
நெற்றியில் யார் பட்டறை போட்டது?

தகிக்கிறதே!
என் உடம்பைக் கொளுத்தி யார் காய்வது?

என் புலன்கள் பூமியோடு கட்டப்பட்டு விட்டனவா?

பிறகு ஏன் அசைக்க முடியவில்லை?

இந்தப் பூமியென்னும் சிலுவையில் என்னை ஆணிகொண்டு அறைந்தது யார்?

அவன் இமைதிறக்க முயன்றான்.

ஆனால் அதுவோ —
ஒட்டிய தபால்தலையைக் கிழியாமல் கிழித்தெடுப்பது மாதிரி சிரமமாயிருந்தது.

வேண்டாம்!
விழியோடு சேர்ந்த இமைகளை வெடி வைத்துத் தகர்க்க வேண்டாம்.

•

அறுந்துபோன நினைவுகளை முயன்று முயன்று
முடிச்சுப் போட்டான்.

நான் கடைசியாக எப்போது உயிரோடிருந்தேன்?

அந்தப் பழைய இடி காதுகளுக்குள் மீண்டும் ஒலிபரப்பானது.

மூங்கில் வீடு அவன் மீது சடசடவென்று சரிந்தது தெரிந்தது.

ஒரு குறிப்பிட்ட எல்லைக்குமேல் ஓட முடியாமல்
ஒரே இடத்தையே சுற்றிச் சுற்றி வரும் போலீஸ்நாய்
மாதிரி, அதற்குமேல் ஓடுவதற்குப் பிரதேசமில்லாமல்
நினைவுக்குதிரை நின்றுவிட்டது.

•

இப்போதும் நான் அந்த மூங்கில் கழிகளுக்குக்
கீழேதான் கிடக்கிறேனா?

மூங்கிலுக்கு மேலே மனிதன் கிடந்தாலும்
மனிதனுக்கு மேலே மூங்கில் கிடந்தாலும்
அது சந்தோஷமான சம்பவம் இல்லையே.

ஒன்று நிச்சயம்.

என் உயிரின் ஒரு பகுதி இன்னும் இருக்கிறது.

இன்னும் சுதந்திரமாய்ச் சுவாசிக்க முடிகிறதே!

•

அவன் காதுகளில் விதவிதமான ஒலிகள் விழுந்தன.

பறந்துபோகும் பறவைகள் அவன் காதுகளை உரசிப் போவதாய் ஓர் ஒலி.

ஒலிகளை வைத்து உருவங்களைக் கற்பனை செய்ய முடியாத சில ஒலிகள்.

தொட்டுவிடும் தூரத்தில் அந்த ஒலிகள் அவனைச்
சுற்றிச் சுற்றி வந்தன.

அந்த சப்த நிலாக்கள் தோன்றித் தோன்றித் தேய்ந்தன; தேய்ந்து தேய்ந்து வளர்ந்தன.

இமைகளைத் திறப்பதற்கு அவன் தவணை முறையில் முயற்சி செய்தான்.

விழிகளுக்கு விடுதலை.

முதலில் தன்னைத்தானே பார்த்துக் கொண்டான்.

தலையில் கட்டுப்போட்டது யார்?

என்னை இந்தக் கட்டிலில் போட்டது யார்?

எனக்குக் கம்பளியைக் காவல் வைத்தது யார்?
புதுவீடு; புதுச்சூழல்.
ஜன்னல் வழியே வெளியே பார்த்தான்.

அது பகல்தான்; ஆனால் என்ன நேரம் என்று ஊகிக்க முடியவில்லை.

சூரியக் கடிகாரத்தை மேகம் மறைத்திருந்தது.

ஒலிகள்; அதே ஒலிகள்.

வைரமுத்து

கழுத்தைத் திருப்ப முடியவில்லை; கண்களைத் திருப்பினான்.

இது என்ன...?

என்னை ஒரு மிருகக் காட்சிச் சாலைக்குக் கொண்டுவந்தது யார்?

என்னையும் அந்தப் பட்டியலில் எழுதி விட்டார்களா?

ஒரு மழையில் என் மனிதத்தோல் கரைந்து நான் மிருகமாய்க் குறைந்துவிட்டேனா?

அந்தக் கூடமெங்கும் கூண்டுகள்.

ஒரு கூண்டில் —

தரையில் விழுந்து உடைந்து சிதறிய வெண்ணிலாத் துண்டுகளாய் முயல்கள்; வெள்ளை முயல்கள்.

அவற்றின் அருகே —

தொலைந்துபோன வானத்தைக் கூண்டுக்குள் தேடி அலையும் பல்வகைப் பறவைகள்.

இன்னொரு வலைக்கூண்டில் —
இந்திய ஜனத்தொகையாய் அடர்த்தியான வௌவால்கள்.

அவன் முணுமுணுத்துக் கொண்டான்.

''உங்களுக்கும் எனக்கும் ஒரே ஒரு வித்தியாசம்தான் ஜீவராசிகளே!

நீங்கள் கூண்டுக்குள் இருந்தும் சுதந்திரமாய் இருக்கிறீர்கள்.

நான் சுதந்திரமாய் இருந்தும் கூண்டுக்குள் இருக்கிறேன்.''

•

வலித்தது.

அசைந்தால் —
காயங்களில் கண்ணீர் விழுந்தது மாதிரி எரிந்தது.

என்னை இந்தக் கதகதப்பான பரப்பில் வெது வெதுப்பாக வைத்தது யார்?

செலவில் எழுதப்பட்ட என் உயிரை வரவில் எழுதி வைத்தது யார்?

என் சவத்துணியைக் கிழித்து என் காயங்களுக்குப் பொன்னாடையாய்ப் போர்த்தது யார்?

அறிந்து கொள்ள அடையாளமில்லை.

'எல்பா' வில் நெப்போலியன் மாதிரி அவனால் தடவிப் பார்க்க முடிந்தது தனிமையை மட்டும்தான்.

மலர்கள் மீண்டும் மொட்டாவது மாதிரி இமைகள் விழிகளில் இறங்கிக் கொண்டன.

மீண்டும் உறக்கம் தன் ஆழங்களுக்கு அவனை இழுத்துச் சென்றது.

•


இது என்ன அனுபவம்?

கழுத்தில் மட்டும் மழைவிழுகிறதே!

சில்லென்ற நதி ஒன்று தேகமெங்கும் திக்விஜயம் செய்கிறதே!

மழை என்றால் வழிந்திருக்க வேண்டுமே!

கழுத்தில் விழுந்திருப்பது மழை அல்ல;



மலர்.
கண் திறந்தான்.

ஒரு நந்தவனம் அவன் தலைமாட்டில்
நின்று கொண்டு அவன் மீது
ஒரே ஒரு பூவைப் போட்டிருந்தது.

ஒவியா அவன் கழுத்தில் கைவைத்துச் சூடு பார்த்தாள்.

''பயப்பட வேண்டாம்! கங்காருவின் மடியிலிருக்கும் குட்டியைப் போல் நீங்கள் பத்திரமாகவே இருக்கிறீர்கள்.''

குமரியின் வயது கொண்ட அவள் உதடுகளில் தாய்மையின் வயது கொண்ட வார்த்தைகள்.

அவனால் பேசமுடியவில்லை.

நெகிழ்ந்து உடைந்துபோன இதயத்தின்
ஒரு துண்டு கண்களில் ஒரு துளியானது.

அந்தக் கண்ணீர்த் துளியோடு, எப்படி இங்கே வந்தேன் என்ற கேள்வியும் வழிந்தது.

''உங்கள் மூங்கில்வீடு நொறுங்கிக் கிடப்



பதாய் இன்று அதிகாலை தோட்டத் தொழிலாளிகள் ஓடிவந்து சொன்னார்கள்.

தோண்டிப் பார்த்தோம்; நீங்கள்.

கூரை விழுந்தாலும் சுவருக்குச் சேதமில்லை என்பது மாதிரி உங்கள் உடல் உடைந்தாலும் உயிருக்குச் சேதமில்லை.''

அவன் பார்வைகளால் தலைகோதி, புன்னகையால் மருந்திட்டாள்.

இப்போது அவன் உதடுகள் அசைந்து, பேசுவதற்கு ஒத்திகை பார்த்தன.

''என்னைப் பாதி மரணத்தில் படுக்கையில் கிடத்திவிட்டு எங்கே போய் வந்தாய் ஓவியா?''

அவள் உதட்டிலடித்த புன்னகை வெயில் போய்விட்டது.

சோகமேகம் அவள் முகம் மூடியது.

''நேற்றுப்பெய்த மழையில் இந்த மலையே ஊனமுற்றுவிட்டது திருஞானம்!

வெள்ளத்தின் அரிப்பில் மலையின் விலா எலும்புகள் வெளியே தெரிகின்றன.

இந்த மலையின் சுவாசப் பைகளிலும் தண்ணீர்.

மனிதர்கள், வீடுகளில்தான் கொள்ளையடிக்கிறார்கள்;
இந்த மழை வீடுகளையே கொள்ளையடித்துவிட்டது.

அங்கங்கே நிலச்சரிவு.

இங்கே மலை மக்கள் பலரைப் பூமியே கல்லறை தோண்டிப் புதைத்துவிட்டது.

பல வீடுகளுக்கு இங்கே எண்களே இல்லையே என்று நான் வருந்தியதுண்டு;

அய்யோ திருஞானம்! இன்று எண்கள் போட வீடுகளே இல்லையே!

நீங்கள் ரசித்துப் பார்க்கச் சொன்ன மழையே அவர்களைப் புசித்துப் பார்த்துவிட்டுப் போய்விட்டதே!

இப்போதாவது புரிகிறதா?

மழையில் நனையாதவர்கள் மட்டுமே மழையை ரசிக்க முடியும்!

தீயில் நின்றுகொண்டு தீபத்தை ரசிக்க முடியுமா?

ஜலதோஷம் கொண்டவனுக்கு வாசனை தெரியாது;
வயிற்றுப்பசி கொண்டவனுக்கு வாழ்க்கை கிடையாது.

புண்களோடு உங்களால் பூக்களைப் பற்றிப் பாட்டெழுத முடியுமா?

முதலில் புண்களுக்கு மருந்துபோடுங்கள்; பிறகு பூக்களைப் பாடுங்கள்.

தன் மார்பில் கலையை அணிந்து கொள்ளாத சமூகம் கௌரவமில்லாத சமூகம்தான்.

அதைவிட இழிந்த சமூகம் அதை அணிந்து கொள்ள மார்பே இல்லாத சமூகம்.

ஒரு முடிவுக்கு வாருங்கள்.

நமது முதல் தேவை —

மார்பா?

பதக்கமா?''

மழை நின்ற பிறகும் தாவரங்கள் சொட்டுச் சொட்டாய்ச் சொட்டுவது மாதிரி அவள் பேசிமுடித்த பிறகும்

அவள் வார்த்தைகள் அவன் நெஞ்சில் சொட்டுச் சொட்டாய்ச் சொட்டிக் கொண்டிருந்தன.

மாண்டு போனவர்களை மௌனத்தால் அஞ்சலித்தான்.

விட்டத்தில் மொய்த்த அவன் கண்கள் பூமிக்கு இறங்கவே இல்லை.

முதன் முதலாய் அவன் தன் எண்ணங்களின் எடைபார்த்தான்.

பிறகு கண்கள் மூடி உள் மனம் திறந்தான்.

''நினைத்துப் பார்க்கிறேன்; நீ சொன்னதை நினைத்துப் பார்க்கிறேன்'' என்று உதடுகளும் அறியாமல் உச்சரித்துக் கொண்டான்.

•

பறவைகள் படபடத்தன.

முயல்கள் கிறீச்சிட்டன.

வெள்ளெலிகள் கீச்சிட்டன.

''நீ பறவைகளின் சிநேகிதியா...? முயல்களின் தோழியா ஓவியா?''

''இல்லை! இவை என் தந்தையின் தோழர்கள்.''

''உன் தந்தையா...? எங்கே இருக்கிறார்?''

''இங்கேதான் இருக்கிறார்.''

''அவரை எனக்கு அறிமுகம் செய்வாயா?''

''முடியாது!''

''ஏன் முடியாது?''

''நான் அவரைப் பார்த்தே நான்கு மாதம் ஆயிற்று.''

— இன்னும் செல்வேன்.

இந்த வருஷம் என்ன ஸ்பெஷல்?



கண்ணில் விளக்கெண்ணெய் விட்டுக் கொண்டு தேடியாயிற்று! தமிழக முதல்வர் பெயர் ஓர் இசைவிழா விளம்பரத்தில் கூடத் தென்படவில்லை! அரசியல் சூழ் நிலை கலைத் துறையையும் பாதிக்கிறது பாருங்கள்!

கிருஷ்ண கான சபா நிகழ்ச்சிப் பட்டியலில் எப்போதும் இடம் பெறும் ஹரிதாஸ் கிரி சுவாமிகளின் பெயரும் 'மிஸ்ஸிங்'! தம் நிகழ்ச்சிக்கு அரங்க அமைப்பில் கவனம் செலுத்தவில்லை; 'சுவாமி'க்குத் தகுந்த மரியாதை காட்டப்படவில்லை என்ற குறையாம் அவருக்கு. காற்றுவாக்கில் காதில் விழுந்தது.

பாபநாசம்சிவன் நூற்றாண்டையொட்டி, இவ்வருட இசைவிழாவையே அவருக்கு அஞ்சலியாக அறிவித்துள்ளனர் கிருஷ்ண கான சபையில். பாடகர், நாட்டியக் கலைஞர் எல்லோரும் ஓரிரு சிவன் பாடல்களாவது தங்கள் நிகழ்ச்சியில் சேர்த்துக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.


இந்த சபாவில் மூன்று இந்துஸ்தானி இசை நிகழ்ச்சிகள் நடக்கப் போவது 'ஸ்பெஷல்' எனில், மல்லிகா சாராபாய் வழங்கும் சிதையின் புதல்விகள், நாட்டிய நாடகம் எல்லோரும் எதிர்பார்க்கும் புதிய ஐட்டம். சுசேதா சபேகர் இந்துஸ்தானி இசைக்குப் பரதநாட்டியம் செய்யப்போகி

* சுசேதா சபேகர்: இந்துஸ்தானி இசைக்கும் பரதம்!

* வாஸ்குடி:
அடுத்த ஆண்டு
க. பெ. கலைஞர்?



* அம்ஜத் அலி:
அகாடமி அரங்கில்...



* மல்லிகா சாராபாய்: 'சிதையின் புதல்விகள்'





• ஹைதராபாத் சகோதரர்கள்... (படம் நன்றி: சுருதி)

றார்! கனமான ஆராய்ச்சி அலசல்களும் உண்டு.

'அகாடமிக்கும் லால்குடிக்கும் இடையே ஏதோ கசமுசாவாமே' என்று கேட்பவர்களுக்கு இந்த வருஷம் ஸ்பெஷல் ஏமாற்றம். இவ்வாண்டு சதஸுக்குத் தலைமை தாங்கும் லால்குடி அடுத்த ஆண்டு கலாநிதி பெறும் கலைஞராக விளங்கவும் வலுவான வாய்ப்புக்கள் உண்டாம்.

அகாடமியின் மாலை நிகழ்ச்சிகளில் அம்ஜத் அலி கானின் சரோட் இசையும், எல். சங்கர் சகோதரர்கள் மூவர் வயலினும் (உமயாள்புரம் சிவராமனின் மிருதங்கத்துடன்) ரொம்ப நாளைக்குப் பிறகு இடம் பெறுகின்றன.

காலை நேர ஆராய்ச்சி அரங்கத்தில் ஏராளமான ஆராய்ச்சி டாக்டர்கள் வித விதமான சங்கீத ஆய்வுகளை வழங்க, மருத்துவ டாக்டரான எஸ். ராமசாமி கர்நாடக இசையில் குரல் பயிற்சி பற்றிப் பேசப் போகிறார்!

இசை ஆராய்ச்சியில் இந்துஸ்தானி பாணியையும் விட்டு வைக்கவில்லை இந்தியன் ஃபைன் ஆர்ட்ஸ் சொஸைட்டி! இந்துஸ்தானி இசையில் சாகித்யத்தின் முக்கியத்துவம் பற்றி பல்குனி மித்ரா இங்கே பேசப் போகிறார். இந்த சபாவில் விருது பெறும் சுவாமிமலை ராஜரத்தினம் தமது மாணவிகளைக் கொண்டு 'பக்தி வளர்த்த பாபநாசம் சிவன்' என்ற சிறப்பு நடன நிகழ்ச்சியை வழங்கவிருக்கிறார். விஷ்ணு சகஸ்ரநாமத்தைக் கீர்த்தனை வடிவில் ஸ்ரீ ராமசந்திர மூர்த்தி வழங்கப் போவது புதுமை என்றால் கிறிஸ்துமஸ் அன்று நடைபெறப் போகும் ஜேசுதாஸ் கச்சேரி எல்லோரும் எதிர்பார்க்கும் வழக்கமான விஷயம்.

தமிழிசைச் சங்கத்தில் சேஷகோபாலன் ஊத்துக்காடு வேங்கட சுப்பய்யர் கீர்த்தனைகளை மட்டும் கச்சேரியில் பாடுவார். குன்னக்குடி திருமுறை இசையை வயலினில் வழங்குவார். அவர் வயலின் தான் வார்த்தையாகப் பேசுமே!

தியாக பிரம்ம கான சபாவில் எம். எல். விக்கு அஞ்சலியாகத் திருப்பாவையை நடனமாக வழங்குகிறார் உமா ஆனந்த். கார்த்திக் ஃபைன் ஆர்ட்ஸில் 'சங்கீத சாம்ராட்' பெறுபவர் மாண்டலின் சீனிவாஸ் — இவ்வாண்டு விருது பெறும் 'ஜூனியர் most'. 'சீனியர் மோஸ்ட்' யார்? சி.எஸ். முருகபூபதி — இந்த மிருதங்க வித்வானுக்கு மைலாப்பூர் ஃபைன் ஆர்ட்ஸ் 'சங்கீத கலா நிபுண' பட்டம் வழங்குகிறது.

கடைசியாக ஒன்று: ஹைதராபாத் கலவரம் ஒருவிதமாக நாட்டையே உலுக்கிக் கொண்டிருக்க, ஹைதராபாத் சகோதரர்களின் கலை வரம் சென்னையை இன்னொரு விதமாக உலுக்கிக் கொண்டிருக்கிறது. இந்த சங்கீத சீசனில் இவர்கள் பாடாத கலை விழாவே கிடையாது!

— நமது நிருபர்.

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர்: வி. வைத்தியநாதன். ஆசிரியர்: கி. ராஜேந்திரன்.
முகவரி: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. போன்: நிர்வாகக் காரியாலயம்: 431543, 434157; 434190. ஆசிரியர் குழு அலுவலகம்: 434145.
ஆண்டுச் சந்தா — உள்நாடு: ரூ. 130/-; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 300/-; விமானத் தபால் ரூ. 700/-.
ஆறு மாதச் சந்தா — உள்நாடு: ரூ. 65/-; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 150/; விமானத் தபால் ரூ. 350/-.

நினைவிருக்கட்டும், ஊட்டச்சத்துகள் சமச்சீராக உள்ள உணவு இல்லாவிட்டால், உங்கள் குழந்தை எடை அதிகரிப்பதற்குத் தேவையான புரோட்டீனைப் பெறமுடியாது.

"ஆகவேதான் என் குழந்தைக்கு செரிலாக் தருகிறேன்."

உங்கள் டாக்டரைக் கேளுங்கள். அவர் இரண்டு உண்மைகளை உங்களுக்குத் தெரிவிப்பார். ஒன்று, குழந்தையின் தசை, திசு, ரத்தம் ஆகியவற்றைப்பேணி வளர்த்திட புரோட்டீன் உதவுகிறது. இரண்டு, சரியான புரோட்டீன்களைப் பெற, ஊட்டச்சத்துகள் சமச்சீராக உள்ள உணவு குழந்தைக்குத் தேவை. ஒவ்வொரு வேளையும் ஒவ்வொரு நாளும்.

வழக்கமான உணவுகள் மூலமாக இதைச் சமாளிப்பது பெரும்பாலான தாய்மார்களுக்கு எளிதல்ல.

இதற்குத் தீர்வு?

செரிலாக் காரணம். செரிலாக்கில் பால் மற்றும் கோதுமை உள்ளன. இவற்றில் புரோட்டீன் மிகுந்து இருக்கிறது. மேலும், செரிலாக்கில் கார்போஹைட்ரேட்கள், விட்டமின்கள், மினரல்கள், கொழுப்பு, இரும்பு மற்றும் கால்ஷியம் சத்துகள் சரியான விகிதத்தில் உள்ளன. நான்கு வயது முதல் குழந்தைக்கு வெறும் பால் உணவு மட்டும் போதாது. ஆகவே அப்போதிலிருந்து, கொடுக்கக்கூடியது, ஊட்டச்சத்துகள் சமச்சீராக உள்ள திட உணவு செரிலாக். இது மிகுந்த சுவை உள்ளதாக இருப்பதால், குழந்தைகள் மிகவும் விரும்புகிறார்கள்.


ஆகவே, ஊட்டச்சத்துகள் சமச்சீராக உள்ள செரிலாக்கின் அனைத்து அனுகூலங்களையும் உங்கள் குழந்தைக்கு அளியுங்கள். குழந்தைக்கு 6 மாதம் ஆனதும் விட்–ஆப்பிள், விட்–ஆரஞ்சு மற்றும் விட்–வெஜிடபிள் ஆகியவற்றின் கூடுதல் அனுகூலத்தையும் அளியுங்கள்.

பேக்கின் மீதுள்ள விதிமுறைகளைப் பின்பற்றுக.

இலவசம் செரிலாக் பேபி கேர் புத்தகம்
எழுதுங்கள்: செரிலாக், போஸ்ட் பேக் நம்பர் -21, புது தில்லி–110 029

நெஸ்லேயின் ஒரு தரமான தயாரிப்பு





உங்கள் குழந்தைக்கு அளியுங்கள் செரிலாக்.

Mudra D: NES: 0020 TAM



REGISTERED NO. M. 4392
Registered as Newspaper in Sri Lanka